விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 27 ஞாயிற்றுக்கிழமை (13.09.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 268

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall) விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303. கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-2124)

# ஐ.நா. விசாரணை அறிக்கை இலங்கைக்கு கால அவகாசம்

## பதிலளிக்குமா அரசாங்கம்!

(கொழும்பு) இலங்கையில் போரின் போது இடம்பெற்ற மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் நடத்திய விசாரணை அறிக்கை தொடர்பாக பதிலளிப்பதற்கு அரசாங்கத்துக்கு ஐந்து நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. விசாரணை அறிக்கை நேற்று முன்தினம் இரவு அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. இதனை வெளி விவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவுக்கு முக்கிய பதவி மைத்திரி - ரணில் இணக்கம்!



(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு தேசிய மட்டத்தில் முக்கிய பதவியொன்று வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு இணையான அதிகாரம் கொண்ட இந்தப் 15 ஆம் பக்கம் பார்க்க....

## லொறி-தனியார் பேருந்து விபத்து 35 பேர் காயமடைந்தனர்


### ஆவரங்காலில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)
பாரவூர்தியும் தனியார் பயணிகள் போக்குவரத்து பேருந்தும் விபத்துக்குள்ளானதில் 35 பேர் காயமடைந்துள்ளனர்.
இக் கோர விபத்து சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் ஆவரங்கால் பகுதியில் இடம் பெற்றுள்ளது. எனினும் இவ்விபத்தில தெய்வா 15 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச பொறிமுறைக்கு இந்தியாவின் ஆதரவு தேவை

### சம்பந்தன் வேண்டுகோள்



(கொழும்பு)
இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்கு 15 ஆம் பக்கம் பார்க்க....

## நீதிக்கான தேடல் அமெரிக்காவில்

(வாஷிங்டன்)
சனல் 4 தொலைக்காட்சி ஊடகவியலாளர் கெலம் மக்ரேயின் நீதிக்கான தேடல் ஆவணப்படம் எதிர் வரும் 15-ம் திகதி அமெரிகாவில் திரையிடப்படவுள்ளது. அமெரிக்காவின் வாஷிங்டன் பிராந்திய ஊடகவியலாளர் 15 ஆம் பக்கம் பார்க்க....

## இணக்கப்பாட்டை அரசாங்கமே ஆட்சி அமைத்து செயற்படுகிறது

### அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)
எதிர்க்கட்சித் தலைவரை நியமிப்பது தொடர்பில் சரியான நேரத்தில் சரியான முறையில் தீர்மானங்களை எடுத்திருந்தால் தற்போதைய நிலைமையை விட சிறப்பான நிலைமையை ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம் எனத்தெரிவித்துள்ள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தேசிய அரசாங்கம் என்பதை விட இணக்கப்பாட்டு அரசு என்பதே பொருத்தமானதாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் அமைச்சராக பதவியேற்றுள்ள அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த வியாழக்கிழமை அமைச்சில் கடமைகளை பொறுப 15 ஆம் பக்கம் பார்க்க....

After A/L
HND in
CIVIL ENGINEERING
Leading to BSc / BEng(Hons)
@
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
HOTLINE 0777 102 131
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910 (C-2112)

## ஐ.எஸ். அமைப்புக்கு இலங்கையிலிருந்து ஆயுதம்

### பொய்யான தகவல் என அறிவிப்பு

(கொழும்பு)
உலகின் மிகக் கொடூரமான தீவிரவாத அமைப்பான ஐ.எஸ். அமைப்புக்கு இலங்கை ஆயுதம் வழங்கியதாக கடந்த காலங்களில் வெளியான தகவல் பொய்யானது என்று தெரியவந்துள்ளது.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்தில் இலங்கையிலிருந்து போகோ ஹரம் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு ஆயுத விநியோகம் மேற்கொள்ளப்பட்டதாக பல்வேறு தகவல்கள் வெளியாகியிருந்தன.

குறித்த பொய்ப் பிரச்சாரம் காரணமாக இலங்கையின் நற்பெயருக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

எனினும் இது தொடர்பான தகவல்கள் அடிப்படை ஆதாரமற்றவை என்பதாக இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிசாரின் விசாரணைகளில் 15 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை அகதிகள் ஐவர் உண்ணாவிரதம்

(சென்னை)
இலங்கை அகதிகள் ஐவர் தமிழகத்தில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

தமிழகத்தின் திருச்சி சிறப்பு அகதி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் ஐந்து பேரே இவ்வாறு காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

உரிய ஆவணங்கள் இன்றி இந்தியாவுக்குள் பிரவேசித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட் 15 ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டாஞ்சேனையில் பெண் சுட்டுக்கொலை



(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை, ஜம்பட்டா வீதியில் உள்ள செல்வி வத்தையில் பெண் ஒருவர் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேரே பெண்ணை சுட்ட பின்னர் தப்பிச் சென்றுள்ளனர்.

கடும் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் பின்னர் உயிரிழந்தார்.

சம்பவத்தின் பின்னர் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(எ-11)

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் உணவு விற்பனையில் முன்னணியில் இருக்கும் நிறுவனம் ஒன்றுக்கு தகைமை வாய்ந்த சமையல் வல்லுனர் ஒருவர் உடன் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :-
077 329 4341
021 205 7456

(C-2136)

## சிறுநீரகம் தேவை

24 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ சிறுநீரகம் அவசரமாகத் தேவை. 28 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்வர்களாக இருத்தல் வேண்டும். நன்கொடையாளர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : 0777004347, 0776329349

## அக்ஷயா
### அழகுக்கலை பயிற்சியகம்

- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன. சாறி பிளவுஸ் (6) பஞ்சாபி (5)
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கறைகள், கரும்புள்ளிகள், நாட்பட்ட கறுப்பு வடுக்கள் அனைத்தையும் மாற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
- உதட்டு கறுப்பு,கண் கருவளையம், கழுத்து கறுப்பு நீக்கும் கிறீம்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய்
- உடல், கை, கால் கருமையான புள்ளிகள் நீக்கும் கிறீம், நாட்பட்ட பித்த வெடிப்பு, அலர்ஜிக்குடன் கூடிய பித்த வெடிப்பு நீக்கும் ஆயுர்வேத கிறீம் விற்பனைக்கு உண்டு.
- மார்பு கூட்டும், குறைக்கும், தொய்வு நீக்கும் கிறீம், குளிசை விற்பனைக்கு உண்டு.
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா,குளிசை, பொனிக் விற்பனைக்கு உண்டு.
- கருமை,கறுப்பு நீக்கும் வைத்நிங் பேசியல், அழகு மிளிர வைக்கும் கோல்ட் பேசியல் செய்து கொள்ளலாம்.

தொ.பே :- 0772106155

அக்ஷயா நாவலர் றோட்
221, பிறவுண் றோட் சந்தி (அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்ப்பாணம்.

(1755)

## வேலையாள் தேவை

தையல் வேலை தெரிந்த பெண் வேலையாள் தேவை. அழகு சாதனம் மற்றும் இசைக்கருவி விற்பனை நிலையத்திற்கு பெண் விற்பனையாளர் தேவை.

தொடர்புகளுக்கு: 077 923 8376

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டையில் 1 3/4 பரப்பில் 5 அறை களும், குளியலறைகளுடனும் ம்மாடி வீடு விற்பனைக்கு உண்டு

வளம்புரத்தில் 1 1/2 பரப்பில் 3 அறை களுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

(1756)

தொடர்புகளுக்கு -
077 6132 444

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி குருநாதன்



உரும்பிராயை பிறப்பிடமாகவும், யாழ்.கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி குருநாதன் கடந்த (09/09/2015) புதன்கிழமை சிவ பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுத பிள்ளை குருநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான V.M வேலாயுத பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சுரேந்திரன் (பிரான்ஸ்), தேவானந்(பிரான்ஸ்), பிரேம்நாத் (கனடா), நிர்மலநாதன் (பிரான்ஸ்), ஸ்ரீரங்கநாதன் (அரவிந் ஸ்ரூடியோ - யாழ்), நவலோக நூதன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற ராஜி, நரேந்திரன் (கனடா), லோகநாயகி(விஜி-கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாவாணி, கனகாம்பிகை, ஜானகி, வளர்மதி, சறோஜா, காலஞ்சென்ற தயாபரன், யசோதரா, செந்தில்குமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (14-09-2015) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

309,நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.
(021-2222190, 001-416-7544401).

தகவல் :
கு.ஸ்ரீரங்கநாதன் (மகன்)
(அரவிந் ஸ்ரூடியோ யாழ்)


# உயர்தரத்தின் பின்னர் ESOFT உடன் இணைந்து எதிர்காலத்தை வெல்லுங்கள்!

Shaping Lives, Creating Futures.

உங்களுக்காகவே விசேடமான PEARSON (UK) அனுமதிப்பெற்ற டிப்ளோமா பாடநெறிகள் பல தற்போது ESOFT இடமிருந்து

தகவல் தொழில்நுட்பம் | வியாபார முகாமைத்துவம் | ஆங்கிலம் | விருந்தோம்பல் சேவை முகாமைத்துசம்




(C-2137)

DiTEC INTERNATIONAL
Diploma in Information Technology
காலம் : 4 மாதங்கள்

assured by PEARSON

DiE
Diploma in English
காலம் : 4 மாதங்கள்

செப்டம்பர் 16க்கு முன்னர் பதிவுசெய்து
25%*
50%*
கழிவினை பெற்றுக்கொள்ளுங்கள்

ஏனைய டிப்ளோமா பாடநெறிகள்

- Diploma in Business Management
- Diploma in Computerized Accounting
- Diploma in Hardware & Networking
- Diploma in Software Engineering
- Diploma in Web Engineering
- Diploma in Multimedia
- Diploma in Hospitality Management

எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் ஏனைய டிப்ளோமாக் கற்கைநெறிகள்

16.09.2015 | 21.09.2015 New Batches




ESOFT
Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

இலங்கையின் மிகப்பெரிய உயர்கல்வி வலையமைப்பு

www.esoft.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்க



# கவனயீர்ப்பு போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி சர்வதேச கைதிகள் தினமான நேற்றைய தினம் யாழ். நகரில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு இருந்தது. இப்போராட்டத்தினை வடக்கு மாகாண சபையின் சில உறுப்பினர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் யாழ்.பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

முற்பகல் பத்து மணியளவில் யாழ்.பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் சுமார் ஒருமணித்தியாலம் வரை நடைபெற்றது. இப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், போராட்டத்தை ஒழுங்கமைத்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவினரகள் மற்றும் காணாமற் போகச் செய்யப்பட்டோரின் உறவினர்கள், பொதுமக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள், சமூக உரிமைக்கான உறவுகள் அமைப்பு, முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கோமகனின் விடுதலைக்கான வெகுஜன அமைப்பு, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு, (கொழும்பு), யாழ். மாவட்ட இளையோர் அமைப்பு, தமிழ் சிவில் சமூக அமையம், பிரஜைகள் குழு மன்னார் ஆகிய அமைப்புக்களும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் தேசிய அரசாங்கமே எம்தேச உறவுகளை விடுதலை செய்யுமா?, அகிம்சை போராட்டத்திற்கு மதிப்பளித்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய் அரசே , நல்லாட்சி அரசாங்கமே அரசியல் கைதிகளை விடுதலை செய்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்து. 23 வருட சிறை இருப்பு இன வன்முறையை தோற்றுவிக்கும், இரும்புச் சுவருக்குள் இருக்கும் எமது உறவினை இயல்பாக வாழ விடுதலை செய்,

மாநகர சபை உறுப்பினர் கோமகனின் விடுதலை ஏழை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும், எங்கள் உறவுகளை எங்களோடு வாழவிடு, நாங்களும் மனிதர்கள் தானே, எந்தவித விசாரணை இன்றியும் வருடக்கணக்கில் தடுதது வைத்திருப்பது நியாயமா? என எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர்களான இ.ஆனோல்ட், பா.கஜதீபன, எஸ்.சுகிர்தன், அ.பரஞ்சோதி மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

காலை பத்து மணியளவில யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் பேரணியாக யாழ். கஸ்தூரியார் வீதியினை சென்றடைந்து அங்கிருந்து யாழ்.மின்சார வீதியினை வந்தடைந்து, பின்பு போராட்டம் ஆரம்பித்த இடத்திற்கு அருகாமையில் வந்து முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. ள (இ-4)

## சட்டமா அதிபர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு நிறுவுமாறு கோரிக்கை

சட்டமா அதிபர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நிறுவுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், சிவில் அமைப்புக்கள் கோரியுள்ளன.

தற்போதைய சட்டமா அதிபரின் நடவடிக்கைகள் குறித்து ஆராய விரைவில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மிதக்கும் ஆயுதக் கப்பல், குமரன் பத்மநாதன் ஆகிய வழக்குகள் தொடர்பில் சட்டமா அதிபர் எடுத்த தீர்மானம் அதிருப்தி அளிப்பதாக சிவில் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

குமரன் பத்மநாதனை, புலனாய்வுப் பிரிவினர் மலேசியாவிலிருந்து கைது செய்து இலங்கைக்கு அழைத்து வந்தனர் என சிவில் அமைப்புக்களில் ஒன்றான புரவசி பலய அமைப்பின் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

அப்போதைய அமைச்சரவை பேச்சாளர், புலிகளின் சர்வதேசப் பிரிவு பொறுப்பாளரை கைது செய்ததாக தெரிவித்திருந்தார்.

அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருப்பதாக தெரிவித்திருந்தார்.

இராணுவப் பேச்சாளரும் இதனையே கூறியிருந்தார். ராஜீவ் காந்தி கொலையில் குமரன் பத்மநாதனும் ஓர் சந்தேக நபராவார்.

அவன்கார்ட் நிறுவனம் நிறுவப்பட்டதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கவிருந்த பாரியளவு வருமானம் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## இசைப்பிரியா தொடர்பான தமிழ்த் திரைக்காவியம்!

விடுதலைப் புலிகளின் ஊடகவியலாளர் இசைப்பிரியா தொடர்பான தமிழ்த் திரைக்காவியமொன்றுக்கு தமிழ்நாடு தணிக்கைச் சபை அனுமதி மறுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் கைவிடப்பட்டதன் பின்னர் தமிழகத்தில் ஈழம் தொடர்பான பல சிறந்த திரைப்படங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதற்கான பிள்ளையார் சுழி புலிப்பார்வை திரைப் படத்தின் இயக்குநர் பிரவீண்காந்தி என்று கூறலாம்.

இதே வரிசையில் விடுதலைப் புலிகளின் ஊடகவியலாளராக இருந்து கொடூர மரணத்தை எதிர் கொண்ட இசைப்பிரியாவின் வாழ்க்கையைப் பற்றியும் ஒரு திரைக்காவியம் தயாரிக்கப்பட்டது.

தமிழ்நாடு தணிக்கை குழுவில் குறித்த படத்தை திரையிடுவதற்கான அனுமதி கோரப்பட்டபோது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

முன்னை நாள் தமிழ்த்திரையுலக பிரமுகரும், மைலாப்பூர் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.வி. சேகர் இந்த அனுமதி மறுப்பின் பின்னணியில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

இவர் அண்மையில் தான் பா.ஜ.க. அரசினால் தணிக்கைச் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரதமர் ரணில் நிறைய மாற்றமடைந்துள்ளார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது நிறைய மாற்றமடைந்துள்ளார், அவருடைய மாற்றத்துடன் செயற்பட விரும்புவதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை விமர்சித்த நான் தற்போது அவருடன் இணைந்து செயற்பட விரும்புகின்றேன்.

பிரதமர், தனது அரசியல் கொள்கைகளை மாற்றியுள்ளார், அவரும் மாற்றமடைந்துள்ளார் நாங்களும் மாற்றமடைந்துள்ளோம்.

அவ்வாறான மாற்றத்துடன் புதிய பயணம் ஒன்றை செல்லவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவவாறு தெரிவித்தார்.(இ-7)

## நியாயமான விசாரணையைக் கோரி லலித்குமாரின் தந்தை முறைப்பாடு

கடத்திச் செல்லப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சியின் செயற்பாட்டளார்களான லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் தொடர்பில், நியாயமான விசாரணைகளை நடத்துமாறு கோரி, குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

லலித்குமாரின் தந்தையான ஆறுமுகம் வீரராஜ் இந்த முறைப்பாட்டை செய்தார். அவருடன் முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் துமிந்த நாகமுவ மற்றும் நுவான் போபகேவும் சென்றிருந்தனர்.

இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த துமிந்த நாகமுவ, கடந்த காலங்களில் பெருமளவிலானோர் கடத்தப்பட்டதுடன் காணாமற் போக செய்யப்பட்டனர் என்பதால், லலித் மற்றும் குகன் ஆகியோரைப் போல் அனைத்து நபர்கள் குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக கூறியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்து லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் கடத்திச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## முதலீடுகளை மேற்கொள்ள ஜப்பான் அரசாங்கம் ஆர்வம்

### நிதியமைச்சர் தகவல்

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதில் ஜப்பான் அரசு ஆர்வமாக இருப்பதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானியத் தூதுவர் மற்றும் அந்நாட்டின் முதலீட்டாளர்கள் குழுவொன்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை சந்தித்து நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தது. இது குறித்து நிதியமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய முதலீட்டாளர்கள் இலங்கையின் உட்கட்டமைப்பு, அபிவிருத்தி உள்ளிட்ட ஐந்து முக்கிய துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அபிவிருத்திக்கு கைகொடுக்கும் வகையில் அதிவேக நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையக் கட்டமைப்புகள் மற்றும் வீடமைப்பு போன்ற துறைகளில் முதலீடு செய்வதில் ஜப்பானிய முதலீட்டாளர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர்.

அத்துடன் ஜப்பானிய வர்த்தக வங்கியின் கிளையொன்றும் இலங்கையில் திறக்கப்படவுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக இலங்கை மற்றும் ஜப்பானுககு இடையிலான இருதரப்பு நல்லுறவுகள் மேலும் வலுப்பெறும் என்றும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வாகன விபத்தில் சிக்கிய இரு இளைஞர்கள் பலி!

வெல்லவாய -மொனராகலை வீதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற வாகன விபத்தில் 2 இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனமொன்றின் மீது மோட்டர் சைக்கிள் மோதியுள்ளது.

மோட்டர் சைக்கிளில் பயணித்த மூவர் விபத்தில் பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்ட போது அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

புத்தல, உணவட்டுன மற்றும் வாவி வீதி பகுதிகளைச் சேர்ந்த 2 இளைஞர்களே விபத்தில் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

விபத்துடன் தொடர்புடைய டிப் [illegible] (இ-7)

## ரவிராஜ் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் ராணுவத்திற்கு சொந்தமானதா?

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜை கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் இராணுவத்திற்கு சொந்தமானதா? என்பது குறித்து விசாரணை செய்யப்பட்டு வருவதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பு நாரஹேன்பிட்டியில் வைத்து இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நடராசா ரவிராஜ் உயிரிழந்தார்.

ரவிராஜை கொலை செய்யப் பயன்படுத்திய ரி-56 ரக துப்பாக்கியை இராணுவத் தரப்பு வழங்கியதா? என்ற அடிப்படையில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் உயர் இராணுவ அதிகாரியொருவரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் போது கைதான உயர் இராணுவ அதிகாரிகளிடம் நடத்திய விசாரணைகளின் போது மேலும் சில அரசியல் படுகொலைகள் பற்றிய உண்மைகள் வெளியாகி வருவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தொடரை வெல்வது யார்?

## ஆஸி - இங்கிலாந்து இன்று பலப் பரீட்சை

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 5ஆவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி மான்செஸ்டரில் இன்று நடைபெறுகிறது.

தொடரின் முதல் 2 போட்டிகளில் அவுஸ்திரேலியாவும், (59 ஓட்., 64 ஓட்.), 3ஆவது, 4ஆவது போட்டிகளில் இங்கிலாந்தும் (93 ஓட்., 3 விக்கெட்) வெற்றி பெற்றன.

இதனால் தொடர் 2:2 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இன்று நடைபெறும் இறுதிபோட்டியில் வெல்லும் அணி தொடரை கைப்பற்றும் என்பதால் இரு அணிகளும் வெற்றிக்காக கடுமையாக போராடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து அணி ஏற்கெனவே ஆஷஸ் டெஸ்ட் தொடரை 3:2 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்ததுடன். ஒரே ஒரு இருபது போட்டியிலும் வெற்றி பெற்று இருந்தது. (க)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
விளையாட்டு விஞ்ஞான அலகு
உடற்கல்வி டிப்ளோமா இரண்டாம் வருட மீள்பரீட்சை - 2015

உடற்கல்வி டிப்ளோமா இரண்டாம் வருட மீள்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் விளையாட்டு விஞ்ஞான அலகில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொண்டு 30.09.2015ம் திகதிக்கு முன்பாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை விளையாட்டு விஞ்ஞான அலகில் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

(C-2126) பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்



Yarl Beauty Academy
YARL BEAUTY ACADEMY
அழகுக்கலை பயிற்சிகள்
ஒறிபிளேம் யாழ். சேவை நிலையத்தின் அனுசரணையில் யாழ் பியூட்டி அக்கடமியினால் மிகக் குறைந்த கட்டணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்



- Certificate in Basic Beauty Course (ஒரு மாத கால அழகுக்கலை)
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Cake Decoration Classes (கேக் ஐசிங்)



அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்றுமேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் 18.09.2015 அன்று 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 19.09.2015 அன்று 10.00 மணிக்கு

குறிப்பு:- முற்பதிவு செய்யும் முதல் 10 மாணவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு 25% வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)
(C-2129)



விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

DMI COMPUTER EDUCATION

After A/L IT & English Diploma

- Dip.in Information Technology
- Dip.in Office Automation
- Dip.in PC Application

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் Spoken English

புதிய பிரிவுகள் ஆரம்பம்
14/9/2015 (Mon) - 9.30 am.
16/9/2015 (Wed) - 9.30 am.




☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவன (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
(C-2142)

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) • யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி. NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |


## கண்ணீர் அஞ்சலி

### சபாரட்ணம் சிவபாலன்



1941.09.09 2015.09.12


எமது கல்வி நிறுவனத்தின் ஆசிரியராக கடமையாற்றும்
திரு.சுதன் அவர்களின் தந்தை
**சபாரட்ணம் சிவபாலன்**
இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள் (1758) [illegible] புதுக்குடியிருப்பு

# மரண அறிவித்தல்கள்

## சீவரத்தினம் நவரத்தினம்

### (ஓய்வுபெற்ற ஆசிரியர் - காரைநகர்)



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும், நடுத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் (யாழ்ற்றன் கல்லூரி) சீவரத்தினம் நவரத்தினம் நேற்று (12.09.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெகசோதியின் (ஓய்வுபெற்ற உப அதிபர் - யாழ்ற்றன் கல்லூரி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜசிவம் (சமுர்த்தி உத்தியோகத்தர், காரைநகர்), கலாசக்தி (ஆசிரியர்-யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அற்புதமலர் (ஆசிரியர்-யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம. வித்தியாலயம் றொபேஷன் (ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெயலட்சுமி, காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, சோமசுந்தரம் மற்றும் பாலசுப்பிரமணியம், ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜனனன், சஞ்சீவன், பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை காரைநகர் நடுத்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் (1759)
நடுத்தெரு, காரைநகர்
021 221 1416

## சபாரட்ணம் சிவபாலன்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், அராலியை வதிவிடமாகவும் கொண்ட சபாரட்ணம் சிவபாலன் நேற்று (2015.09.12) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற தபாலதிபர் சபாரட்ணம் - நாகேஸ்வரி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கந்தையா - பூரணம் தம்பதிகளின் மருமகனும், ஓய்வுபெற்ற அதிபர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கஜன் (பல்கலைக்கழகப் பேராசிரியர் - அமெரிக்கா), பிரியாகுகன் (லங்கெம் சிலோன் - PLC), சுதன் (ஆசிரியர் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இன்பமதன், விமலினி (விவசாய திணைக்களம்), தமிழ்ப்பிரியா (ஆசிரியை - கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும், மதுஷியா, தர்சியா, ஷர்மியா, யஸ்மிதா ஆகியோரின் பேரனும், கௌரி (கனடா), மனோகரி (லண்டன்), காலஞ்சென்ற மனோகரன், சூரியகுமார் மற்றும் சிறிகரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஜெயபாலன் (லண்டன்), இந்திரகுமார் (இந்தியா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.09.13) அவரது இல்லத்தில் மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அராலி பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை. (1757)
தகவல்:-
குடும்பத்தினர்
077 8030 301


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையில் நாளை உணர்வுகள் நூல் வெளியீடு

அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து வாழும் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரான பிரம்மஸ்ரீ மகாதேவஐயர் ஜெயராம சர்மாவின் உணர்வுகள் என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 4.30 மணி வரையிலான நேரத்தில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சிரேஷ்ட பேராசிரியர் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வரவேற்புரையினை நூலாசிரியர் பிரம்மஸ்ரீ மகாதேவஐயர் ஜெயராமசர்மாவும் - தலைமையுரையை சிரேஷ்ட பேராசிரியர் சமூகவியல்துறைத் தலைவர் என்.சண்முகலிங்கனும் - ஆசியுரையை முன்னாள் ஆசிரிய ஆலோசகரும் பண்டிதரும் சைவப் புலவருமான ஸ்ரீமதி கலாவதி பிரகதீஸ்வரசர்மாவும் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இயக்குநரும் யாழ். பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளருமான ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும் - நூல்வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

முதல் பிரதியினை சிவஸ்ரீ கிரியாகலாப முக்தாமணி சி.சோமசுந்தரக்குருக்கள் பெற்றுக்கொள்வார். நூல்நயப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் பால சண்முகன் நிகழ்த்தவுள்ளார். நிறைவுரையை சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தவுள்ளார். (இ-7)




## சங்கக் கூட்டமும் உறுப்பினர் தெரிவும்

யாழ்ப்பாணம் கதீஜா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டமும் உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யுத்த காலத்திற்கு முன்னர் இயங்கி வந்த மேற்படி கல்லூரியானது 25 வருடங்களின் பின்னர் அதாவது கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி மீளத் திறக்கப்பட்டு மாணவிகளுக்கான கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.இச் செயற்பாட்டின் ஓர் அங்கமாக இப்பழைய மாணவர் சங்கத் தெரிவு இடம் பெறவுள்ளது.

இக் கல்லூரியின் அபிவிருத்தி கருதி இக்கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவிகள் மேற்படி பழைய மாணவர் சங்க தெரிவுக் கூட்டத்திற்கு சமூகம் தருமாறு கல்லூரியின் அதிபர்ஏ.சி.ஜான்ஸிஅறிவித்துள்ளார்.

பழைய மாணவிகளின் அங்கத்துவம் உறுதிப்படுத்தப்பட்டவர்களே பழைய மாணவிகள் சங்க நிர்வாகக்குழுவில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

எனவே கல்லூரியில் கல்வி கற்ற அனைத்து பழைய மாணவிகளும் இக்கல்லூரியில் கற்ற ஏதாவது ஆவணமொன்றை சமர்ப்பித்து தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கல்லூரியில் கற்கும் போது வழங்கப்பட்ட சுட்டெண் அல்லது தேர்ச்சி அறிக்கை அல்லது கல்வி கற்பித்த ஆசிரியை ஒருவரின் கடிதம் அல்லது தம்முடன் இணைந்து கல்வி கற்ற ஏனைய இரு பழைய மாணவிகளின் ஒப்பமிடப்பட்ட கடிதம் என்பவற்றை சமர்ப்பிக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட ஆவணப்படுத்தல் தொடர்பாக கோரப்படுகின்ற ஆவணங்களுள் ஏதாவது ஒன்றை தங்களால் சமர்ப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# சட்டவிரோத கருக்கலைப்பு குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் சட்டவிரோத கருக்கலைப்பு தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென காங்கேசன் துறை பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ. ஆர்.மாசிங்க தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத கருக்கலைப்பு மற்றும் திருமணமாகாமல் கர்ப்பம் தரித்தல் தொடர்பாக பொலிஸில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எந்த வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என தெல்லிப்பழைசுகாதாரவைத்திய அதிகாரிபா.நந்தகுமாரால் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோத கருக்கலைப்புடன் தொடர்புடையவர்கள் இனங்காணப்பட்டால் அவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின முன் நிறுத்தப்படுவர்.

இதுவரைகாலமும் எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகளை விட இந்த விடயத்தில் நான் தனிப்பட்ட ரீதியில் கவனமெடுத்து நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளேன். அத்துடன் சட்டவிரோத கருக்கலைப்புடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக தகவல் இருப்பின் எனக்கு தெரிவிக்கும் பட்சத்தில் இலகுவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் பொலிஸார் இலஞ்சம் வாங்குதல் தொடர்பான தகவல் தெரிய வந்தால் 071 859 1315 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு எனக்கு நேரடியாக அறிவிக்க என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




## முத்திரையிடல்

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகமான உடுப்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடல் நடவடிக்கை எதிர்வரும் 21,22,25ஆம் திகதிகளில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகமான உடுப்பிட்டி பிரதேச சபையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகமான உடுப்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மேற்குறித்த திகதிகளில் தங்களது நிறுத்தல் அள்வைக் கருவிகளுக்கு முத்திரையிட முடியும்.

இதற்கமைய 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும்,22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரையும் இடம் பெறும்.தொடர்ந்து 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

# அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்து புகைப்பரிசோதனை செய்யப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனங்களுக்குரிய அனைத்து ஆவணங்களும் சமர்ப்பித்தால் மட்டுமே புகைப்பரிசோதனை செய்யப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் பாதுகாப்புக்குழு கூட்டம் கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது

இதன்போது, புகைப்பரிசோதனை என்றால் என்ன என்ற தெளிவு பலரிடம் இல்லை. புகைப் பரிசோதனை செய்துகொள்ள வரும் பொதுமக்கள் சிலர் வாகன இலக்கத்தகடு, வாகன புத்தகம் இல்லாமல் வருகின்றார்கள். அத்துடன் வாகன பரிமாற்று பத்திரம் பெற்றுக் கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என மோட்டார் வாகன புகைப் பரிசோதக அதிகாரி ஒருவரால் கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச தனியார் மற்றும் இராணுவ வாகனங்கள் அனைத்தும் புகைப் பரிசோதனை மேற்கொள்ளுதல் வேண்டும்.

வாகன பரிமாற்று பத்திரம், இலக்கத்தகடுகள் காலதாமதமாகுவது படிப்படியாக நிவர்த்தி செய்யப்படும் அவற்றை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

புகைப்பரிசோதனை செய்யப்படும் இடத்தில் அது தொடர்பான விளக்கமும் நிபந்தனைகளும் கட்டாயம் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## முத்தமிழ் விழாவும் கலைவிழாவும் இன்று

பண்டத்தரிப்புமலரும் மொட்டுக்கள் (Blooming Buds) ஆங்கில மொழிமூலமான பாலர் பாடசாலையின் முத்தமிழ் விழா மற்றும் ஆங்கில கலை விழா என்பன இன்று காலை 8.30 மணிக்கு பண்டத்தரிப்பு பிரான்பற்று அருள முதீஸவரி கல்யாண மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன்பிரதம விருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)



தீவகப் பிரதேசத்தின் வேலணைப் பிரதேசத்தில் இருந்து இனங்காணப்பட்ட குருதிச்சோகையுடைய 1-5 வயது வரையான 30 குழந்தைகளுக்கு சங்கானை லயன்ஸ் கழகத்தினால் இரும்புச் சத்து அதிகம் உள்ள ஊட்ட மருந்துகள் அடங்கிய மருத்துவ உதவிகள் கடந்த புதன் கிழமை வழங்கப்பட்டன.

லயன் டாக்டர் க.ஜெயச்சந்திர மூர்த்தியின் வழிகாட்டலில் வேலணை பிராந்திய சுகாதார பணிமனையில் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன. மேற்படி நிகழ்வின் போது தீவகத்தின் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி லயன் டாக்டர் குகதாசன், சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் ஜெ.றஜீவன் , நிகழ்ச்சித்திட்டத்தலைவர்லயன் பெண்மணி மயூரிக்கா ஆகியோருடன் மருத்து வைத்து மேற்படி மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன.

பிரான்ஸ் வாழ் கபிலன் என்பவரது பிறந்த தினத்தையொட்டி இம் வர்களான அ.ஜெயக்குமார், லயன் பெண்மணி மேரி மெற்லின் ஆகியோர் கலந்து கொண்டதுடன்.வேலணைப் பிரதேச வாசிகள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு விலைமனுக் கோரல்

வடக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அலகின் அலுவலக செயற்பாடுகளிற்காக பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டடமும் காணியும் வாடகைக்கு / குத்தகைக்கு வழங்க விரும்புபவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள்

மண்டபம் 01 30'x15' - 01 450 சதுர அடிக்கு மேல்
மண்டபம் 02 25'x15' - 01 375 சதுர அடிக்கு மேல்
மண்டபம் 03 20'x15' - 01 300 சதுர அடிக்கு மேல்

1. மேற்படி மண்டபங்கள் உட்பட அலுவலக பாவனைக்குமென மொத்தமாக 5000 சதுர அடிகள் கொண்ட கட்டடமும் வாகனத் தரிப்பிடத்திற்கு 1200 சதுர அடிகள் வரையான நிலப்பகுதியையும் கொண்டிருக்க வேண்டும்.

2. யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, பேருந்துப் போக்குவரத்து மார்க்கங்களை அண்மித்த கட்டடங்கள் விரும்பப்படும்.

3. மின்சார வசதி (3phase) நீர் வசதிகள் கொண்டிருக்க வேண்டும்.

4. குறைந்தது 2 வருடங்களிற்கு வாடகைக்கு வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

5. முற்பணம் வழங்கப்படமாட்டாது.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக கூறுவிலைகள் தயாரிக்கப்பட்டு உறையிலிடப்பட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் **"கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு"** என குறிப்பிட்டு கீழ் குறிப்பிடப்படுகின்ற முகவரிக்கு **2015.09.30**ஆந் திகதி **பி.ப 02:00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அ.சிவபாலசுந்தரன்
பிரதிப் பிரதம செயலாளர் - ஆளணி மற்றும் பயிற்சி.
121 A, கோவில் வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 221 6035

(சி-2127)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | கிளிநொச்சி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 40 | 40 | 40 |
| தக்காளி | 140 | 100 | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 50 | 60 |
| கோவா | 60 | 40 | 40 | 40 |
| கரட் | 160 | 150 | 100 | 150 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 120 | 140 | 100 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 140 | 100 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 70 | 80 |
| பயற்றங்காய் | 100 | 180 | 120 | 180 |
| லீக்ஸ் | 200 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 80 | 50 | 50 | 50 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 400 | 600 |
| போஞ்சி | 200 | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 160 | 150 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50-60 | 60 | 70 | 60 |
| இராசவள்ளி | 120 | 130 | 120 | 130 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 50 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 10 |

## பரிசளிப்பு விழாவும் நினைவுநாள் நிகழ்வும்

யாழ்.வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு நாள் நிகழ்வும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிதிறந்தவெளி அரங்கில்அதிபர் நாதபால சிங்கம் தலைமையில்நடைபெறவுள்ளது.

வடமாகாண முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமாகாணசுல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையை சித்தன்கேணிசிவன்தேவஸ்தான சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள்வழங்கவுள்ளார். யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட பீடாதிபதி கலாநிதி அ.அற்புதராஜா நிறுவுநர் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (இ-3)


# IELTS Special Class

21st November யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும்
IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள்
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை
காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்

- 60 மணி நேர வகுப்பு — ஆரம்பம் 14.09.2015
- UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
- WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
- MORE THAN 10 YEARS EXPERIENCE
- VOCABULARY and GRAMMAR
- EXTENDED SPEAKING PRACTICE

IELTS™



THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384, 0778803887


# மரண அறிவித்தல்



வாழ்நாள் பேராசிரியர்

## கந்தையா குணரத்தினம்

B.Sc, (Cey) ph.D (Lond,) FRAS (Lond,)
F.Inst. P.(Lond),C.phy, (Lond)

முன்னாள் 3-வது உபவேந்தர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் - (1994.04.01 - 1996.06.30)

ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வாழ்நாள் பேராசிரியர் கந்தையா குணரத்தினம் (முன்னாள் பல்கலைக்கழக உபவேந்தர், வாழ்நாள் இயல்பியல் பேராசிரியர்) 09.09.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஓவசியர் கந்தையா - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புஸ்பவதியின் அன்புக்கணவரும், வைத்திய கலாநிதி தயாபரன், குமுதினி, வைத்திய கலாநிதி ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திய கலாநிதி பிரியதர்சினி, பாலகுமார், கணேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணி, செந்தூரன், சக்தியாள் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா,. ஆறுமுகம், இராசம்மா, இராசரட்ணம் மற்றும் பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேஷராசா, கமலாதேவி, மகானந்தன், வைத்திய கலாநிதி மங்கலேஸ்வரி, பேராசிரியர் குகனேசராசா, புனிதவதி, ஞானதிலகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.09.2015 நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் ஏனையோர்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்,-- யாழ்ப்பாணம். (1730)

தகவல் :
கந்தையா கணேசராசா
தொ.பே இல : 077 735 3740

# ராசி பலன்

10.09.2015
(ஆவணி 24, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
துவாதசி முற்பகல் 7.59 மணிவரை
பூசம் முற்பகல் 8.11 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
நல்லைக்கந்தன் சப்பறம்
பிரதோச விரதம், அமிர்த சித்தம்

வள்ளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூராடம்<br>மேல் நோக்கு நாள் | | செவ் சுக் |
| | | | குரு சூரி |
| | சனி | | புத ராகு |

**மேடம்:** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள.

**இடபம்:** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வ்ந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், தனவரவு திருப்திகரமாக அமையும்.

**கடகம்:** வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை பெறுவீர்கள்.

**சிம்மம்:** திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**கன்னி:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், போசன [illegible]முண்டு.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெற்று மகிழ்ச்சியைத் தரும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வியக்கும் செய் [illegible] வந்து சேரலாம்.

**தனுசு:** நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்த கொள்ளலாம், ஒரு வகையில் சிக்கனமாக நடந்தாலும் மற றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** சொந்த பந்தங்களின் வருகை யுண்டு, தொழில் முன்னேற்ற முண்டு, மனதிற்கினிய சம்பவங் கள் நடைபெறலாம், பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்

**கும்பம்:** ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அ சுறுத்தல்கள் அகலும், புதி பொருட்சேர்க்கையுண்டு, சுவ ரஸ்யமான சம்பவங்கள் இட பெறலாம், வாழ்க்கைத் தர உயர வழிவகை செய்வீர்கள்.

**மீனம்:** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு விரைவில் கவிழ்ந்துவிடும்

## விதுர விக்கிரமநாயக்க

ஜனாதிபதி இந்த அரசாங்கம் எவ்வ ளவு வலுவென்று கூறினாலும், தற்போ தைய அரசாங்கத்தை மக்களினால் கவிழ்த்துவிட முடியும் என நாடாளு மன்ற உறுப்பினர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை வானொலி சேவை ஊழியர்க ளுடன இடம்பெற்ற கலந்து ரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், 2020ஆம் ஆண்டு வரையில் இவ் அரசாங்கத்தை அசைக்க முடியாதென ஜனாதிபதி கூறுகின்றார். மகிந்த ராஜபக்ஷவையும் 2030 ஆம் ஆண்டு வரை யில் அசைக்க முடியாதென கூறினார்கள்.

எனினும் மகிந்த ராஜபக்ஷவை அசைத்து விட்டார்கள். எனவே நன்றாக நினைவில் வைத்துக்கொள் ளுங்கள், இலங்கை மக்கள் மிகவும் பொறுமையானவர்கள்.

இவ் வருடத்தினுள் ஜனவரி மாதம் 8ஆம் திகதி மக்கள் தீர்மானம் ஒன்றை வழங்கியி ருந்தார்கள். அத் தீர்மானத்திற்கு சமமான தீர்மானத்தை எதிர்வரும் நாட்களில் மக்கள் மேற்கொளவார்கள்.

எனினும்அந்தநேரம் எப்பொழுதுஎன்றுதான் தெரியவில்லை என அவர்மேலும் தெரிவித துள்ளார். (இ-7)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகமும் இல ங்கை செஞ்சிலுவை சங்கத்தின் வலி.மேற்கு பிரிவினரும் இணை ந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் இன்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கழக மண்டபத்தில் இடம் பெறும்.

குருதிக் கொடையாளிகள் அனைவரும் கலந்து இரத்ததானத்தை வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# நிர்வாக சபையின் உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் முதியோர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற போது நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

இதற்கமைய தலைவராக க.பாலன், செயலாளராகஎஸ்.இரா சையா, பொருளாள ராக ந.கந்தசாமி ஆகி யோர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர். (இ-5-60)


வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.
✷ பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும்.
108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 077 5925088,
021 222 8680
(C-1812)

YOUth CREAtE

திருமறைக் கலாமன்றமும் கெயார் நிறுவனமும் இணைந்து நடாத்தும்

"கலைப்பொழுது"

இளையோர் உருவாக்க செயற்றிட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற
கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவட்ட இளையோர் வழங்கும்

நடனங்கள் / நாட்டுக்கூத்துக்கள் / நாடகம்

காலம்: 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை (இன்று)
நேரம்: மாலை 5:00 மணி
இடம்: முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

-திருமறைக் கலாமன்றம்

இணைப்பாளர்கள்:
பிரதேச செயலகம் : பூநகரி
முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழகம்

அனுசரணை
European Union
care
(சி/2126)

வீடு வாடகைக்கு!

No.762 (Old No-500) கே.கே.எஸ்.வீதி தட்டா தெரு (யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்) நான்கு அறைகளுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (வீட்டுப்பாவனை, மாணவர் கள் தங்குவதற்கு, களஞ்சியத்திற்கு, கடையாகவும் பாவிக்கலாம்). (1725)

தொடர்புகளுக்கு-021 222 0983

30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

A/L பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு,
வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்கு,
சொந்தமாக தொழில் செய்ய விரும்புவர்களுக்கு,
மற்றும் ஆர்வமுள்ள மகளிருக்கானது.



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 20.09.2015 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 23.09.2015 (புதன்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
இயக்குநர்
GURU

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 41.5 செவ் 1 இல்
தகைமை/தொழில்: B.Sc,M.Sc பொறியியலாளர்
தொ.இ: B/4930

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 9.5
தகைமை/தொழில் Diploma/ ஆசிரியர்
தொ.இ: B/4931

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 58.5 செவ் 8 இல்
தகைமை/தொழில்: பொறியியலாளர் லண்டன் Not PR
தொ.இ: B/4933

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 45
தகைமை/தொழில்: QS/ நில அளவையாளர் டுபாய்
தொ.இ: B/7934

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 93 செவ் 2 இல்
தகைமை/தொழில்: பல்வைத்தியர்
தொ.இ: G/4958

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 33 சூரி செவ் 8 இல்
தகைமை/தொழில் ICT/ பட்டதாரி
எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்
தொ.இ: G/4972

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 46 சூரி செவ் 8 இல்
தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்
தொ.இ: G/4976

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 34 சூரி செவ் 12 இல்
தகைமை/தொழில்: HNDE/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/4980

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E.mail: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த வெள்ளத்தில் மெக்கா மசூதி கிரேன் விழுந்து 107 பேர் கோரப்பலி

## 238 பேர் படுகாயம்






(மெக்கா)

**முஸ்லிம்களின் புனித நகரமான சவுதி அரேபியாவின் மெக்காவில் உள்ள பெரிய மசூதி மீது இராட்சத கிரேன் ஒன்று நேற்று முன்தினம் இரவு சரிந்து விழுந்ததில் 107 பேர் துடிதுடித்து பலியாகினர். 230 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.**

இந்த கொடூர விபத்து குறித்து அங்குள்ள அதிகாரி ஒருவர் கூறுகையில், "மெக்காவில் உள்ள பெரிய மசூதியை விரிவுபடுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதனால், நேற்று முன்தினம் மசூதியை சுற்றிலும் ஏராளமான இராட்சத கிரேன்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த வெள்ளிகிழமை பிற்பகல் தொழுகைக்காக ஏராளமானோர் குவிந்திருந்தனர்.

அந்த நேரம், பலத்த இடியுடன் மழையும் கடுமையாக பெய்து கொண்டிருந்ததால் அனைவரும் ஒரே இடத்தில் திரண்டிருந்தனர்.

அப்போது மூன்றாவது தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த இராட்சத கிரேன் ஒன்று எதிர்பாராதவிதமாக சரிந்து மசூதியின் கூரையை உடைத்துக் கொண்டு அங்கிருந்தவர்கள் மீது விழுந்தது.

இதில் இடிபாடுகளில் சிக்கி 107 பேர் துடிதுடித்து பலியாகினர்.

காயமடைந்த 238 பேர் அருகில் உள்ள பல்வேறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கு முன்னதாக கிரேன் இருக்கும் இடத்தில் மின்னல் தாக்கும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

எதிர்பாராத இந்த கொடூர விபத்தால் மசூதியே இரத்த வெள்ளமாகக் காட்சியளித்தது.

இந்த விபத்து குறித்து சவுதி அரசு தீவிர விசாரணை நடத்தி வருகின்றது.

அதேவேளையில், விபத்தில் சிக்கியவர்களை மீட்க போர்க்கால அடிப்படையில் மீட்புப்பணிகள் முடுக்கிவிட்டுள்ளது.

இதனால், மீட்புப்பணி வேகமாக நடைபெற்று வருகின்றன.

இந்த மாத இறுதியில் ஹஜ் புனித யாத்திரை தொடங்கவுள்ளது.

இலட்சக்கணக்கானோர் அதில் பங்கேற்கவுள்ள நிலையில், மெக்கா பெரிய மசூதியில் இந்த விபத்து நிகழ்ந்திருப்பது பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (3-7)

## 09.2015 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1503 - மைக்கலாஞ்சலோ புகழ்பெற்ற டேவிட் என்ற சிலையை உருவாக்கும் பணிகளை ஆரம்பித்தார்.
- 1609 - ஹென்றி ஹட்சன் பின்னர் ஹட்சன் ஆறு எனப் பெயரிடப்பட்ட ஆற்றை அடைந்தார்.
- 1759 - கனடாவின் கியூபெக் நகருக்கருகாமையில் இடம்பெற்ற போரில் பிரித்தானியப் படைகள் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தன.
- 1788 - நியூயோர்க் நகரம் ஐக்கிய அமெரிக்காவின் தற்காலிக தலைநகராக அறிவிக்கப்பட்டது.
- 1791 - பதினாறாம் லூயி மன்னன் பிரான்சின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டான்.
- 1814 - பிரித்தானியர் மேரிலாந்தின் பால்ட்டிமோர் நகரைக் கைப்பற்ற எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.
- 1847 - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: அமெரிக்கப படையினர் மெக்சிக்கோ நகரைக் கைப்பற்றினர்.
- 1898 - ஹனிபல் குட்வின் செலுலோயிட் புகைப்படச் சுருளைக் கண்டுபிடித்தார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: தென்னாபிரிக்கப் படையினர் ஜேர்மனியின் நமீபியா மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1923 - ஸ்பெயினில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மிகுவேல் பிறிமோ டி ரிவேரா ஆட்சியைக் கைப்பற்றினான்.
- 1939 - கனடா இரண்டாம் உலகப்போரில் குதித்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி எகிப்தினுள் நுழைந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் குண்டுகள் பக்கிங்ஹாம் அரண்மனையைச் சேதப்படுத்தியது.
- 1943 - சியாங் காய் ஷேக் சீனக் குடியரசின் அதிபரானார்.
- 1948 - இந்தியப் படைகள் ஐதராபாத்தை இந்திய ஆளுமையின் கீழ் கொண்டு வந்தன.
- 1949 - இலங்கை, இத்தாலி பின்லாந்து, ஐஸ்லாந்து, ஜோர்தான் ஆகிய 6 நாடுகள் ஐ.நாவில் அங்கத்துவம் பெற சோவியத் ஒன்றியம் தடை செய்தது.
- 1953 - நிக்கிட்டா குருஷேவ் நாட்டின் உயர் பதவியான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.
- 1968 - அல்பேனியா வார்சா ஒப்பந்தத்திலிருந்து விலகியது.
- 1989 - தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கெதிரான மாபெரும் போராட்டம் டெஸ்மண்ட் டூட்டு தலைமையில் இடம்பெற்றது.
- 1993 - நோர்வேயில் இடம்பெற்ற இரகசியத் தொடர்ப் பேச்சுவார்த்தைகளை அடுத்து பாலஸ்தீனத் தலைவர் யாசர் அரபாத்துக்கும் இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ரபீனுக்குமிடையில் அமைதி ஒப்பந்தம் எட்டப்பட்டது.
- 1994 - யுலிசெஸ் விண்கலம் சூரியனின் தென் முனையைக் கடந்தது.

**பிறப்புக்கள்**

- 1969 - ஷேன் வோர்ன், ஆஸ்திரேலியத் துடுப்பாளர்

**இறப்புகள்**

- 1598 - இரண்டாம் பிலிப்பு, ஸ்பானிய, போர்த்துக்கல், இலங்கை மன்னன் (பி. 1526)
- 1975 - முடிகொண்டான் வெங்கடராம ஐயர், கர்நாடக இசைக் கலைஞர் (பி.1897)
- 1996 - டூப்பாக் ஷகூர், அமெரிக்க ராப் இசைக் கலைஞர் (பி. 1971)
- 2009 - அராங்க முருகையன், தமிழறிஞர், எழுத்தாளர் (பி. 1932)

# சிலிண்டர் வெடித்து 80 பேர் உயிரிழப்பு

## மத்திய பிரதேசத்தில் சம்பவம்



(ஜபுவா)

மத்தியப் பிரதேச மாநிலத்தில் உணவு விடுதியில் ஏற்பட்ட சிலிண்டர் விபத்தில் 80 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்திய பிரதேச மாநிலத்தில் ஜப்புவா மாவட்டத்தில் உள்ள ஓர் உணவு விடுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறியது.

இதில் உணவு விடுதியின் கட்டடம் முழுவதும் இடிந்து விழுந்தது. அருகாமையில் உள்ள சில கட்டடங்களும் இடிந்து விழுந்ததால், கட்டட இடிபாடுகளுக்குள் ஏராளமான மக்கள் சிக்கிகொண்டனர்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் மத்திய பிரதேச மாநில உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை முடுக்கி விட்டனர்.

பலி எண்ண்ணிக்கை முதலில் 25 என அறிவிக்கப்பட்ட நிலையில், பலி எண்ணிக்கை தற்போது 80 ஆக அதிகரித்துள்ளது என்று சில ஆங்கில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் காயம் அடைந்தவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதால், பலி எண்ணிக்கை இன்னும் உயரும் என்று அஞ்சப்படுகிறது.

முன்னதாக, ஜபுவாவில் சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் பிரதமர் மோடி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டரில் பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்திருந்தார்.

காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமாக பிரார்த்திப்பதாகவும், நிலைமையை உன்னிப்பாக மத்திய பிரதேச அரசு கவனித்து வருவதாகவும் பிரதமர் மோடி கூறியுள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர் சீபா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டால்

# எதிர்ப்போம்

### சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்திய- இலங்கை இருதரப்பு வர்த்தக ஒப்பந்தமான சீபாவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திட்டால் அதனை எதிர்க்கப் போவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட அவர்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் போது சீபா ஒப்பந்தம் தொடர்பான கைச்சாத்திடும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

அவ்வாறு நடைபெற்றால் அது தவறான செயலாகும். ஏனெனில் இந்த ஒப்பந்தம் தொடர்பாக இது வரை அமைச்சரவையின் அனுமதி வழங்கப்படவில்லை.

இரு நாட்டு வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பில் கலந்துரையாடல் மூலம் படிப்படியான முன்னேற்றங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.


தவிர அது தொடர்பான எந்தவொரு முடிவையோ, ஒப்பந்தத்தையோ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனித்து ஏற்படுத்திக் கொளள முடியாது.

இந்தியா எமது நட்புறவு நாடு, அங்கு எமது உற்பத்திகளுக்கு ஏராளம் சந்தை வாய்ப்புகள் இருக் கின்றன என்பது போன்ற விடயங்களுக்காக எமது நாட்டின் வர்த்தகர்களின் நலனை நாம் தாரை வார்த்துவிட முடியாது என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்த அரசின் போட்டோ பிரதியே

# மைத்திரி அரசு

### சோமவன்ச கண்டுபிடிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினது போட்டோ பிரதியாகவே மைத்திரிபால - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஜே.வி.பியின் முன்னாள் தலைவரும் ஜனதா சேவக கட்சியின் தலைவருமான சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அனைத்து தேசிய அரசாங்க விரோத அரசியல் சக்திகளும் ஒன்றிணைந்து புதிய அரசியல் முன்னணி ஒன்றை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மேலும், நாட்டின் இரண்டு பிரதான கட்சிகள் மற்றும் அந்தக் கட்சிகளுடன் இணைந்துள்ள கட்சிகள் போன்றன குறித்து எவ்வித நம்பிக்கையும் கொள்ள முடியாது. இந்த நாட்டு மக்கள் தெளிவான மாற்றம் ஒன்றையே கோரி நிற்கின்றார்கள்.

நாட்டை கட்டியெழுப்பும் தேசிய போராட்டம் ஆரம்பிக்கப்படும், மகிந்த அரசாங்கத்திற்கும் மைத்திரி - ரணில் அரசாங்கத்திற்கும் இடையில் வேறுபாடு கிடையாது. தலைகள் மட்டுமே மாறியுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)



இரண்டாம் எலிசபெத் மகாராணி நீண்ட காலம் (63 வருடங்கள்) பிரித்தானிய மகாராணியாக பதவி வகித்தமையை முன்னிட்டு கடந்த 10 ஆம் திகதி இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் விசேட நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

இதன்போது கடந்த முறை ஜனாதிபதி பிரித்தானிய விஜயத்தின் போது எலிசபெத் மகாராணியோடு எடுத்துக்கொண்ட புகைப்படம் விசேடமாக வடிவமைக்கப்பட்டு இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டவுரிஸால் ஜனாதிபதிக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## பிரதமர் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்த

# 5000 முறைப்பாடுகள்

கொலை, பாலியல் வன்கொடுமை மற்றும் காணாமல் போதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பிரதமர் காரியாலயத்திற்கு 5000 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பிரதமர் காரியாலயத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்குற்றச் செயல்கள் தொடர்பில் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் விசேட பிரிவு ஒன்று பிரதமர் காரியாலயத்தில் நிறுவப்பட்டிருந்தது.

பெயர் குறிப்பிட்டும், பெயர் குறிப்பிடாதும முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முறைப்பாடு செய்தவர்களில் படையினர் மற்றும் பொலிஸாரும் உள்ளடங்குகின்றனர்.

தமது முறைப்பாடுகள் குறித்து வெற்றிகரமான விசாரணை நடத்தபட்டால் குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டமை குறித்த வீடியோ ஆதாரங்களையும் சமர்ப்பிக்க முடியும் என முறைப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2013ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13ம் திகதி அநுராதபுரத்தில் வெள்ளை வானில் கடத்தப்பட்ட மதுஸ்க டி சில்வா என்ற வர்த்தகர் மற்றும் இருவர் கொடூரமான முறை யில் தாக்கப்பட்டு ஒருவர் தீயிட்டு எரிக்கப்பட்ட வீடியோ காட்சிகளை சமர்பபிக்க முடியும் என முறைப் பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விமானிகளுக்கான பயிற்சி வழங்குவதாக மிஹின் லங்கா நிறுவனம் ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் பேரனிடம் 50 இலட்சம் பணம் வாங்கி உரிய பயிற்சி அளிக்காமை குறித்தும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களில் பங்களிப்புச் செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் வழங்கப்படவில்லை எனவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் காரியாலய பொதுமக்கள் முறைப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

## ரக்னா லங்கா நிறுவனத்தின் தலைவரிடம்

# மீண்டும் விசாரணை

ரக்னா லங்கா நிறுவனத்தின் தலைவரிடம் மீண்டும் விசாரணை செய்யப்பட உள்ளது.

ரக்னா லங்கா நிறுவனத்தின் தற்போதைய தலைவர் விக்டர் சமரவீரவிடம் பாரிய நிதி மோசடிகள் அதிகார துஷ்பிரயோகங்கள் உள்ளிட்ட குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்த உள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் வாக்கு மூலமொன்றை பதிவு செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை 14 ஆம் திகதி விசாரணைகளுக்காக ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ரக்னா லங்கா நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகள், குற்றச் செயல்கள் தொடர்பிலான விசா ரணை நடத்தி பொதுமக்களின் சாட்சியங்கள் திரட்டப்பட்டு வருகின்றது.

விசாரணைகளின் போது எழுந்த சில பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்திக்கொள்ள ரக்னா லங்கா நிறுவனத்தலைவரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது. (இ-7)

## அரசியலமைப்பு சபையில் ஐ.ம.சு.முன்னணிக்கு

# இடமில்லை

அரசியலமைப்புச் சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து பிரதிநிதியொருவர் நியமிக்கப்படாமை கவலைக்குரிய விடயமென்று நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ள அரசியலமைப்புச் சபைக்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் இவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்.

அதே நேரம் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிய கட்சிகள், சிவில் அமைப்புகள் என்பன தங்கள் பிரதிநிதிகளை அறிவித்துள்ளன.

அந்த வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக தினேஷ் குணவர்த்தன அல்லது தான் அரசியலமைப்புச் சபைக்கு நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறன்றி சம்பிக்க ரணவக்கவின் நியமனம் தமக்கு இழைக்கப்பட்ட அநியாயம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் அரசியலமைப்புச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களில் சம்பிக்க ரணவக்க மட்டுமன்றி விஜயதாச ராஜபக்ஷவும் சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளை மறுக்கும் மனோபாங்கில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலில் தடுமாற்றம்

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் அனைத்துலக நாடுகளை ஒன்றுபடுத்துவதில் அமெரிக்கா முன்னிற்க வேண்டும்.



தற்போது அமெரிக்கா இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஆதரவளிப்பதானது அனைத்துலகப் பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கு மிகப் பாரிய தடையாக உள்ளது.

இவ்வாறு the diplomat ஊடகத்தில் Taylor Dibbert எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30 ஆவது தொடர் ஆரம்பமாவதற்கு இன்னமும் சில நாட்கள் உள்ளநிலையில், இலங்கையில் இடம்பெற்ற யுத்த மீறல்களை உள்ளடக்கிய ஐ.நா மனித உரிமைகள் அறிக்கை வெளியீடு தொடர்பாக, இலங்கை அரசாங்கம் எவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றப் போகின்றது என்பது தொடர்பாகவும், இந்த விவகாரங்கள் தொடர்பில் உள்நாட்டில் 'பொறுப்புக்கூறும்' கடப்பாட்டை இந்த அரசாங்கம் எவ்வாறு கையாளப் போகின்றது என்பது தொடர்பாகவும் பெரும்பாலான இலங்கையர்கள் மிகவும் ஆவலுடன் எதிர் பார்த்துக்காத்திருக்கின்றனர்.



கொழும்பின் பொறுப்புக்கூறும் பொறிமுறையானது உண்மையில் எவ்வாறு அமைந்திருக்கும்?

இவ்வாறானதொரு பொறிமுறை தனது செயற்பாட்டை மிகவும் சரியாக மேற்கொள்வதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளதா?

இப் பொறிமுறையில் அனைத்துலகச் செயற்பாட்டாளர்கள் எவ்வாறான பங்களிப்பை வழங்கவுள்ளனர்?

இலங்கை வாழ் சிறுபான்மைத் தமிழ் மக்கள் உள்நாட்டுப் பொறுப்பளிக்கும் பொறிமுறையில் நம்பிக்கை கொண்டிராவிட்டாலும் கூட, இந்நாட்டின் புதிய அரசாங்கமானது உள்நாட்டுப் பொறிமுறையைச் செயற்படுத்தவுள்ளதாக வெளிப்படையாக அறிவித்துள்ளது.

பல பத்தாண்டுகளாக சிங்களப் பெரும்பான்மை அரசு பல்வேறு ஆணைக்குழுக்கள் மற்றும் உள்நாட்டுப் பொறுப்புக் கூறும் பொறிமுறைகளை உருவாக்கிய போதிலும் இன்னமும் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளவில்லை.

இலங்கையில் இன்னமும் மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன. இலங்கை அரசின் உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பான இந்த விவாதமானது மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

•ஒருபுறத்தே, உண்மையில் இவ்வாறான மோசமான மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகவும் பொருத்தமான வகையில் முகாமை செய்யப்பட்ட, நாடு கடந்த நீதிப் பொறிமுறை ஒன்று தேவைப்படுகிறது.

பல பத்தாண்டுகால யுத்தத்தின் விளைவாக தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் இவர்களைப் பொறுத்தளவில் அனைத்துலக மட்ட நீதிப் பொறிமுறையையே வேண்டி நிற்கின்றனர்.

மறுபுறத்தே, பெரும்பாலான இலங்கையர்கள் அனைத்துலகப் பொறிமுறையை விரும்பவில்லை. இதனால் நாட்டில் இருவேறு விவாதங்கள் இடம்பெறுகின்றன.

இதற்கும் மேலாக, அனைத்துலக அரங்கில், அமெரிக்காவானது இலங்கைக்கு எதிரான பொறுப்புக் கூறும் பொறிமுறை தொடர்பில் அழுத்தம் கொடுப்பதில் முன்னிலையில் இருந்தது.

ஆனால் அண்மையில் அமெரிக்காவின் ஒபாமா அரசாங்கமானது தான் இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஆதரவளிப்பதைத் தெளிவாகக் காண்பித்துள்ளது.

இலங்கைக்கு எதிராக அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதில் கடந்த சில ஆண்டுகளாக மிகத் தீவிரமாக நின்ற அமெரிக்காவானது தற்போது இதற்குப் பதிலாக இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறையை ஏற்றுக் கொண்டுள்ளமையானது தனது நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றியுள்ளதையே சுட்டிக் காட்டுவதாக சில அவதானிகள் விபரிக்கின்றனர்.

இலங்கைக்கான அனைத்துலக பொறுப்பளித்தல் பொறிமுறை ஒன்றை அமைப்பதானது அனைத்துலக நாடுகளின் கணிசமான மற்றும் போதியளவு ஆதரவின்றி சாத்தியமாகாத ஒன்றாகும்.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை இயற்றுவதன் மூலமே இது சாத்தியமாகும்.

இலங்கையில் வாழும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் அனைத்துலக நாடுகளை ஒன்றுபடுத்துவதில் அமெரிக்கா முன்னிற்க வேண்டும்.

ஆனால் தற்போது இதே அமெரிக்கா இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஆதரவளிப்பதானது அனைத்துலகப் பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கு மிகப் பாரிய தடையாக உள்ளது.



இலங்கையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கத்துடன் அமெரிக்க அரசாங்கம் மிகவும் விரைவாகவும் முழுமனதுடனும் ஈடுபடுவதானது பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர்களான நிஷா பிஸ்வால் மற்றும் ரொம் மலினோவ்ஸ்கி ஆகிய இருவரும் இலங்கைக்கு அண்மையில் சுற்றுப் பயணம் மேற் கொண்டதானது இலங்கைக்குள் பெரும் மேலும் கருத்து வேறுபாடுகள் உருவாக வழி வகுத்துள்ளது.

எந்தவொரு உள்நாட்டுப் பொறிமுறையும் பலவீனமானதாகவே இருக்கும் என்பதால் தமிழ் மக்கள் இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளும் மனநிலையிலில்லை.

இதில் தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

இதே பொறிமுறை அனைத்துலக மட்டத்தில் இடம்பெறும்போது அது வினைத்திறன்மிக்கதாக இருக்கும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

பாரபட்சமற்ற, சுயாதீனமான உள்நாட்டு பொறுப்பளித்தல் விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைப்பது எவ்வளவு கடினமானது என்பதை கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் ஊடகவியலாளரான குசல் பெரேரா தனது அண்மைய பத்தியில் விளக்கியுள்ளார்.

தற்போது பல்வேறு சவால்கள் எழுந்துள்ள நிலையிலும், இலங்கையின் தற்போதைய அரசாங்கமானது உள்நாட்டில் உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கான வாய்ப்பொன்று வழங்கப்படும் என்பதையே தற்போதைய சூழல் தெளிவாக சுட்டிநிற்கிறது.

இலங்கையின் போருக்குப் பின்னான பல்வேறு விவகாரங்கள் போன்றே உள்நாட்டுப் பொறிமுறை விவகாரமும் மிகவும் சிக்கலானதொரு விவகாரமாக உள்ளது.

இனிவரும் வாரங்களில் என்ன நடக்கப்போகின்றதோ அதனை இனி மாற்ற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 கொலைச்சம்பவங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

**யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் கொலை செய்யப்பட்ட 16 சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக 2006ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு மற்றும் காணாமற் போனோர் தொடர்பில் ஆராய்வதற்காக 2013 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கைகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அரசாங்கம் ஆயத்தமாகியுள்ளது.**

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு, உதாலகம ஆணை க்குழு என்ற பெயருடனும், இரண் டாவதாக மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு என்ற பெயருடனும் செயற்பட்டு வந்தன.

உதாலகம ஆணைக்குழுவின் அறிக்கை 2009ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பில் இதுவரையில் பகிரங்கமான விளக்கம் எதையும் தரவில்லை.

காணாமற் போனோர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தயாரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும், அதனை தற்போதைய ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதற்காக திகதி ஒன்றை கோரியுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் நிஷங்க உதாலகம தலைவராக செயற்பட்ட முதலாவது ஆணைக்குழுவிடம் கொலை செய்யப்பட்ட 16 சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் பணி ஒப்படைக்கப்பட்டன.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை, மூதூரில் 17 உதவி தொழிலாளர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை, கெப்பட்டிக் கொல்லாவையில் சாதாரண மக்கள் 68 பேரின் கொலை, பயிலுநர் பாதுகாப்பு பிரிவு உறுப்பினர்கள் 98 பேரின் கொலை ஆகியவைகள் அவற்றில் உள்ளடக்கப்படும்.

எப்படியிருப்பினும் நிதிகள் ஒழுங்கான முறையில் வழங்கப்படாமை, சாட்சியாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு தொடர்பில் சான்றிதழ் வழங்கப்படாமை குறித்து அரசாங்கத்திற்கு எதிராக, குறித்த ஆணைக்குழுவினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பின்னர் மனித உரிமை ஆர்வலர்கள் அமைப்புகள் பல குறித்த விசாரணை நடவடிக்கைகளில் தலையிடுவதற்கு அனுமதி கோரியிருந்தன. எனினும் பின்னர் அவர்களில் அவற்றில் இருந்து விலகிவிட்டனர்.

இறுதி யுத்தத்தின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதா என்பது தொடர்பில் ஆராயும் பணியினை 2013ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டன.

இது தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளையே ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதற்கு ஆயத்தமாகின்றனர என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஆன்மீக அருளுரை

நல்லூர்க்கந்தன் உற்சவ காலத்தையொட்டி யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கரத சைதன்யா சுவாமியினால் வழங்கப்பட்டு வருகின்ற ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் "குருதேவரை தெரிந்து கொள்வோம்" என்னும் ஆன்மீக அருளுரை இடம்பெறும். (இ-5)

**மனைவியை கடத்திய குற்றத்துக்காக**

## கடூழியச்சிறை

(கொழும்பு)

நிதிமோசடி தொடர்பில் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ள சக்வித்தி ரணசிங்க என்பவருக்கு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஐந்து வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, மேல்நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க இந்த தண்டனையை வழங்கியுள்ளார்.

1999 ஆம் ஆண்டு, தமது முன்னாள் மனைவியை அவர்களின் பெற்றோரிடம் இருந்து கடத்திச் சென்று, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றத்துக்காகவே இந்த தண்டனை வழங்கப்பட்டது.

ஏற்கனவே பல மில்லயின் ரூபாய்களை நிதிமோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ரணசிங்கவுக்கு சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## அருள்நெறி விழா

நல்லூர்க்கந்தன் உற்சவ காலத்தையொட்டி இந்து சமய கலாச்ார அலுவல்கள் திணைக்களம் நடத்தி வருகின்ற யாழ். மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறி விழா தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களக்கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அமைச்சின் செயலாளர் சிவஞான சோதி கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி.பேரானந்தராஜா ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

வரவேற்புரையினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களக் கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் நிகழ்த்தவுள்ளார்.

கலை நிகழ்வுகளாக பழம்பதி அறநெறிப்பாடசாலை மாணவி ஐ.மதுநிதா- பேச்சு, இலக்கண சுவாமி அறநெறிப்பாடசாலை மாணவி ஜெ.ஜெயதுவாரகா-பேச்சு, தெல்லிப்பழை துர்க்காதேவி அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் வில்லிசை, நவாலி முருகானந்தா அறநெறிப் பாடசாலை மாணவி என். பானுஜா- பேச்சு, நெல்லண்டை அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் நாடகம், ஸ்ரீ கிருஷ்ணா அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் குழுநடனம், பி.பிரதிகா, சி.நசீனா, ந.சுலக்சிகா ஆகியோர் வழங்கும் தனிநடனம், ஸ்ரீவிஸ்வலிங்கேஸ்வரர் அறநெறிப்பாடசாலை மாணவன் க.வாகீசன்-பேச்சு, துர்க்கையம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் பண்[illegible] பன இடம்பெறும். (இ-5)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் கந்தன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் பாடல்- நாகேந்திரன் ஞானச்செல்வம் (கனடா), வயலின்-கி.பத்மநாதன், மிரு தங்கம்-துரைராஜா சிங்கம் ராஜன் ஆகியோர் வழங்கும் இசையரங்கு இடம்பெறும். (இ-5)

## இசைப்பேருரை

நல்லூர்க்கந்தன் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் கந்தபுராணத் தொடர் இசைப்பேருரை தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தா சர்மாவினால் வழங்கப்பட்டு வருகின்றது.


இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ வள்ளி திருமணம் எனும் கந்தபுராணம் தொடர் இசைப் பேருரை இடம்பெறும். (இ-5)

## வாழும் கலைப்பயிற்சி

பூஜ்யஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியினால் வடிவமைக்கப்பட்ட உடல் உள ஆன்மீக மேம்பாட்டை ஏற்படுத்தக் கூடிய பிரணாயாமம், சக்தி வாய்ந்த சுதர்சனக்கிரியா, எளிய யோகாசனங்கள் உள்ளிட்ட வாழும் கலைப் பயிற்சி நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகாமையிலுள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதிவரை தினமும் காலை 6 மணிமுதல் 8 மணிவரையும் மாலை 5.30 மணி முதல் 7.30 மணி வரையும் இரு பிரிவுகளாக பயிற்சிகள் நடைபெறவுள்ளது. இந்தியாவிலிருந்து வருகைதரும் வாழும் கலை அமைப்பு ஆசிரியர் [illegible] யோகா பயிற்சிகளை வழங்கவுள்ளார். (இ-3)

## நல்லூரானுக்கு இன்று பூங்காவனத்திருவிழா



## பூங்காவனமாய் மாற்று புண்ணியனே

பூங்காவனத்தில் அழகுறையும் வேலா
புரியவில்லையா எம் மனக்குறைகள் தீரா
அலங்கார ரூபனாய் நீயிருக்க
அலங்கோல வாழ்வது எம் தலைவிதியா
சம்மந்தக் கலப்பால் சரித்திரம் மாறிடுமா
தூங்காவனமாய்ப் போன எம்வாழ்வை
பூங்காவனமாய் மாற்று புண்ணியனே

புலோலியூர் வேல்நந்தன்

## கந்தனுக்கு இன்று திருக்கல்யாணம்

நல்லூரில் முருகனுக்கு இன்று கல்யாணம்
நான் போய் பார்த்து வீரவேண்டும்
பொல்லாத காதல் மன்னன் அவன்
இல்லாமலா ஒரு திரு மணந்தானோ...
வள்ளி மீது காதல் கொண்டிருந்தான்
வடிவாம்பிகை தெய்வானை மீதே
கொள்ளைக் காதல் கொண்டிருந்தான்
கொளுவல் பார்க்க போக வேணும்
இது நல்ல தருணம் இன்று போகத்தான் வேணுமய்யா...
புது மணத்தம்பதி முருகன் வள்ளி
புகவுளே விட்டிடாமல் வடிவாம்பிகை கதவமைப்பாள்
இது நல்ல ரசனை நான் பார்த்து ரசிக்க
இன்று நல்லூர் போகத்தான் வேணுமய்யா.....
தெய்வானையிடம் முருகன் மண்டியிட்டு
தேறவில்லை சம்மதம் என்றறிந்து
தேவருலக பெரியார்கள் சமாதானம் கூறி
தேற்றிட நான் காணவேண்டும்
இன்று நல்லூர் போகத்தான் வேணுமய்யா...

கலாவித்தகர் திருமதி மலர்விழி கனகசபை, சண்டிலிப்பாய்

## நல்லைக் கந்தன் நனிவிருத்தம்

நாயினுங் கடையேன் கொண்ட
நற்றமிழ் வேட்கை யாலே
பேயனாய்ப் பிதற்று கின்றேன்
பேசிடும் வார்த்தை யாவும்
ஆய்ந்திடும் கவிதை யாக்க
ஐயனே நாவில் நிற்பாய்
வாய்மட்டும் திறப்பேன் சொல்லும்
வார்த்தை நீ நல்லைக் கந்தா!

கலாபூஷணம் சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

## நல்லூரில் நம் முருகன் பூங்காவனம்

நல்லூரில் நம் முருகன் பூங்காவனம்
நம் இதயமோ இங்கு தாங்காவனம்
அலங்கார அழகனாய் ஆனாய் தினம்-இன்று
அதி சிறப்பாய் இங்கு பூங்காவனம்
அகதியாய் நலம் இன்னும் ஏங்காவனம்
அதி விரைவாய் தீர்வைத் தருவாய் திண்ணம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொதுமன்னிப்பு ஒன்றே நிரந்தர தீர்வாகும் ஆணைக்குழுக்களில் நம்பிக்கையில்லை

## ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

(குருமன்காடு)

**பொதுமன்னிப்பு ஒன்றே நிரந்தர தீர்வாக இருக்க முடியும். ஆணைக்குழுக்களில் நாம் நம்பிக்கை இழந்துள்ளோம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**

சர்வதேச கைதிகள் தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்வேறு குற்றச்சாட்டுகள், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு உலகம் முழுவதும் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நலன் பேணல்கள், எதிர்காலம், மறுவாழ்வு தொடர்பில் கவனம் செலுத்தி சர்வதேச கைதிகள் தினம், இன்று (நேற்று) அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இலங்கையில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு எத்தகைய வழக்கு விசாரணைகளும் இன்றி, நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு, அவர்கள் தமது குடும்பங்களுடன் சேர்ந்து வாழ்வதற்குரிய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

சமூகத்தில் நடமாடுவதற்கும் வாழ்வதற்கும் மறுக்கப்பட்டுள்ள அவர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டால் மாத்திரமே இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் என்பது சாத்தியமாகும்.

இலங்கையில் வாழுகின்ற மற்றைய இனங்களை விடவும் தமிழ் மக்களுக்கென்று தனித்துவமான பல பிரச்சினைகள் இருக்கின்றன. போருக்கு காரணமான அந்த பிரச்சினைகளுக்கு இன்றுவரை தீர்வு காணப்படாமலே உள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் தமது பூர்வீக நிலங்களில் மீளவும் குடியேற்றப்படல், இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு உரித்துடைய காணிகள் விடுவிக்கப்படல், பயங்கரவாத தடைச்சட்டம்- அவசரகால தடைச்சட்டம் எனும் மோசமான தடைச்சட்டங்களைக் கொண்டு கைது செய்யப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்படல், காணாமல் ஆக்கப்பட்டோரின் உண்மை நிலையை கண்டறிதல் என்று நீளும், தவிர்க்க முடியாத பல பிரச்சினைகள் உண்டு.

காலத்துக்குக் காலம் இப்பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று வாக்குறுதிகளைக் கூறி, தமிழர் வாக்குகளை பயன்படுத்தி ஆட்சிபீடமேறுகின்ற அரசாங்கங்கள், பிரச்சினைகளை தட்டிக் கழித்து காலம் கடத்தியே வந்திருக்கின்றன.

எனவே, மைத்திரி- ரணில் கூட்டு அரசாங்கமாவது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் நடந்துகொள்ளும் என்ற நம்பிக்கையிலே தமிழ் மக்கள் உள்ளனர்.

நீதிக்கு புறம்பான கைதுகள் தடுத்து வைப்புகளை கண்டித்தும், சிறைப்படு, கொலைகள், தாக்குதல்களுக்கு நீதி கோரியும், தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு மற்றும் விடுதலையை வலியுறுத்தியும், கடந்த கால அரசுகளுக்கு எதிராக பல்வேறு பட்ட ஜனநாயக, கவனயீர்ப்பு போராட்டங்களை நாம் நடத்தியிருக்கிறோம்.

ஜெனிவா அமர்வுகள் கூடுகின்ற சந்தர்ப்பங்களின் போது விசேட நீதிமன்றங்களை உருவாக்கி அதனூடாக வழக்குகளை விசாரித்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்தப்போவதாக கூறிவரும் அரசு, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் கால இழுத்தடிப்புக்களை செய்து வருகின்றது.

அவர்கள் மீது எந்த ஒரு குற்றத்தை இனி நீங்கள் பதிவு செய்தாலும்கூட, சட்டத்தில் அந்த குற்றத்துக்கு கொடுக்கப்படும் சிறைத் தண்டனை காலத்தை விடவும் அவர்கள் அதிகமான காலத்தை சிறைகளில் கழித்துவிட்டார்கள். அப்படி நோக்கின் மேலதிக தண்டனை வழங்கி சீரழிக்கப்பட்டுள்ள அவர்களின் இளமைக்கால வாழ்க்கை சூனியமாக்கப்பட்டுள்ளது. இதுகூட ஒருவகையான அடிப்படை மனித உரிமை மீறலே.

கடந்த கால ஆணைக்குழுக்களுக்கு என்ன நடந்தது? அவற்றின் உண்மைத்தன்மை என்ன? அவற்றின் சுயாதீனம் எந்த வரையறைகளுக்குட்பட்டது? என்பன பற்றியெல்லாம் நாம் நன்கு அறிந்து வைத்திருக்கிறோம்.

நீதிமன்றங்களில்கூட நடைபெற்று வரும் வழக்குக்குரியவர்களின் வழக்கு விசாரணைக் காலத்தை துரித கதியில் முடிவுறுத்தாமல் பத்து முதல் பன்னிரண்டு மாதங்களுக்கென்று திகதியிட்டு ஒத்தி வைத்து நீடிப்புச் செய்வதானது கவலையளிக்கின்றது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆயுதக் கொள்வனவு விவகாரங்களுக்கு பொறுப்பானவர் என்று கண்டறியப்பட்டுள்ள கே.பிக்குகூட, அவர் பாரிய குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டுள்ளார் எனும் குற்றச்சாட்டுக்கு தேவையான போதிய ஆதாரங்கள் இல்லை என்று உச்சநீதிமன்றம் அண்மையில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கூறியுள்ளது.

ஆனால், தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீதான விசாரணைக்கு உங்களிடம் உள்ள உச்சகட்ட ஆதாரமே அவர்களின் குற்றப்பத்திரிகை (குற்ற ஒப்புதல் வாக்கு மூலம்) மாத்திரமே ஆகும்.

எனவே, ஆணைக்குழுக்களை அமைத்தல், நியமித்தல் என்ற செயற்பாடுகளில் நாமும் அரசியல் கைதிகளும் அவர்களின் பெற்றோர், உறவினர்களும் நம்பிக்கை இழந்து போயுள்ளோம். அது இன்னும் தமிழ் அரசியல் கைதிகளின் வாழும் காலத்தை இழுத்தடிப்பதற்கான ஏமாற்று வித்தையாகவே அமையும்.


எனவே, பொதுமன்னிப்பு அடிப்படையில் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதே எமது அழுத்த திருத்தமான கோரிக்கையாகும்.

அதுவே நீண்ட காலமாக தொடரும் இப்பிரச்சினைக்கு உரிய தீர்வாகவும் அமையும்.

எனவே நிரந்தரமான உறுதியான முடிவைக்காண பொது மன்னிப்பு என்ற அடிப்படையில் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்று புதிய அரசை நாம் கோருகின்றோம். எமது உறவுகளான தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் இதயசுத்தியுடன் கரிசனை கொண்டு அவர்களின் விடுதலைக்காக மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்துவதாகவும் அவரது செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (2-250)









மகாகவி பாரதியாரின் நினைவு தினம் நேற்று முன்தினம் குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள பாரதியார் சிலையடியில் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்மணி அகளங்கனின் "செந்தழிழும் நாப்பழக்கம்" எனும் நூலும் வெளியிடப்பட்டது. பாரதியின் பெருமைகளை பறைசாற்றும் கவிதையினை குரும்பையூர் ஐங்கரன் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது
(படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# வாகன விபத்தில் ஆணொருவர் பலி

## வாகனத்துடன் சாரதி தப்பினார்



(மல்லாவி)

கிளிநொச்சி பரந்தன் உமையாள் புரம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஆணொருவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சடலம் வாகனத்தில் நசியுண்ட நிலையில் மோசமாக சிதைந்துள்ளமையால் அடையாளம் காண முடியாதுள்ளதாகவும் விபத்துடன் தொடர்புபட்ட சாரதி வாகனத்துடன் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸாரின் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இப்பரிதாப சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் உமையாள் புரம் ஏ-9 வீதி 261 ஆவது மைல்கல் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, பிரஸ்தாப நபர் வீதியால் சென்று கொண்டிருந்த வேளை வாகனம் ஒன்று மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது. இதன்போது அவர் அவ்விடத்தில் பலியானார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (2-15)

## சர்வதேச விசாரணையை வலியுறுத்தும்

# நடைபயணம் நேற்று பளையிலிருந்து ஆரம்பம்

(மல்லாவி)

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் இருந்து ஆரம்பமான நடைபயணம் மூன்றாவது நாளான நேற்று காலை 9 மணியளவில் பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணம் ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஆனையிறவில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பயணம் பளையுடன் நிறைவு பெற்றது.

இப்பயணத்தில் வடமாகாணசபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோருடன், காணாமல் போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் உள்ளிட்டோரும் பங்கெடுத்திருந்தனர்.

ஆரம்ப நிகழ்வில் கருத்து தெரிவித்த சிவாஜிலிங்கம்,

சர்வதேச விசாரணையை வலியுறுத்திய மூன்றாம் நாள் பயணம் பளையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்றைய நடைபயணத்தின் முடிவு கொடிகாமம் பகுதி என




தாம் எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை கருத்து தெரிவித்த அனந்தி சசிதரன்,

தமது மூன்றாவது நாள் பயணம் இன்று (நேற்று) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தம்முடன் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் போனோரின் உறவுகளும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தம்முடன் இணைந்துள்ளதாகவும் நாளுக்கு நாள் புதியவர்கள் தமது பயணத்தில் இணைந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இப்பயணத்திற்கு மக்கள் பாரிய ஆதரவினை வழங்கி வருவதாகவும் சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் என்பவற்றை வழங்கி ஆதரவு தெரிவித்து வருவதாகவும் இந்தப் பயணம் மக்களின் ஆதரவுடன் வெற்றிகரமாக நாளைய தினம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நிறைவடையும் என்றும் அவர் கூறினார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமல் கிழவி போக
தும்மல் கிழவி வந்தாளாம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சர்வதேச விசாரணையை மைத்திரி வலியுறுத்த வேண்டும்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக இலங்கை அரச பிரதிநிதிகள் ஜெனிவாவுக்குச் சென்றுள்ளனர்.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை தமிழ் மக்கள் வலியுறுத்தி வரும் வேளையில்-சர்வதேச விசாரணை தேவை என்ற தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேறி இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இலங்கையில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்ற தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேறுவதன் பக்கபலமாக அமெரிக்கா இருந்தது.

வன்னிப்பெரும் நிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்பின் கொடூரங்கள் தமிழ் மக்களை பேதலிக்கச் செய்த போதிலும் அமெரிக்காவின் முயற்சியும் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானமும் இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை தரும் என்றும் இதன் வழி போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்றும் தமிழ் மக்கள் மலையாக நம்பியுள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கையில் நடந்த தேர்தல் புதிய ஜனாதிபதி-புதிய ஆட்சி என்ற சூழமைவைத் தோற்றுவித்தது.

சர்வதேச விசாரணை இடம்பெறவேண்டுமாக இருந்தால் மகிந்த ராஜபக்ஷவை முதலில் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என தமிழ் மக்கள் நினைத்தனர். அதன்படி ஜனாதிபதித் தேர்தலின்போது ஒட்டுமொத்தத் தமிழர்களும் சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கினர்.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல், அதிலும் ரணில் பிரதமர் என்றவாறு ஆட்சி அமைந்தது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக மீண்டும் வருவாராயின் சர்வதேச விசாரணைக்கு அவர் ஊறு விளைவிப்பார் என்று கருதிய தமிழ் மக்கள், மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கியபோது சர்வதேச விசாரணை நிறுதிட்டமாக நடக்கும். இதற்கு இலங்கையின் புதிய அரசு ஒத்துழைக்கும் என்று நம்பினர்.

ஆனால் புதிய அரசும் சர்வதேச விசாரணையைத் தடுத்து நிறுத்துவதில் தீவிரம் காட்டி வருவது தமிழ் மக்களுக்கு பலத்த ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கியிருந்தால், சர்வதேச விசாரணை நடந்திருக்குமோ! என்று தமிழ் மக்கள் எண்ணும் அளவில் நிலைமை வந்துவிடக்கூடாது.

எனவே சர்வதேச விசாரணையை ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான புதிய அரசு வரவேற்க வேண்டும். இலங்கையில் இன அழிப்பு நடந்ததா? என்பதை தீர்மானித்து தீர்ப்பளிக்கும் பொறுப்பை சர்வதேசத்திடம் விடுவது இந்த நாட்டில் இன ஒற்றுமை ஏற்படுவதற்குப் பேருதவியாக அமையும்.

எனவே ஜனாதிபதி மைத்திரி மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். மகிந்தவின் ஆட்சியில் தங்கள் உறவுகளைப் பறிகொடுத்த தமிழ் மக்கள் தங்களுக்கு நீதி வேண்டும் எனக் கேட்கின்றனர். இந்த நீதியை சர்வதேசம் வழங்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்ப்பை-கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரி நிறைவேற்றித் தரவேண்டும்.

# நினைவுச் சின்னத்துக்கான பணத்தை மீளச் செலுத்துமாறு அரசு பணிப்பு

அரசாங்க பணத்தை பயன்படுத்தி மெதமுல்லையில் டீ.ஏ.ராஜபக்ஷ அறக் கட்டளையினால் நிர்மாணித்த குடும்ப நினைவுச்சின்னத்துககாக செலவிட்ட பணத்தை மீண்டும் அரசாங்கததுககு செலுத்துமாறு அறிவிப்பு ஒன்று விடுக்கப் பட்டுள்ளது.

இவ் நினைவுச்சின்னம் மற்றும் அருங்காட்சியகம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெற்றோரின் கல்லறையுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அதற்காக காணி மீட்டல் கூட்டுத் தாபனத்தின் எட்டரை கோடி பணம் செல விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க பணத்தை தனியார் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது தவறு என்பதனால் அப்பணத்தை மீண்டும் செலுத்துமாறு இதனூடாக டீ.ஏ.ராஜபக்ஷ அறக்கட்டளைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இப்பணத்தை செலுத்துவதாக தேர்தலுக்கு முன்னர் டீ.ஏ.ராஜபக்ஷ அறக்கட்டளையினர் குறிப்பிட்டிருந்தனர் எனினும் இதுவரையில் அப்பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை என குறிப்பிடப்படுகின்றது.

மேலும் குறித்த கல்லறை நினைவுச்சின்னம் குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வலம்புரி பத்திரிகையுடன் இணைந்து நடத்தும் "இந்துவாக வாழ்வோம்" வினா விடைப்போட்டிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மற்றும் பரிசளிப்பு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 12.30 மணிவரை இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெறும். (இ-7)

# பிரதியமைச்சர்கள் குறித்து சிவில் சமூகம் அதிருப்தி!

(கொழும்பு)

புதிய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள பல பிரதியமைச்சர்கள் குறித்து பல சிவில் சமூக பிரதிநிதிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக நிசாந்த முத்துவெட்டுகம, லக்ஸ்மன் வசந்த பெரேரா, நிமால் லன்சா ஆகிய மூன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுககு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அரசு சார அமைப்புகளின் பிரதிநிதிகள் தீவிர குற்றப்பின்னணியை கொண்ட இவர்களை நல்லாட்சி அரசாங்கம் பிரதியமைச்சர்களாக நியமித்தமை குறித்து ஏமாற்றம் வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலின்போதும், பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களின்போதும் ஐக்கிய தேசிய கட்சி கூட்டணியால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட நபர்களுககு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன என சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவர்களை நியமித்திருப்பது தார்மீக நெறிகளுககு முரணானது, இவர்களின் கடந்த காலங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமட. அவர்கள் குற்றவாளிகள் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே பிரதியமைச்சர் பதவிகளை வழங்கவேண்டும்,

அரசாங்கம் இந்த நடவடிக்கையை முன்னெடுக்காவிட்டால் அதற்கான அழுத்தங்களை கொடுப்பதற்கு தயாராக வுள்ளோம் என சிவில் அமைப்புகள் தெரிவித்துள்ளன. (எ-11)

# இயேசுவின் கேள்விக்கு சங்கடங்களின்றி சரியான பதில் கொடுப்போம்



'நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?"'நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?" என்று இயேசு இரு கேள்விகள் கேட்கும் பகுதி இன்றைய பைபிள் பகுதியாக எமக்கு தரப்படுகிறது.

'நான் யார்?" என்ற கேள்விக்கு விடை தேடலின் விளைவாக, உன்னையே நீ அறிவாய்" பதிலாகும் என்று கிரேக்கப் பேரறிஞர் சாக்ரடீஸ் கூறிச்சென்றார். தன்னை அறிதலே அனைத்து அறிவுகளிலும் தலைசிறந்தது. ஏனைய அறிவுகள் அனைத்தும் இதன் தொடர்ச்சியாக உருவாகின்றன என்பது சாக்ரடீஸ் கூறிய பெரும் உண்மை. நம்

## பரமபிதா காட்டிய பாதை

முடைய வாழ்க்கையில் நான் யார் என அறிய நம்மை நாமே தேடிய அனுபவங்கள் நமக்கு உண்டு. நம்மை நாமே தேடும் நேரங்களில் பல கேள்விகள் நம் உள்ளத்தில் எழுந்திருக்கும். அவற்றில் மிக முக்கியமாக நம் மனதில் எழுந்த ஒரு கேள்வி: 'நான் யார்?" என்ற கேள்வி. இயேசுவுக்கும் இந்தக் கேள்வி எழுந்தது.

'நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?" இயேசு இக்கேள்வியை எம்மிடம் இன்றும் கேட்கிறார். மக்கள் இயேசுவைப்பற்றி என்ன சொல்கிறார்கள்? என்னென்னவோ சொல்லி விட்டார்கள். இன்னும் சொல்லி வருகிறார்கள். நல்லதும், பொல்லாததும். உண்மையும், பொய்யும். விசுவாசச் சத்தியங்களும், கற்பனைக் கதைகளும். அளவுக்கதிகமாகவே சொல்லிவிட்டார்கள். ஆனால், இவ்வளவு சொல்லியும் இயேசுவைப்பற்றி முழுமையாக நம் மனிதகுலம் சொல்லிவிட்டதா என்று கேடடால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இயேசு இவர்தான், இப்படிப்பட்டவர்தான் என்று சொல்வது மிகக் கடினம். இலக்கணங்களை, வரையறைகளை, வேலிகளை உடைப்பது இயேசுவின் இலக்கணம்.

'நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?" எம்மைப் பார்த்து இயேசு கேட்கிறார். 'நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?" என்ற கேள்விக்கு நாம் படித்தவைகளை, மனப்பாடம் செய்தவற்றை கொண்டு பதில்களைச் சொல்லி விடலாம். ஆனால், இந்த இரண்டாவது கேளவிக்கு அப்படி எளிதாகப் பதில் சொல்லி விட முடியாது. நாம் படித்தவற்றைவிட, பட்டுணர்ந்தவையே இக்கேள்விக்குப் பதிலாக வேண்டும்.

நாம் மனப்பாடம் செய்தவற்றைவிட, மனதார நம்புகிற வையே இக்கேள்விக் கான பதிலைத் தரமுடியும். இக்கேள்வி எமக்கு சங்கடங்களை உருவாக்கலாம். 'என்ன இது. என்ன சொல்வது என புரியவில்லை என உணர்ந்தால், இது ஒரு நல்ல ஆரம்பம். இயேசுவின் இந்தக் கேள்வி வெறும் கேள்வி அல்ல. ஓர் அழைப்பு. 'என்னைப்பற்றிப் புரிந்து கொள். என்னைப் பற்றிக்கொள். என்னைப் பின்பற்றி வா" என்று பலவழிகளில் இயேசு விடுக்கும் அழைப்பு.

இயேசுவை பற்றி அறிவதற்கு வெறும் புத்தக அறிவு போதாது. அப்படி நாம தெரிந்துகொள்ளும் கடவுளைக் கோவி லில் வைத்துப் பூட்டிவிடுவோம். ஆனால்,இயேசுவை அனுபவத்தில் சந்தித்தால், வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்படும். பல சவால்களைச் சந்திக்க வேண்டும். நம் மனதைக் கவர்ந்த ஒருவரை, கருத்தளவில் புரிந்து கொள்வதோ, அவரைப் புகழ்வதோ எளிது. அவரைப் போல வாழ்வதோ, நம்பிக்கையோடு அவரைத் தொடர்வதோ எளிதல்ல.

இயேசுவைப்பற்றி தெரிந்துகொள்ள, அவரைக் கண்டு பிரமித்துப் போக, அவரை ரசிக்க கேள்வி அறிவு, புத்தக அறிவு போதும். அந்த பிரமிப்பில் நாம் இருக்கும்போது, இயேசு நம்மிடம் 'நான் யார் என்று மக்கள்சொல்கிறார்கள்?" என்று கேட்டால் நம் பதில்கள் ஆர்வமாய் ஒலிக்கும்.

ஆனால், அந்த பிரமிப்பு, ரசிப்பு இவற்றோடு மட்டும் நாம் இயேசுவை உலகறிய பறைசாற்றக் கிளம்பினால், புனித பவுல் சொல்வது போல், 'ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும் போலாவோம்." எனவே, இயேசு நம்மை அடுத்த நிலைக்கு வருவதற்கு கொடுக்கும் அழைப்பு தான் 'நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?"என்ற கேள்வியாக எழுகிறது. இது சாதாரண அழைப்பு அல்ல. அவரை நம்பி அவரோடு நடக்க, அவரைப்போல் நடக்க, இரவானாலும், புயலானாலும் துணிந்து நடக்க அவர் தரும் ஓர் அழைப்பு. வாழ்வில்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திரப் பத்திரிகையாளர்


மாற்றங்களை ஏற்படுத்தி கொடுக்கப்படும் இந்த அழைப்பிற்கு, மனதின் ஆழத்திலிருந்து நம் பதில்களை வரவழைப்போம்.

இயேசுவின் இந்த அழைப்பைப் புரிந்தும் புரியாமலும், சீமோன்: 'நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று பதிலளித்தார். பேதுருவின் பதில் வெறும் கருத்துக்களைத் தாண்டி, விசுவாசத்தின் அறிக்கையாக ஒலிக்கிறது. விசுவாசம் என்பது மனித அறிவு சார்ந்த முயற்சிகளைத் தாண்டி, இறைவன் வழங்கும் ஒரு கொடை. கிறிஸ்துவின் மீது கொள்ளும் தனிப்பட்ட ஓர் உறவால், அவரிடம் முழுமையாக சரண் அடையும் ஒரு முயற்சி.


இயேசுவுடன் தட்டுத் தடுமாறி நடைபயின்ற பேதுரு, இயேசுவைத் தம் சொந்த அனுபவத்தில் சந்தித்த பின், இறுதி மூச்சு வரை உறுதியாய் இருந்ததுபோல், நாமும், சொந்த அனுபவத்தில் இயேசுவை உணர்ந்து, 'நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?" என்ற இயேசுவின் கேள்விக்கு சாங்கடங்களின்றி துணிவோடு சரியான பதில் கொடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுகுகளின் உதைபந்தாட்ட போட்டி சென்.ஜோசப், ஞானமுருகன் வெற்றி








நெற்கொழு கழுகுகள் வி.க. நடத்தும் வடமாகாண ரீதியான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியிலே 09.09.2015 அன்று நடைபெற்ற போட்டியில் மன்னார் சென்.ஜோசப் வி.க மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் வி.க ஆகிய அணிகள் வெற்றிகொண்டன.

மன்னார் சென்.ஜோசப் அணிக்கும் பலாலி விண்மீன் அணிக்கும் இடையிலான முதலாவது போட்டியில் முதல் பாதி நேர ஆட்டத்தினை சென்.ஜோசப் தனதாக்கிக் கொண்டது. இதில் 28 ஆவது நிமிடத்தில் சென்.ஜோசப் வீரர் றெக்சனால் பெறப்பட்ட கோல் பதிவினைத் தொடர்ந்து 40, 45 ஆவது நிமிடங்களில் நட்சத்திர வீரர் டிக்கோணி மற்றும் லெமென்ரன் ஆகியோர் கோலினைப் பெற்றுக்கொடுத்தனர்.

முதற்பாதியின் போது சென்.ஜோசப் 3:0 என முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய விண்மீன் வீரர் வியஜராஜ் இரண்டு கோலினைப் பெற்றுக்கொடுக்க சென். ஜோசப் வீரர் டிக்கோணியால் மேலும் ஒரு கோல் பெறப்பட ஆட்டத்தில் சென் .ஜோசப் 4:2 என வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனான டிக்கோணி தேர்வு செய்யப்பட்டார்.

இரண்டாவது போட்டியாக இடம்பெற்ற மயிலங்காடு ஞானமுருகன் எதிர மன்னார் சென்.லூசியஸ் இடையிலான போட்டியானது ஆரம்பம் முதல் அனல் பறக்கும் ஆட்டமாகக் காணப்பட்டது. 21 ஆவது நிமிடத்தில் ஞான முருகன் தவரூபன் முதலாவது கோலினைப் பதிவுசெய்ய முதல் பாதி ஆட்டம் 1:0 என காணப்பட்டது. விறுவிறுப்புடன் ஆரம்பமான இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஞான முருகன் பார்த்தீபன் 67 நிமிடத்தில் கோல் அடித்து அதிர்ச்சியளித்தார்.

மீண்டும் சுறுசுறுப்பான சென்.லூசியஸ் பிராங்கிளின் மூலம் தனது முதலாவது கோலினை 67 ஆவது நிமிடத்திலும் தொடர்ந்து பிங்கோவும் பதிவுசெய்ய ஆட்டம் 2:2 என சமநிலையானது. ஆட்ட நேர முடிவுக்கு 4 நிமிடம் இருக்கையில் ஞானமுருகன் சுமித் ஒரு கோலினை அடித்ததன் மூலம் 3:2 என ஞானமுருகன் வெற்றி கொண்டது. பல சந்தர்ப்பங்களைத் தடுத்த கோல் காப்பாளர் சயந்தன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

அணிக்கான பரிசினையும் சிறந்த ஆட்ட நாயகனுக்கான பரிசினையும முன்னாள கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் வியாகேசு மற்றும் ஓய்வு நிலை உதவி கல்வி பணிப்பாளர் வல்லிபுரம் வழங்கிக் கௌரவித்தனர். (க)

## இன்றைய போட்டிகள்

நெடுயகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் 11நபர் 15 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அளவெட்டி மத்திய அணியை எதிர்த்து கலைமகள் அணியும்

முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மானிப்பாய் M.V.S.C அணியை எதிர்த்து தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகமும்

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து காந்தி நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

\- - - - -

DRAYTON POST OFFICE AND STORES LONDON அனுசரணையுடன் மாதனை விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டியின் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மைக்கல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிகுமரன் விளையாட்டுக்கழகமும்

முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பத்தனை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நெல்லியடி RCC விளையாட்டுக் கழகமும்

முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் காமாட்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சுன்னாகம் கிங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

\- - - - -

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழ்கம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கலைவூாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழகமும்

மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் உடற்கல்வி ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.


\- - - - -


யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் வடமாகாண விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் ஆடிப்பிறப்பினை முன்னிட்டு நடத்திய சிறப்பு தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டு மைதானத்தில் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்க தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் A அணியை எதிர்த்து ஆலடி உடுவில் சிந்து B அணி மோதவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டு அலுவலர்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ஆனோல்டும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## மருதங்கேணி கணேசானந்தாவை வீழ்த்தி சம்பியனாகியது தாளையடி சென்.அன்ரனிஸ்










வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக் கழகத்தை 58 ஓட்டங்களால் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது தாளையடி சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தாளையடி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப பெற்றது. அதிகபட்சமாக றெமிசன் 37 ஓட்டங்களையும், லதீபன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கணேசானந்தா லோகனன், விது ஆகியோர் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

134 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கணேசானந்தா அணி எதிரணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுத்து ஓட்டங்களைப் பெறுவதற்கு பெரும் சிரமங்களைச் சந்தித்ததுடன் 67 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக லோயனன் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சென்.அன்ரனிஸ் அணி சார்பாக றெமின்சன் 3 இலக்குகளையும் லதீஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாகவும் தொடர் ஆட்டநாயகனாகவும் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தைச்சேர்ந்த றெமின்சன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பளுதூக்கல் போட்டி-2015



இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான 2015 ஆம் ஆண்டுக்கான பளுதூக்கல் போட்டியானது ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி பெரதெனியா பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பளுதூக்கும் அணியின் உறுப்பினர் எம்.என்.சித்திக் 105 கிலோவிற்கு மேற்பட்ட எடைப்பிரிவில் Snatch 85kg + Clean & Jerk 115 kg, Total 200kg ஆகிய எடைகளைத் தூக்கி 1ஆம் இடத்தைப்பெற்று புதிய சாதனையை படைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இப்போட்டிக்கு ஜி.டி.மதியழகன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியின் முகாமையாளராக கடமையாற்றினார்.

இவ்வணிக்கு எம்.இளம் பிறையன் பயிற்றுநராக செயற்பட்டிருந்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அகதிகள்...

டுக்களின் அடிப்படையில், இலங்கையைச் சேர்ந்த சிவனேஸ்வரன், மகேஸ்வரன் தங்கவேல், மகேஸ்வரன் கந்தவனம், சுரேஸ் குமார் ஞானசுந்தரம் மற்றும் கிருஷ்ண மூர்த்தி கந்தசாமி ஆகிய 5 பேர் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் இவர்கள் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள அகதிகள் சிறப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தங்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இவர்கள் கால வரையற்ற உண்ணாவிரதப் பேராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (எ-11)

## ஐ.எஸ்.அமைப்புக்கு...

தற்போது தெரிய வந்துள்ளது.

அத்துடன் அமெரிக்காவின் சீஐஏ, பிரிட்டனின் எம்ஐ , இஸ்ரேலின் மொசாட் மற்றும் இந்தியாவின் றோ போன்ற உளவு அமைப்புகளும் இது குறித்த தகவல்கள் ஏதும் இல்லை என்பதாக குறித்த செய்தியினை நிராகரித்துள்ளதாகவும் திவயின பத்திரிகை செய்தி தெரிவிக்கின்றது. அந்த வகையில் குறித்த செய்தி இலங்கையின் ஊடகங்கள் கட்டியெழுப்பிய பொய்ப் பிரசாரங்களில் ஒன்றாகவே கருதப்பட வேண்டியிருப்பதாகவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் பின்னணியில் அமெரிக்கா செயற்படுவதாக அமெரிக்காவின் முன்னாள் புலனாய்வு அதிகாரி எட்வர்ட் ஸ்நோடன் அண்மையில் பரபரப்புத் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இணக்கப்பாட்டை...

பேற்று பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அமைச்சர் இங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது,

இரண்டு கட்சிகளுக்கும் மக்கள் பெரும்பான்மையை வழங்கவில்லை. தேசிய அரசொன்று அமைக்கப்பட வேண்டுமென்பதற்காகவே மக்கள் இவ்வாறான தீர்ப்பை தேர்தலில வழங்கினார்கள். எனவே கொள்கையொன்றின் வரையறைக்குள் ஆட்சி யொன்றை ஏற்படுத்தியிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும்.

தற்போதைய ஆட்சிக்கு தேசிய அரசு எனக கூறுவதை விட இணக்கப்பாட்டு ஆட்சி எனக் கூறுவதே பொருத்தமானதாக அமையும். எதிர்க்கட்சித் தலைவரை நியமிக்கும் விடயத்தில் சரியான நேரத்தில் சரியான முறையில் சரியான முடிவு எடுக்கப்பட்டிருந்தால் இதனை விட சிறப்பான நிலைமை ஏற்பட்டிருக்கும்.

2004 மற்றும் 2010 ஆம் ஆண்டு தேர்தல்களின் போது தேசியப் பட்டியல் தொடர்பாக எவ்விதமான குறைபாடுகளும் இருக்கவில்லை. குற்றச்சாட்டுகளும் இருக்கவில்லை.

ஆனால் இம்முறை தேசியப் பட்டியல் தொடர்பில் எனது பங்களிப்பு கிடையாது. எனவே என்மீது எந்தக் குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் என்ற ரீதியில் நான் ஒரு தீர்மானத்தை எடுத்தேன். தேர்தலின் பின்னர் கட்சியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி எதிர்க்கட்சித் தலைவராக நிமால் சிறிபால டி சில்வாவை நியமித்து அது தொடர்பில் சபாநாயகருக்கு கடிதமொன்றை கையளித்தோம். அப்போது நாம் அரசின் பங்காளிகளாக இருக்கவில்லை. பின்னர் நான் ஐ.ம.சு.முன்னணியின் செயலாளர் பதவியிலிருந்து வெளியேறினேன். வெளிநாடு சென்றேன். பின்னர் திரும்பி வந்தபோது அனைத்தும் மாற்றமடைந்திருந்தது.

எனக்கெதிராக தடையுத்தரவு அமுலில் இருக்கையில் சிலர் ஊடகவியலாளர்கள் மாநாடுகளை நடத்தினர்கள். தேங்காய் உடைத்தார்கள். நான் மேற்கொண்ட முயற்சிகளை கண்டுகொள்ளவில்லை. புரிந்து கொள்ளவும் இல்லை என்றார். (எ-11)

## ஐ.நா...

இந்த அறிக்கைக்கு ஐந்து நாட்களுக்குள் எழுத்து மூலமான பதிலை அளிக்குமாறு அரசாங்கத்திடம், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகம் கோரியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஐ.நாவின் விசாரணை அறிக்கையும், அந்த அறிக்கை தொடர்பான இலங்கையின் பதிலும், வரும் 30ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (எ-11)

## சர்வதேச...

வதற்கு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இந்தியா ஆதரவளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளதாக கொல்கத்தா ரெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 30-வது கூட்டத்தொடர் நாளை 14ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக உள்ளகப் பொறிமுறையையே இந்தியா வலியுறுத்தி வரும் நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு விஜயம் செய்வதற்கு மூன்று நாட்கள் முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொள்வதற்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் ஆதரவை தாம் எதிர்பார்ப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கொல்கத்தா ரெலிகிராபிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சம்பந்தன், கொல்கத்தா ரெலிகிராபிடம் கூறுகையில், அரசாங்கத்தால பரிந்துரைக்கப்படும் உள்நாட்டு விசாரணை உண்மையாகவும், சுயாதீனமானதாகவும் இருக்க முடியாது என்பது எமது கடந்தகால அனுபவம்.

இந்தப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கருத்து முரண்பாடுகள் இல்லை.

இலங்கையின் புதிய அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் அதிகமாக ஒத்துழைத்துச் செயற்படுகின்ற போதிலும், சர்வதேச விசாரணை அவசியம் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தெளிவான நிலைப்பாடு என கொல்கத்தா ரெலிகிராபிடம் சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## சந்திரிகாவுக்கு...

பதவி தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்தப் பதவி தேசிய நல்லிணக்கம் மற்றும் அமைதி ஆகியவற்றின் மீதான பொறுப்புக் கொண்டதாக அமையவுள்ளதாகவும், இப்பதவிக்கு சந்திரிகா குமாரதுங்க நியமிக்கப்பட்ட பின்னர் தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் மீள்கட்டமைப்பு தொடர்பான ஆலோசனைகளையும் அவரே வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பதவியை ஏற்றுக் கொள்வது தொடர்பில் சந்திரிகா குமாரதுங்க விருப்பம் தெரி வித்துள்ளதாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் இந்தப் பதவியில் அவர் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (எ-11)

## நீதிக்கான...

கள் கூட்டமைப்பு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் அமெரிக்க ஊடகவியலாளர்களுக்கு தெளிவான விளக்கமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த ஆவணப்படம் திரையிடப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பு அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் இந்து அமெரிக்கன் பவுண்டேசன் அமைப்பு நீதிக்கான தேடல் ஆவணப்படத் திரையிடலுக்கான அனுசரணையை வழங்கியுள்ளது. (எ-11)

## லொறி-தனியார்...

தீனமாக எவ்வித உயிர் சேதமும் ஏற்படவில்லை. பருத்தித்துறை ஆவரங்கால் வீதியில் பயணிகளை ஏற்றிக்கொண்டு குறித்த தனியார் பேருந்து பயணிக்க எத்தனித்த போது பேருந்தினை எதிர்ப்பக்கம் வந்த வாகனத்தை அதன் பின்னால் வந்த பாரவூர்தி முந்திச்செல்ல முற்பட்ட போதே குறித்த விபத்து சம்பவம் நிகழ்ந்துள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதில் தனியார் பேருந்தில் பயணம் செய்த பயணிகளில் தொண்ணூறு வீதமானோர் காயமடைந்துள்ளனர். மேலும் பாரவூர்தியின் சாரதி, தனியார் பேருந்தின் சாரதி ஆகியோரும் விபத்தில் காயமடைந்துள்ளனர். தனியார் பேருந்தில் பயணம் செய்த இருபத்தியொரு பெண்கள், பதினொரு ஆண்கள், மூன்று சிறுவர்கள் மற்றும் ஒன்பது மாத குழந்தை ஒன்றும் காயமடைந்துள்ளது.

இவர்களில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர். ஏனையவர்கள் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். காயமடைந்த அனைவரும் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பாரவூர்தி வேகமாக வந்து தனியார் பயணிகள் மீது மோதியமையால் தனியார் பேருந்தின் முன்பக்கம் சிதைவுற்றுள்ளதோடு பாரவூர்தி வீதியின் கரையே தடம்புரண்டு பலத்த சேதத்துக்கும் உள்ளாகியுள்ளது. குறித்த விபத்து சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கு தேவையான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக அச்சுவேலி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு வைத்தியர் ஜமுனானந்தா தெரிவித்தார், இதேவேளை விபத்தில் காயமடைந்த ஒன்பது மாத குழந்தை, அதன் பெற்றோர் மற்றும் பெண்கள் எவ்வித சிக்கல்களும் இன்றி நலமுடன் இருப்பதாகவும் வைத்தியசாலை தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவம் தொடர்பில் அச்சுவேலி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-4,60)


அமெரிக்க Green Card Lottery -2017

அமெரிக்க Green card Lottery விண்ணப்பத்தில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை Bristol Cyber cafe. No. 8/3/4, Bristol Street, Colombo -01 எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

Tel : 0112393919, 0774276579

W/A 44843 www.bristolcc.biz (C-2122)

GNANI MUSICALS

பியானோ, வீணை உட்பட அனைத்து இசைக்கருவிகள் பழுதுபார்த்தல், விற்பனை, கொள்வனவு செய்யப்படும். (C-2132)

இல.403, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்.
071 777 5757, 077 923 8376


## மரண அறிவித்தல்

### தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆஸ்தான நாதஸ்வர வித்துவான்

### மீனாட்சிசுந்தரம் கோவிந்தராயன்



அவர்கள் 12.09.2015 (சனிக்கிழமை) நேற்று காலமானார். அன்னார் காலம் சென்ற மீனாட்சிசுந்தரம் லீலாவதி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவபாலசுப்ரமணியம் (தவில் வித்துவான்) அவர்களின் அன்புத் தம்பியும் சாந்தி அவர்களின் அன்புக் கணவரும்,

மேகலா, சிந்துபைரவி காலஞ்சென்ற கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வக்குமாரி, தட்சணாமூர்த்தி (தவில் வித்துவான்) துளசிபரன் (தவில் வித்துவான்) ரேவதி, குகன் (நாதஸ்வர வித்துவான்) ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், நாதரூபன், பிரபாகரன் (ஆசிரியர், யா/நயினாதீவு மகா வித்தியாலயம்) பகிரதி ஆகியோரின் மாமனாரும்,

சஜீவன், கஸ்தூரி, கௌசிகா, கஜானா, அம்ஷிகா, கிருஷாந், சந்தோஷ், அர்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13-09-2015 (ஞாயிற்றுக்கிழமை) இன்று அவரது இல்லத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(2143)

தகவல்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு

### கடந்த 17.08.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்த

### இரத்தினம் பூங்காவனம்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 11.09.2015 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 13.09.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(1780)

இல.29, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

பருத்தித்துறையிலுள்ள அச்சகம் ஒன்றுக்கு Photoshop, Ms Office, Internet, Email தெரிந்த பெண்பிள்ளை வேலைக்கு தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(C-2125)

தொடர்புகளுக்கு :- 075 085 4796



"பாதை எதுவானாலும் பழிக்கல் ஒன்றே"

O/L A/L After A/L

"SPOKEN ENGLISH" (120hrs)

அனுபவம் மிக்க நவீன கற்பித்தல் முறை மற்றும் உத்திகளுடன்,

உங்கள் வெற்றி நிச்சயம்

ஆரம்பம்

Batch 1 14.09.2015 @ 9.00 am

Batch 2 18.09.2015 @ 9.00 am

"The only place you can't miss"

VeRni ENGLISH ACADEMY

No-206, Temple Road, Nallur.

R.Manochkumar

077 8085 423

(கைலாசபிள்ளையார் கோவில் முன்னால்)

(C-2128)

## வேலைக்கு ஆட்கள் தேவை

கொத்துரொட்டி சமையல் வேலை தெரிந்த ஆண் -01, சப்பிளையர்ஸ் ஆண் - 01

(05 வருட முன் அனுபவம் தேவை)

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(1750)

தொடர்புகளுக்கு

0778085656

RATNAM HOTEL

665B, Navalar Road, Jaffna.

(கச்சேரி நல்லூர் றோட் சந்திக்கு அருகாமை)

## பாடசாலை சீருடைகள்

எம்மிடம் இருபாலாருக்குமான பல பாடசாலைச் சீருடைகள், உள்ளாடைகள், பாதணிகள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் பிறந்த குழந்தைகள் முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்கள், ஆடைகள், கர்ப்பிணித் தாய்மாருக்கான ஆடைகள், ஏனைய பொருட்கள் விற்பனைக்கு உள்ளன.

குறிப்பு: சீருடை தேவையெனில் எம் கையிருப்பை உறுதிப்படுத்திய பின் வருகை தரவும்

CDL Mart (Pvt) Ltd,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(1745)

(பஸ்தியான் சந்திக்கு அருகில் - இலங்கை வங்கி பிரதான வீதிக்கிளை David Peris Motor Company இயங்கும் கட்டடத் தொகுதியில்)

Phone :- 021 221 7921
075 905 0880

## DAY CLASS

Entries - 14/9/2015 ( 5.00 pm)

**Chemistry**

Sharveswara B.Sc

அறிவாலயம்

No.28, Kumarasamy Road, Kantharmadam.

(பல்கலைக்கழகம் முன்பாக)

**Physics**

Kajan B.Sc

முத்தட்டுமடலேன், கோண்டாவில் மேற்கு

( 0776531177 )

(1748)



A/L பெறுபேற்றுக்காக காத்திருக்காமல்

O/L உடன் விரும்பிய எந்த நாட்டுக்கும் செல்ல

1. UK, Australia, New Zealand, Switzerland, Canada... பல்கலைக்கழக அனுமதி & விசா ஏற்பாடு

IELTS™ Free

2. IELTS இல்லாமல் Poland, Spain, Malaysia, Singapore...

3. மாதம் 3 இலட்சம் வரையில் சம்பாதிக்கக்கூடிய Hotel Management கற்கைநெறி அனுமதிகள் 6 மாதங்களில் வெளிநாட்டு விசா

4. Dubai, Qatar, Bahrain, Oman, Malaysia, Mauritius, Saudi Arabia, Doha, வேலைவாய்ப்புக்கள்

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...

STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA

SIKARAM Any Visa to Any Country

ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள

www.sikaram.lk

Tel: 0777 32 4004 / 021 222 00 11

#275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)

வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

(C-2141)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## மலிவு விலையில் அண்ணா உற்பத்திப் பொதிகள்

நல்லூர் உற்சவ காலத்தில் நல்லூர்

பருத்தித்துறை வீதியில் உள்ள எமது விற்பனை நிலையத்தில் (சிவன் கோயில் பின்புறம்) அண்ணா உற்பத்திப் பொருட்கள் அடங்கிய பொதிகளை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(C-2113)

அண்ணா தொழிலகம்
இணுவில்

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சுமொழியை பிரெஞ்சுமுறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

ஏன் AF இல் FRENCH கற்க வேண்டும்.



- உலகம் முழுவதும் பிரெஞ்சு கற்பதற்கு 1883 இல் PARIS இல்நிறுவப்பட்ட மிகப்பெரிய சர்வதேச நிறுவனம் AF.136 நாடுகளில் 1040 கிளைகள் (இலங்கையில் கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி & யாழில் 1976 முதல்). www.ambafrance.lk.org
- இலங்கையில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் ஒரேநிறுவனம் AF.
- பிரான்ஸ் நாட்டு ஆசிரியர் & யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள்.
- சர்வதேச நிறுவனமொன்றின் CERTIFICATES ஐ பெறுங்கள். இலங்கையில் AF மட்டுமே INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) பரீட்சையைநடத்துகிறது. குறிப்பு : DELF A1 பரீட்சை : AF மாணவர்களுக்கு Rs.3850. ஏனையோருக்கு Rs.9900. (குறுகிய காலத்தில் 3 அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்)
- பிரெஞ்சுமொழி பெயர்புகள். VISA FORM போன்றவை நிரப்புதல்
- யாழ்.வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள்.
- யாரும் படிக்கலாம்.வயதெல்லை இல்லை.

(1749)

வெளிநாடு ஒன்றில் இருக்கும் போது பிரெஞ் பேச தேவையான ஆற்றலை வழங்கிறோம்.

BEST PLACE IN SRI LANKA

உடன் அழைத்து பதிவை உறுதிப்படுத்துங்கள். 021 222 8093

61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளைமாடிக் கட்டடம்)

## Study in Latvia

(Schengen Visa valid for 27 Countries)

ஐரோப்பிய நாடான Latvia வில் குறைந்த செலவில் படிக்க , உழைக்க , குடியேற

- No IELTS
- G.C.E A/L 3 Pass only
- Very low course fees
- High Visa Success rate
- English Medium
- 20 Hours Part time Allowed

Next Intake Feb 2016

நேர்முகத்தேர்வு 25-09-2015

ICS Study Overseas

(C-2131)

77, மணிக்கூட்டு கோபுரவீதி. யாழ்ப்பாணம்

021 7306000, 077 3013060

"உங்கள் வியாபாரத்தின் தன்மைக்கேற்ப மென்பொருள் (Software) தெரிவு மற்றும் உங்கள் வியாபாரத்தை கணணிமயப்படுத்தும் அதனோடு கூடிய பிற கணக்கியல் சேவை மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள

அழையுங்கள் :- 0766202313"

(1740)

## Symart Tec

No. 108E, K.K.S Road, Kokuvil
Next to Kokuvil Hindu College

## CNR WORLD WIDE EXPRESS & TRAVELS

அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)



சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை

(C-2135)

401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062

SPEED LANKA EXPRESS Courier

## வெளிநாடுகளுக்கான தபால் பொதி விநியோக சேவை





(C-2133)

- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 077 62 17 926


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 13.09.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 31








# வீறுகொண்ட

## கையெழுத்துப் போராட்டம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## பிரமிக்க வைக்கும் கையெழுத்துப் போராட்டம்



ஆலடி மாநாடு பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் கூடியது. மாநாட்டிற்கு வாத்தியார் வைத்திலிங்கம், விதானையார் விசுவலிங்கம், கங்காணி கார்த்திகேயன், மூப்பர் ஆகியோர் வந்திருந்தனர்.

ஆலடிப் பிள்ளையார் கோவிலில் விசேட விழாக்கள் இல்லாத காரணத்தால் ஆலடி மாநாடு மாலைப் பொழுதில் ஆரம்பமாகியது.

**பண்டிதர்:** ஆலடி மாநாட்டைத் தொடங்க முதல் இரண்டு நிமிடம் இறைவணக்கம் செய்வம்.

(பண்டிதரின் அறிவித்தலோடு எல்லோரும் எழுந்து நின்று இறைவழிபாடாற்றினர்)

**பண்டிதர்:** நன்றி... நன்றி... நல்லூர்க்கந்தப் பெருமானின்ர தேர், தீர்த்தத் திருவிழாவோட எல்லாரும் களைச்சுப் போனியள் போல. இந்த முறை யாழ்ப்பாண மாநகர சபையின்ர இந்து விடுதிக்கு முன்னால போற வீதியின்ர இருபக்கமும் கடைகளைப் போட்டு சனங்கள் போகமுடியாத அளவில் நெரிசலை ஏற்படுத்திப் போட்டினம்.

**விதானையார்:** யாழ்ப்பாண மாநகரசபைக்கும் பண ஆசை. முந்தியும் பணத்தைச் சேர்த்து வைத்து கடைசியாக தண்ணீரில கரைச்சுத் தாரை வார்த்த மாதிரித்தான் இப்பவும் சேர்க்கினம். உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்து முடிய சேர்த்த பணத்திற்கு என்ன நடக்கும் என்று பார்ப்பம்.

**வாத்தியார்:** என்ன இருந்தாலும் இந்து விடுதிக்கு முன்னால போற வீதியில எந்தக் கடைபோடவும் அனுமதிக்கக்கூடாது.

கோவிலுக்கு வாற சனங்கள் நெருக்கடிப்படாமல் போய் வாறது பற்றியும் யாழ். மாநகர சபை சிந்திக்க வேண்டும். இடம் கிடக்கிறது என்று நினைத்து அளந்தளந்து இடத்தை கடைகளுக்கு ஒதுக்கினால் பணம் வரும் தான். ஆனால் ஆலயத்திற்கு வாற பக்தர்கள் இனியில்லை என்ற கஷ்டப்பட வேண்டும்.

**மூப்பர்:** அது சரி வாத்தியார் எங்கட கையெழுத்துப் போராட்டம்...

**வாத்தியார்:** அதையேன் கேட்கிறியள். சனங்கள் தேடித்தேடிச் சென்றல்லோ கையொப்பம் இடுகினம். வடக்கு கிழக்கு மாகாணங்களில நினைச்சுப் பார்க்கேலாத வெற்றி. சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் நடத்தவேணும் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியதை தமிழர் அமையம் ஏற்றுக்கொண்டது. கையெழுத்துப் போராட்டத்தின்ர வெற்றி காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலங்கிப் போயிற்று.

இந்த அதிர்ச்சியில இருந்து விடுபடுவதற்காக சம்பந்தர் ஐயா அவசர அவசரமாக சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதாக அறிக்கை விட்டார்.

**கங்காணி:** அட சங்கதி அப்படியோ! சர்வதேச விசாரணை முடிஞ்சு போய்ச்சுது. அறிக்கைவரும் வரைக்கும் காத்திருப்போம் என்று கூறிய சம்பந்தமானவர்கள் திடீரென்று குத்துக்கரணம் அடிச்சுது எப்படி?

**விதானையார்:** எல்லாம் அடுத்த தேர்தல் பயம்தான்.

கையெழுத்துப் போராட்டம் நடக்கும் என்று கூட்டமைப்புக்காரர் கனவிலும் நினைக்கவில்லை. தேர்தலுக்குப் பிறகு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பேசாமல் ஒதுங்கியிருப்பார் என்றுதான் கூட்டமைப்புத் தலைமை நினைச்சது. அத்தோட தாங்கள் சொன்னால்தான் கையெழுத்துப் போராட்டம் வெற்றி தரும் என்றும் நினைச்சவியள்.

ஆனால் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பித்ததும் சனங்கள் தாங்களாக முன்வந்து கையெழுத்திட்டினம். இதைக் கண்ட கூட்டமைப்புக்கு அட நாங்கள் பிழை விட்டிட்டம். எங்கட எதிர்காலம் பிழைக்கப்போகுது என்று பயந்து போய் சர்வதேச விசாரணையில் தாங்களும் கவனமாக இருப்பது போல காட்டிக் கொள்ளுகினம்.

**வாத்தியார்:** கையெழுத்துப் போராட்டத்தில சிறிதரன் எம்.பி., சித்தார்த்தன் எம்.பி, சுரேஸ் பிறேமச்சந்திரன் என கூட்டமைப்பைச் சேர்ந்த பலரும் கையெழுத்து வைச்சிருக்கினம். ஆக, இங்கயும் ஒரு சிலர் தான் சர்வதேச விசாரணைக்கு எதிர்ப்பு.

**மூப்பர்:** அரசுக்குக் கொடுத்த வாக்குறுதியை அவர்களும் காப்பாற்ற வேணுமல்லோ! அதுதான் அவையளும்...

**வாத்தியார்:** இந்த நேரத்தில த்லைவர் பிரபாகரன் தான் உயிரோட இருப்பதாகவும் மீண்டும் வருவதாகவும் ஒரு அறிக்கைவிட்டால் எப்படியிருக்கும்.

**கங்காணி:** துண்டக்காணம் துணியைக் காணம் எண்டு சிலபேர் தலைதெறிக்க ஓடுவினம்.

(மாநாட்டில் சிரிப்பு)

**மூப்பர்:** சிலருக்கு மாரடைப்பும் வந்திரும்.

**வாத்தியார்:** நேற்று முன்தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின்ர கூட்டம் கொழும்பில நடந்ததாகக் கேள்வி.

**பண்டிதர்:** வாத்தியார் ஒரு சந்தேகம். இலங்கைத் தமிழரசுக் கட்சியோ, இலங்கை தமிழ் அரசுக் கட்சியோ சரி.

எப்படி எழுதினாலும் அதைத் திருத்தம் செய்து வேட்பு மனுவை ஏற்றுக் கொள்கிற கதிரையில எங்கட ஆள் இருந்தா இரண்டும் சரிதான்.

**விதானையார்:** ஓமோம். மாதிரி வாக்குச்சீட்டுத் தொடர்பான ஒரு செய்திக்கு ஒரு பத்திரிகையை சீல் வைக்கவேணும் எண்டு நின்றவர் சட்டவிரோதமாக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் இருந்து கொண்டு ரெலிபோன் கதைத்ததற்கு என்ன நடவடிக்கை எடுத்தவியள்?

**வாத்தியார்:** இஞ்சே விதானையார் அகப்பை பிடிக்கிற கை நம்ம கை எண்டால் அடிப்பந்தியென்ன நுனிப்பந்தியென்ன?

**பண்டிதர்:** நாங்கள் சில அதிகாரிகளை எவ்வளவு நம்பியிருந்தம். ஆனால்... எல்லாம் இப்பதான் வெளிச்சத்துக்கு வருகுது. கடவுளே நம்பிக்கைத் துரோகத்தையும் பொறுப்பான பதவிகளில் இருந்து கொண்டு செய்யிற துரோகத்தனங்களையும் கடவுள் ஒரு போதும் மன்னிக்கமாட்டார்.

**மூப்பர்:** கதையைவிட்டிட்டு நேற்று முன்தினம் கூடின தமிழரசுக்கட்சியில என்ன நடந்தது எண்டு சொல்லுங்க வாத்தியார்.

**வாத்தியார்:** வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நடுநிலைமை வகித்தமை தொடர்பில் தமிழரசுக்கட்சி விளக்கம் கேட்பதாக முடிவு எடுத்தவியளாம். இருந்தும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கேள்வி.

**விதானையார்:** அது சரி வாத்தியார் முதல்வர் விக்னேஸ்வரன் தமிழரசுக் கட்சியில உறுப்பினராக இருந்தவரோ?

**வாத்தியார்:** அவர் எங்க இருந்தவர். அவரை வடக்கின் முதன்மை வேட்பாளராக நியமித்தால் வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றலாம் என்ற நோக்கத்தில விக்னேஸ்வரன் ஐயாவின்ர வீட்டை போய் நீங்கள் வடக்கு மாகாண சபையின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட வேணும் எனக் கேட்டதாலதான் அவர் ஓம் எண்டு சொன்னவர்.

**விதானையார்:** சம்பந்தர் பழுத்த அரசியல்வாதி. முதல்வர் விக்னேஸ்வரனிட்ட விளக்கம் கேட்டால் அந்தாள் விளக்கக் கடிதத்தைக் கிழிச்சு எறிஞ்சு போடும் எண்டு சம்பந்தருக்குத் தெரியும்.

அதேநேரம் முதல்வர் விக்னேஸ்வரனிட்ட விளக்கம் கேட்டால் நிலைமை மோசமாகும் என்பதும் சம்பந்தருக்குத் தெரியும்.

**கங்காணி:** அப்ப ஏன் கட்சிக் கூட்டத்தில விக்னேஸ்வரன் பற்றிக் கதைத்தவியள்.

**மூப்பர்:** ஏதும் சரிவந்தால் அவரை வெளியேற்றலாமல்லோ.அந்த முயற்சிதான்.


**பண்டிதர்:** என்ன இருந்தாலும் முதல்வர் விக்னேஸ்வரன் ஐயா தலைமையில தனிக்கட்சி ஆரம்பிக்க வேணும் என்பதுதான் என்ர விருப்பம்.

(இப்படிப் பண்டிதர் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணி ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்)

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சர்வதேச விசாரணையில் இருந்து விடுபட பிரதமர் ரணில் கையாண்ட இராஜதந்திரம்


குருஷேத்திரம்

விடுதலைப்புலிகள் அமைப்பு தோல்வியில் முடிந்து போனது என்ற செய்திகளுக்கு அப்பால், விடுதலைப்புலிகள் அமைப்பினால் ஞானஸ்தானம் வழங்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தோல்வியில் முடிந்து போனது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்றபதம் இப்போது பொருத்தமற்றதாகி விட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதை தடுத்து வந்தது.

விபரம் புரியாத கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் தமிழரசுக் கட்சியின் கீழ் போட்டியிடுவதற்குச் சம்மதம் தெரிவித்தன. இப்போதுதான் அவர்களுக்கு நிலைமை புரிகிறது.



என்ன செய்வது? கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பது போல தேர்தலில் தோல்வி கண்ட பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்திருக்கலாம் என்ற நினைப்பு சாத்தியமற்றது என்பதால் கூட்டமைப்பு புதுமையும் புனருத்தாரணமும் பெறுவதே பொருத்துடையது என்று கருதப்படுகிறது.

இதனடிப்படையில் சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் ஓரணியில் திரண்டு கொண்டனர்.

இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தன்வசம் வைத்துள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை செல்வம் அடைக்கலநாதனைத் தங்களுடன் வைத்திருப்பதற்காக அவருக்குப் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியைக் கொடுத்து அவரை ஆசுவாசப்படுத்திக் கொண்டது.

ஆக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று உடைவுற்றுப்போனாலும் பிரபாகரனின் ஆசியைப் பெற்றதால் கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய சிலர் அகால மரணத்திலிருந்து தப்பி நீண்ட ஆயுளைப் பெற்றுக் கொண்டனர்.

இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் பிரபாகரனின் துப்பாக்கிகள் இலக்குத் தவறியுள்ளது. சுடப்பட வேண்டியவர்கள் சுடப்படவில்லை என்று குறைப்படுவோரும் உளர்.

எனினும் மரணங்கள் தடுக்கப்படவேண்டும், துரோகம் செய்பவர்கள் திருத்தப்படவேண்டுமேயன்றி தீர்த்துக்கட்டவேண்டியவர்கள் அல்ல என்பது மனிதநேயத்தை நேசிப்பவர்களின் நிலைப்பாடாக இருக்கும்.

எது எவ்வாறாயினும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பதினாறு ஆசனங்களைப் பெற்றுள்ளதுடன் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவர் பதவியைச் சம்பந்தர் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேவேளை வடமாகாணத்தில் வெற்றிபெற்ற அரசதரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை தடுத்து வருகிறது.

## அற்ப சொற்ப சலுகைகளுக்கு விலைபோன தமிழ்த் தலைமை

ஆக, எதிர்க்கட்சித் தலைமையைப் பெற்றமை வடபுலத்தில் இருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவானவர்களுக்கு அமைச்சுப் பதவியை வழங்காமல் தடுப்பது ஆகிய இரண்டு கருமங்களும் தமது உச்சமான இராஜதந்திரம் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நினைத்துக்கொள்கிறது. உண்மையில் கூட்டமைப்பு நினைப்பது போல இது இராஜதந்திரமன்று. மாறாக இராஜதந்திரமாக நினைக்குமாறு ஆளுந்தரப்பு செயற்பட்டுக் கொள்கிறது.

அதாவது தென்னிலங்கை ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை சர்வதேச விசாரணையில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும். அதற்காக எந்த விட்டுக்கொடுப்பையும் செய்வது தவறில்லை. மாறாக இந்த விட்டுக் கொடுப்புக்கள் நாட்டைப் பாதுகாக்கும் என்று ஆளுந்தரப்புக் கருதுகிறது.

இதன் காரணமாகவே எதிர்க்கட்சித் தலைவர்ப்பதவியை இரா.சம்பந்தருக்கு அரசு வழங்கியதுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு எந்த அமைச்சுப் பதவியும் வழங்காமல் விடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை வடபுலத்தில் ஒரு ஆசனத்தைத் தக்கவைத்து வருகிறது. இதற்குக் காரணம் அமைச்சுப் பதவிதான். கடந்த தேர்தலில் விஜயகலா மகேஸ்வரனின் வெற்றி என்பது சாதாரணமானதன்று. விஜயகலாவுக்கு அளிக்கப் பட்ட வாக்குகள் என்பது விஜயகலாவுக்கும் அவரது கணவர் அமரர் மகேஸ்வரனுக்குமானது.

ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் எந்தப் பிரமுகரோ விஜயகலாவின் வெற்றியில் உரிமை கோர முடியாது.

இவ்விதம் தனியொருவராக நின்று விஜயகலா வெற்றிபெறுவதற்கு மிகுந்த சாதகமாக இருந்த விடயம் அவர் பிரதியமைச்சராகப் பதவி வகித்தமையாகும். இதெல்லாம் பிரதமர் ரணில் அறியாதவரல்ல. அப்படியிருந்தும் விஜயகலா மகேஸ்வரனுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை வழங்காதது ஏன் என்றால்? அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழுத்தம்



தான் காரணம் என்பது தெட்டத்தெளிவாகும். இங்குதான் ஒரு விடயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அழுத்தத்தை ஏற்று, விஜயகலாவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை வழங்காமல் பிரதமர் ரணில் விடுகிறார் எனில்-சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குகிறார் எனில் அதற்குள் கூட்டமைப்பு நிறைந்த உத்தரவாதங்களை பிரதமர் ரணிலுக்கு வழங்கியிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறதல்லவா?

அதில் ஒன்றுதான் சர்வதேச விசாரணையை பேசாமல் விடுவது என்ற விடயமாக இருக்கும்.

தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய தனது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை வழங்காமல் விடுகின்ற அளவில் ரணில் உடன்படும்போது இனப் பிரச்சினைக்கான தீர்வில் நீங்கள் எதுவும் கதைக்கக் கூடாது. நாங்கள் தருவதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற நிபந்தனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடன்படச் செய்திருப்பார் என்பதும் தெளிவு.

ஆக, எதிர்க்கட்சித்தலைவர் பதவி மற்றும் ஆளும்தரப்பின் வடபகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அமைச்சுப் பதவி வழங்காமை போன்றவற்றுக்கான சன்மானம் சர்வதேச விசாரணையில் இருந்து இலங்கையை விடுவிப்பதும் தமிழர்களின் உரிமைகள் விடயத்தில் அழுத்தம் கொடாமல் பேசாமல் இருப்பதுமாகும்.

எது எப்படியாயினும் இன்னும் இரண்டு ஆண்டுகளில் சர்வதேச விசாரணை என்ற விடயம் காலாவதியாகிவிடும். அதன்பின்னர் வடக்கில் மூன்று தமிழ் அமைச்சர்கள் இருப்பர் என்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வித்தைக்காரனை வென்ற கதை



தெனாலிராமன் கிருஷ்ணதேவராயரின் புகழைக் கேள்விப்பட்டு அவரைப் பார்ப்பதற்காக விஜயநகரத்தை நோக்கிப் புறப்பட்டான். பல நாட்கள் அவ்வூரில் தங்கிநின்று முயற்சித்தும் அரசரைக் காண இயலவில்லை. எப்படியாவது அரசரைப் பார்த்துவிடுவது என்று முயற்சித்துக்கொண்டே அவ்வூரிலேயே தங்கியிருந்தான். தினமும் அரண்மனைக்குப் போவதும் திரும்பி வருவதுமாக இருந்தான்.

ஒருநாள், வித்தைகள் செய்து வேடிக்கைகள் செய்து காட்டும் செப்படி வித்தைக்காரனைச் சந்தித்தான். அவனும் அசரிடம் தன் வித்தைகளைக் காட்டிப் பரிசு பெறும் எண்ணத்துடன் இருப்பதைப் புரிந்துகொண்டான். அவனுடனேயே தானும் ஒரு வித்தைக்காரனைப் போல் சேர்ந்துகொண்டான்.

அரசர் கிருஷ்ணதேவராயர் முன்னிலையில் வித்தைக்காரன் செப்படி வித்தைகளைச் செய்து காட்டி அனைவரையும் மகிழ்வித்தான். அரசரும் அவன் செய்துகாட்டிய வித்தைகளால் மிகவும் மகிழ்ந்து ஆயிரம் பொன் பரிசளித்தார்.

ஆனால், அவன் அந்தப் பரிசைப் பெறமுன்பாகவே இராமன், "அரசே! இவனைவிட வித்தையில் வல்லவனான நான் இருக்கிறேன். நான் செய்யும் வித்தையை, இவனால் செய்ய முடியுமா? என்று கேட்டுப் பாருங்கள். பிறகு பரிசு யாருக்கு என்று முடிவு செய்யுங்கள்" என்றவாறு முன்னால் வந்து நின்றான்.

அரசருக்கு மிக்க மகிழ்ச்சி. போட்டி என்று வந்துவிட்டாலே அது மிகவும் சுவையுடையதாகவே இருக்குமல்லா?'

எனவே, உன் வித்தைகளையும் காட்டு என்று அனுமதி வழங்கினார் மன்னர். செப்படி வித்தைக்காரனுக்கு ஒரே கோபம். "உனக்கு என்னென்ன வித்தைகள் தெரியும். செய்துகாட்டு.

நீ செய்யும் அத்தனை வித்தைகளையும் நான் செய்து காட்டுகிறேன்" என்று சவால்விட்டான். அனைவரும் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தனர். தெனாலிராமனோ பதட்டம் ஏதுமின்றி முன்னால் வந்து நின்றான். "ஐயா! எல்லா வித்தைகளையும் செய்யவில்லை.

ஒரே ஒரு வித்தை மட்டும் செய்கிறேன். அதுவும் கண்களை மூடிக்கொண்டு செய்கிறேன். நீங்கள் கண்களைத் திறந்துகொண்டு, அதே வித்தையைச் செய்துகாட்டுங்கள். உங்களால் முடியாவிட்டால், அரசர் தரும் ஆயிரம் பொற்காசுகளில் பாதியை எனக்குத் தந்துவிட வேண்டும்." என்றான்.

வித்தைக்காரனோ வெகு அலட்சியமாக "ப்பூ, நீ கண்ணை மூடிக்கொண்டு செய்யும் வித்தையை நான் கண்களைத் திறந்துகொண்டே செய்ய வேண்டும் அவ்வளவுதானே? நீ செய்து காட்டு" என்றான். உடனே இராமன் அரசரை வணங்கிவிட்டுக் கீழே அமர்ந்தான்.

தன் கை நிறைய மணலை வாரி எடுத்துக்கொண்டு மூடிய தன் கண்கள் நிறைய கொட்டிக்கொண்டான். அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்து சிரித்தனர். மன்னரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். பிறகு இராமன் தன் கண்களிலிருந்து மணலைத் தட்டிவிட்டு வித்தைக்காரனைப் பார்த்து "இந்த வித்தையை நீர் உம் கண்களைத் திறந்துகொண்டே செய்துகாட்டும்" என்றான். வித்தைக்காரனால் எப்படி முடியும்?

"நான் தோற்றுப் போனேன். என்னை மன்னித்துவிடுங்கள்" என்று தலை குனிந்து நின்றான்.

மன்னர் மகிழ்ந்து இராமனை அழைத்து அவனைப் பற்றி அறிந்து கொண்டார். பிறகு "தெனாலிராமா! உன் புத்தி சாதுர்யத்தை மெச்சினேன். நீ சொன்னபடி ஐநூறு பொற்காசுகளைப் பெற்றுக்கொள்" என்றார்.

இராமன் "அரசே! இந்த வித்தைக்காரன் வித்தை காட்டுவதில் தனக்கு மிஞ்சியவர் யாருமில்லை என்று பேசிக்கொண்டிருக்கிறான். அவன் கர்வமாகப் பேசியதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதை உணர்த்தவும் அவன் கர்வத்தை அடக்கவும் நான் இவ்வாறு செய்தேன்.

நான் வித்தைக்காரன் என்று பொய் சொன்னதற்கு என்னை மன்னியுங்கள்.

ஆயிரம் பொன்னையும் அவருக்கே அளியுங்கள்." என்று கேட்டுக்கொண்டான்.

அரசர் கிருஷ்ணதேவராயர் மனம் மகிழ்ந்து, இராமன் சொன்படியே வித்தைக்காரனுக்கு ஆயிரம் பொற்காசுகளையும் பரிசாக அளித்ததுடன் தெனாலிராமனுக்கும் பரிசளித்து, அவனைத் தன் ஆஸ்தான விகடகவியாக அமர்த்திக்கொண்டார்.

# முயற்சி...!




சாலைகள் செய்து
தடமிட்டோம்
சந்தைகள் பலவும்
விரித்திட்டோம்
மனைகள் செய்து மகிழ்ந்திட்டோம்
ஆலயம் செய்து ஆட்பட்டோம்
அணிகள் செய்து மகிழ்ந்திட்டோம்
ஆடைகள் நெய்து அணிந்திட்டோம்

அனலின் சக்தி அணுவின் சக்தி
புனலின் சக்தி வளியின் சக்தி
கதிரின் சக்தி கரும்பின் சக்தி
கண்டோம் இவற்றால் மின் சக்தி
பாலை வனத்திலும் பரந்த கடலிலும்
பாங்காய்ப் பெற்றோம் எரிசக்தி

(மிகுதி வரும்வாரம்.)

# உடற்பருமனை அதிகரிக்கும் காரணியாக வீட்டுத்தூசியும்..



மரத்தளபாடங்களுக்குக் கீழே காணப்படும் தூசிகள் விலங்குகளில் உடற்பருமனைத் தூண்டுகின்ற சில காரணிகளைக் கொண்டிருப்பதாக புதிய கற்றல் அனுபவங்கள் உலகிற்கு புதிய செய்தியை வழங்கியுள்ளன.

ஆய்வாளர் ஸ்டேபிள்டனும் அவரது சகாக்களும் வீடுகள் மற்றம் அலுவலகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தூசிகளின் மீது செய்த ஆய்வுகளின்படி, வீட்டினுள், அலுவலகங்களினுள் காணப்படும் தூசிகள் PPAR-gamma 1 என்ற ஒருவித புரதத்தினைக் கொண்டுள்ளன. இப்புரதம் மனித இழையங்களில் அதிகமாகக் காணப்படுவதாகும். இது கொழுப்புக் கலங்கள் வளர்ச்சியடைவதற்குக் காரணமானவையாக அமைகின்றன. அதாவது உடல், பருமனடைவதை ஊக்குவிக்கின்றன.

பரிசோதனைச்சாலை ஆய்வுகளின் படி இந்தக் கலங்கள் (PPAR-gamma1 புரதங்கொண்ட கலங்கள்) மாதிரித் தூசியில் அண்ணளவாக ஒரு மில்லிகிராம் காணப்படக்கூடியதாக இருக்கின்றன.

ஆகவே, நாளாந்தம் குழந்தைகளின் உடலுக்குள் குறைந்தது 50 மில்லிகிராம் தூசியை உட்கொள்ளப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளது.

மேற்படி ஆய்வுக்குழு தமது இரண்டாவது ஆய்வில், சில கொழுப்புகள் உதாரணமாக ஒலீயிக் அமிலம்- இது பல விலங்கு உணவுகள் மற்றும் தாவர எண்ணெய் வகைகளிலும் காணப்படுகிறது. இவை காற்றில் கலந்து இறுதியில் வீட்டுத் தூசிகளாகிவிடுகின்றன. இவை மனிதர்கள், செல்லப்பிராணிகளினால் சிந்தப்படும் முடிகள், தோல்க்கலங்களின் பகுதியாகவும் காணப்படுகின்றன. இவை தூசி



களாக வீட்டினுள் நுழைந்துவிடுகின்றன.

உடலுக்குள் சென்றுவிட்ட இத்தகைய தூசிகள் கொழுப்புக்கலங்களுக்கு ஒரு செய்தியை அனுப்புகின்றன. அது கொழுப்புக்கலங்கள் வளர்ச்சியடைவதற்கான செய்தியாகவுள்ளது. இச்செயற்பாடுகள், உடலுக்குள் நடக்கும் வளர்சிதை மாற்றங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதாவது, உடலின் அனுசேபத் தொழிற்பாட்டின் வேகத்தைக் குறைக்கிறது. இதனால் காபோவைதேரேற்று, கொழுப்பு எரிக்கப்பட்டு சக்தியாக்கப்படும் செயற்பாடு மந்தமாக்கப்படுகிறது. எனவே, இந்நிலையானது, உடல் பருமனடைய வாய்ப்பளிக்கிறது. ஆய்வாளர் மேலும், தூசியிலுள்ள மாசுக்கள் உடல் பருமனாதலை ஒரு தொற்று நோயாக உலக அளவில் பரப்புவதில் பங்களிக்கலாம் என்று எண்ணுகிறார்.

லாசர் என்ற ஆய்வாளரோ, மக்கள் எல்லா நேரமும் இந்தக் கொழுப்புகளைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். 85 கிராம் மாமிசத்தில், 3கிராம் ஒலீயிக் அமிலம் உள்ளது. இது தூசியிலுள்ள மாசினை உள்ளெடுப்பதால் ஏற்படுத்தப்படும் கொழுப்பு வளர்ச்சியிலும் அதிகமாக உள்ளது என்கிறார்.

தமிழில்-பாமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



## சர்வதேச விசாரணையா? உள்ளக விசாரணையா? தமிழருக்கு...

**குரு** — மானிப்பாய்

**உங்கள் மனம் படபடத்த சந்தர்ப்பம் உண்டா?**

தமிழ் தின நிகழ்வு ஆரம்பமாகின்றது. ஹலோ.: ஹலோ... மைக் செற்றிங் வன் ரூ த்ரி... நிகழ்வில் அடுத்ததாக **தமிழ்த் தாய் வாழ்த்து** எனும் போது நெஞ்சம் படபடக்கும்.

**க.நாகராசா** — சாவகச்சேரி

**சிக்கலான கேள்விகளுக்கு பதில்கள் கனவில் வந்ததுண்டா?**

கனவா... எனக்கா...? நான் கடைசியாக கனவு கண்டது 14.04.1980 அன்று (அடுத்த நாள் எனக்கு திருமணம்)

**பிருந்தா** — மாவடி

**பிச்சை போட்ட அனுபவம் உண்டா?**

பிச்சை கேட்டு வந்தவனுக்கு போடுவதற்கு என்னிடம் இருந்து ஒரு ரூபாயை எடுத்த நான் மீண்டும் அதை என் சட்டப்பைக்குள் வைத்தேன் 'அம்மா ஒரு பத்துரூபாயாவது தர்மம் பண்ணுங்கம்மா' என பிச்சைக்காரன் இரந்ததைக் கேட்டு.

**தேவிகன்** — கரணவாய்

**அம்மாவின் சமையல் ருசி அதிகமென்பது உண்மையா?**

என்னடி இண்டைக்கு சாம்பார் வைச்சிருக்கிறாய் ச்ச்ச்... உப்புமில்லை புளியுமில்லை. எங்க அம்மாமாதிரி சமைக்க மாட்டியா? என மனைவியை கணவன் திட்டி முடித்ததும் சாப்பாட்டு மேசைக்கு வந்த மகன் சொன்னான் 'அம்மா இன்றைக்கு சாம்பார் சுப்பர்' என.


**சித்திரவேலாயுதம்** — வட்டுக்கோட்டை

**உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன் என்பது யாருக்குப் பொருந்தும்?**

உற்றாரை யான் வேண்டுவேன் ஊர் வேண்டுவேன் பேர்ர்ர்ர்... வேண்டுவேன் ப(உ)தவி வேண்டுவேன் - ஆயினும் சர்வதேச விசாரணையை மட்டும் வேண்டேன்.

தொப்பியை அளவானவர்களுக்கு போட்டுப் பார்த்து விட்டு விடையை என்க்கு எழுதுங்கள்.

**இரகசியம் பேணப்படும்.**



## அம்மாவின் சமையல் ருசி அதிகமென்பது உண்மையா?

**கபில்** — கோப்பாய்

**கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் உண்மையாக இருக்கிறார்களா?**

வலைத்தளத்தில் பி(பு)டித்த கதை ஒன்று. தன் நண்பனுடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருக்கும் போது சார்ச் இல்லாததால் தன் மனைவியின் தொலைபேசியில் இருந்து நண்பனுக்கு அழைப்பை எடுத்தான் **Calling Aniththá** என பெயர் வந்தது.

**கரன்** — கரணவாய்

**சர்வதேச விசாரணையா உள்ளக விசாரணையா தமிழருக்கு சாத்தியமாக அமையும்?**

உங்களுக்கு அயல் வீட்டுப் பையன் அடித்து விட்டான் பிரச்சினை பெரிதாகிறது. ஊர்ப் பெரியவர் விசாரிக்க வருகிறார் ஆனால் அடித்தவனின் தந்தை இல்லை. இல்லை நான் அவர்களை விசாரித்து தண்டணை வழங்குகிறேன் என்று கூறுகிறார். அடித்தவரின் தந்தையின் விசாரணையா? ஊர் பெரியவரின் விசாரணையா உண்மையாக இருக்கும்?

**'மண்வெட்டி உட்புறம் தான் வெட்டும்'**




### அன்பு வாசகர்களே!

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

குறுந்தகவல் (SMS) 021 567 1532

ஆசிரியர்
வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயன்தாரா எப்படி? உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?

**வேல்நந்தன்** — புலோலி

**நல்லூர் திருவிழா, தேர்தல் திருவிழா இரண்டையும் ஒப்பிட முடியுமா?**

நல்லூர் திருவிழாவில் பக்தி இருந்தது. தேர்தல் திருவிழாவில் போலிகள் இருந்தது. நல்லூரானைத் தேடி ஊரே திரண்டது பக்தியோடு. ஊர்களைத் தேடி வேட்பாளர் திரண்டனர் பல்லிளித்தபடி. நல்லூரானை கை கூட்டி தொழுதனர் பக்தர் நல் வாழ்வு வேண்டி. மக்களை கை கூப்பி தொழுதனர் வேட்பாளர் புள்ளடி வேண்டி.

**இரத்தினம்** — கண்டாவளை

**சமீபத்தில் உங்களை சிந்திக்க வைத்த கதை?**

கதை சொல்ல சொல்லி கேட்ட பேர்த்திக்கு கதை சொல்ல ஆரம்பித்தார் தாத்தா. "... குளத்தில் நீரருந்தச் சென்ற யானையின் தந்தத்தை கெளவிப் பிடித்தது கொடிய முதலை ஒன்று. உடனே யானை ஆதி மூலமே என கத்தியது. பகவான் முன் தோன்றி தன் கையில் இருந்த சக்கரத்தால் முதலையை வதம் செய்து யானையைக் காப்பாற்றினார்" என தாத்தா சொல்லி முடிக்க பேர்த்தி கேட்டாள். "அது சரி தாத்தா அந்த முதலை என்ன தப்புப் பண்ணியது என..."

**வே.அகிலேஸ்வரன்** — மருதங்கேணி

**பெண்களுக்கு இரவில் அதிகம் பிடிப்பது எது?**

கல்யாணக் கனவுகள், கல்யாணப் பரிசு, மூன்றுமுடிச்சு, தெய்வம் தந்த வீடு, இருமலர்கள், தெய்வமகள்.

**தர்ஷிகா** — யாழ்ப்பாணம்


**நயன்தாரா எப்படி? உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?**

பிடித்திருக்கிறது. இருந்தும் என்ன செய்ய? சுகர் சொல்லுறத கேட்க வேண்டிய வயசில பிகரா... இந்த உலகம் ஏற்காதப்பா.

**ஜெயரூபன்** — பருத்தித்துறை

**மூன்றாம் .உலகப் போர் குடிநீருக்காகத் தான் ஏற்படுமோ?**

அப்படி ஏற்படாமல் இருப்பதற்காகத் தான் என்னமோ நிலத்தடி நீரில் ஒயில், கிறிஸ், மலக் கழிவுகளை கலக்கும் படலத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் அந்த நல்ல மனம் படைத்தவர்கள்.



# கவிதைக் கலசம்



## இமயம் தொட

உன்னை நம்பியவர்க்கு
நீ அபயமளிக்காவிடின்
உன் வாழ்வின் முடிவு
நரகத்தையே சென்றடையும்
நம்பியவரை ஏமாற்றி
அவர்தம் மனதைக் காயப்படுத்தி
சொத்து சுகம் சேர்த்து
என் செய்வாய்?
இறுதியில்
நரகத்தையே அடைவாய்
இது நிச்சயம்!

மாவை. நா:கஜேந்திரன்

## சில அரசியல்வாதிகள்

காணாமற்போனோரின் உறவுகள்
கதறுகின்றனர்
விதவைகள் விம்முகின்றனர்
அநாதைகள் அழுகின்றனர்
ஏழைகள் ஏப்பமிடுகின்றனர்
ஊனமுற்றோர் துன்பத்தில் உழல்கின்றனர்
வேலையில்லாதோர் வேண்டுகின்றனர்
பிள்ளையிழந்தோர் பிதற்றுகின்றனர்
பள்ளமேடுகளில் வீழ்ந்து
பயணிகள் பதறுகின்றனர்
மின்சாரமில்லாதோர்
மின்சார சபையில் மினக்கடுகின்றனர்
வீடுகளையிழந்தோர் விரக்தியாகினர்
இதுகளைப் பார்த்து தூரத்தே நின்ற
ஒருவன் சிரிக்கின்றான்...
இதுகளை வைத்து அரசியல்
புழைப்பு நடத்தலாம்
இன்னும் பத்து வருடமென்று

ஜெயம்ஜெகன்
புதுக்குடியிருப்பு

## ஐம்பூதத்தின் ஸ்பரிசம்

இசைத்திடும் நதியதாய்
இலங்கிடும் வனமதாய்
கவிப்புலவர்கள் நாவிலே
வாழ்ந்திடும் மொழியுமாய்
இயல் இசைக் கலைகளாய்-சிலை
புனைந்திடும் மலைகளாய்
நீறிடக் கனன்றிடும் தீயதாய்
பள்ளம் மேடுகள் காட்டிடும் நிலமதாய்
நீ தோண்டிடக் கிடைத்திடும்
நீருமாய்
நீ அணைத்திட முடிந்திடா
வாயுவாய்
எனைப் பேணினால் மானிடம்
வாழ்ந்திடும் கண்டீர்
எனை உணர்ந்திடா- மனிதராய்
இழப்பது கொண்டீர்
வழிவகை சொல்லிட நெறிகளும்
உண்டு
அதை அறிந்திட்டு வாழ்ந்திட்டால்
யாவர்க்கும் நன்று

கு.விபூசணன்

## காதல் பயிர்

என்னவளே!
ஏன் இந்த மாற்றம்?-நீ
எனக்குள் விதைத்த- காதல்
பயிர் என்று நினைக்கையில்-அதை
களையாக்கி களைவதில்
ஏதுதான் சுகம் உனக்கு?
நீ தந்த ஸ்பரிசங்களால்
நின்றுபோன என் இதயம் இப்போது
நினைக்கிறது அடிக்கடி...? உன்னை
முள்ளாய் குற்றும்
வலிகளையும் வேதனைகளையும்
வருடிக் கொடுப்பாய் என்ற
வாழ்வின் நம்பிக்கை
விபரீத சாபமாச்சு
இருமனம் சுமந்து
இடம்மாறும் இதயங்கள்
காதலின் பெறுமானம் புரிந்து
மீனம்மாறும்வரை
தடுமாறும் உண்மைக் காதல்கள்

மடத்துக்கடவை த.மோகன்ராஜ்

# மௌனத்தின் தேடல்- 265



## உலகம் உன்னோடு

அமுதம் ஊட்டுவதிலும்
அன்பைக் காட்டுவதிலும்
அன்னைதான் சிறந்தவள்
கல்விபோல் அன்பும்
கொடுத்துக் குறையாது
ஒரு பாரதி மகாகவியானது
ஒரு காந்தி மகாத்மாவானது
அன்பினால் அதனால்
ஆகாதது எதுவுமில்லை
அன்னை தந்த செல்வம்
அன்பு அள்ளிக்கொடு
உலகம் வாழட்டும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## மகனே! நம்பிக்கைகொள்

மார்போடு அணைத்து
பாலூட்ட அன்னையில்லை
புட்டியில் பால்விட்டு
ஊட்டிட இயலவில்லை
தட்டிலே பால்கரைத்து
ஊட்டுகிறேன் கரண்டியால்
நிலாக்காட்டவில்லை
போரால் புண்பட்ட மண்காட்டி
ஊட்டுகிறேன் மகனே!- என்றும்
அன்னையாய் நானிருப்பேன்
உன்னருகில்- என்
மகனே! நம்பிக்கைகொள்

மல்லாவி கஜன்

## அன்பின் முகவரி

ஜனனம் முதல் மரணம் வரை
என்கின்ற சொற்ப காலத்தின்
மனிதனின் ஆட்டத்தில்
எத்தனை கோடி பணம்
பதவி புகழ் வந்தாலும்
கோடி துன்பத்தில்
சீராட்டி தாலாட்டி வளர்த்த
அன்னையை தேடுகிறேன்
அவள் முகவரி..?...?...?

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்

## புதுக்கதை கூறுங்கள்

நிலவைக்காட்டி அங்கே
ஔவைப்பிராட்டி
முயல்குட்டி என
அமுதூட்டி மகிழும்
தாய்க்குலமே!
பழம்கதை கூறியது
போதுமம்மா...
நிலாவிலே கால் பதித்த
ஆம்ஸ்ரோங்
விட்டுவந்த பறக்கும்
தட்டங்கே...
ஓங்கியுயர்ந்த மலைத்
தொடரங்கே என
புதுக்கதையைக் கூறுங்கள்
புதுமைகள் நிறைந்த
விஞ்ஞானமே!
எம்மினத்தை
தாலாட்டி வளர்க்கும்

வ.ச.[illegible]
திரு[illegible]

## அன்புடன் உணவூட்டும் அன்னையே!

உணவோடு கல்வி,
பண்பையும் ஊட்டிடு
நாளைய தலைவன் இவன்
இன்றைய உன் தியாகத்தை
நாளை இவன் உணர்ந்து-நீ
நடை தளர்ந்து தள்ளாடும் வேளை
இவன் உறுதுணையாய் இருக்க

ஆ.இந்திரா, கரவெட்டி

## தத்துப்பிள்ளையல்ல என்சொத்துப் பிள்ளை

பத்துமாசம் சுமக்கவில்லை;
பகலிரவு விழிக்கவுமில்லை;
தத்து எடுத்து வரவுமில்லை;
தளிர் அரும்பே- உனது
கத்தும் குரல் கேட்டதுவே;
கரம் நீட்டி அணைத்தெடுத்தேன்
என் சொத்துப்பிள்ளை நீயுமன்றோ
சொந்த பந்தம்
நிலை நாட்டிவிட்டாய்

பொ.புனிதன்
வரியப்புலம்

## கவலை மறந்திடு கலைநிலவே

பாசமிகு உன் அன்னை
காணாமற்போன பட்டியலில்
பாசமகளை எதிர்பார்த்து-தினம்
பரிதவித்தது உன் பாட்டி மனது
பாலகன் நீ பால் வேண்டி- தினம்
பசியினால் அழும் துயரை-கொடிய
பாவிகள் நெஞ்சம் அறிந்திடுமோ
கொஞ்சம் எழில் குழந்தையே என்றும்
பாட்டி உனக்கு தஞ்சம் உண்டு- தினம்
எஞ்சும் கஞ்சி பஞ்சம் போக்கும்
கொஞ்சும் எழில் நிலவே
நெஞ்சம் விரும்பி உண்டு மகிழ்

எஸ்.ஆர்.ராம்கி
கிளி/ கிளிநொச்சி இ.க.

# மௌனத்தின் தேடல் -266



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 16.09.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி

**சென்றவாரம் வெளிவந்த "ஐயோ சேர் அடிக்காதையுங்கோ" என்ற சம்பவ விபரணம் தொடர்பில் நிபுணர்கள் பலரின் நேர்காணல்கள்தொடர்ச்சியாக வெளி வரவிருக்கின்றன. இவ்வாரம் பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் நேர்காணல் வெளிவருகின்றது.**

கேள்வி:

மாணவர்களுக்கு சரீர தண்டனை வழங்குவது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: பாடசாலையில் படிக்கின்ற மாணவர்களுக்கு நடைபெறுகின்ற சரீர தண்டனைகள் பற்றிய அவதானங்களின் அடிப்படையில், தனித்து பாடசாலையில் மாத்திரமன்றி வீட்டிலும் பெற்றோர்களால் சரீர தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

அநேகமானவர்களின் பார்வையில், மாணவர்களை அடித்து, தண்டனைகளை வழங்கியே அவர்களின் நடத்தையைத் திருத்த முடியும் என்ற கருத்து இருக்கின்றது. மாணவர்கள் செய்கின்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும், அவர்களுக்கு ஒழுக்க விழுமியங்களை உருவாக்கவும் "சரீர தண்டனை" ஓர் முக்கிய முறையாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனாலும், உளவியல் ரீதியாகப் பார்க்கும் போது, உடலில் நோவை ஏற்படுத்தி மேற்கொள்ளப்படுகினற தண்டனைகள் நீண்டகாலத்தில் மாணவர்களுக்கு உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

ஒவ்வொரு தண்டனைகளும் என்ன மனநிலையில், என்ன காரணத்துக்காக, என்ன உள்நோக்கங்களைமையமாக வைத்து வழங்கப்படுகின்றது? என்பதுடன் தண்டனை பெறுபவரின் மனநிலை என்ன?

மாற்றங்கள் என்ன? என்பது பற்றியும் ஆராயப்பட வேண்டியுள்ளது. நாங்கள் பொதுவாகப் பார்ப்போமென்றால், சரீர ரீதியாகத் தண்டனை கொடுப்பது பிரச்சனையைத் தீர்க்கும் என்று ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோரும், சமூகப் பெரியோர்களும் மாணவர்களும் எதிர்பார்க்கின்றார்கள். ஆனாலும் சரீர தண்டனை ஒரு தற்காலிகத் தீர்வாகலாமே தவிர நீண்டகால நோக்கில் பிரச்சினையை தீர்க்காது மட்டுமல்ல, வேறு பாதகமான விளைவுகளையும் எற்படுத்தும்.

எங்களுடைய பிரதேசங்களிலும் சரீர தண்டனைகளைக் குறைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. 2000 ஆம் ஆண்டளவில் நாங்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து பாரியளவில் பெற்றோர், ஆசிரியர், மாண வர்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை மேற்கொண்டோம். சரீரத்தண்டனையும் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள் பற்றி விழிப்புணர்வுகளை மேற்கொண்டு, சமூக மட்டத்தில் பாரியளவில் மாற்றங்களைக் கொண்டு வந்து பெரியளவில் குறைக்க முயற்சித்தோம். வைத்தியசாலைகளில், அடி காயங்கள் மற்றும் கை முறிந்து, கால் முறிந்து என்று பல பிரச்சினைகளுடன் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அவற்றின் தாக்கங்கள் தனித்து உடலியல் ரீதியாக



மாத்திரமன்றி, உளவியல் ரீதியாகவும் அதிகளவில் ஏற்படுகின்றது என்பதை நாம் அவதானித்தோம். சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் அக்காலத்து செயற்பாட்டால், சரீர தண்டனை குறைக்கப்பட்டது.

நமது பழைய வரலாறுகள், பண்பாடுகள் என்பவற்றில் சிறுவர்களை அடித் தல், துன்புறுத்தல், தண் டித்தல் போன்ற விடயங்கள் அவ்வளவு காணப்படவில்லை. தமிழ் பண்பாட்டில், குரு சிஷ்யன் எனற கல்வி முறையில் இவ்வாறான அடக்கு முறைகள் பாவிக்கபபடவில்லை. ஆனால், ஆங்கலேயரின் ஆட்சிக்காலத்தில், நவன கல்விச்சீர்திருத்த முறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர். இவ்வாறான தண்டனை முறைகள் உட்புகுந்தன.

அனைவருக்கும் கல்வி, பெண் கல்வி என்று கல்வியில் புதிய சீர்திருத்தங்களை ஆங்கிலேயர் கொண்டு வந்திருநதாலும், மாணவர்களுக்கு அடிக்கின்ற முறையும் அங்கிருந்து தான் தொடங்கியிருக்கின்றது. ஆரம்ப காலங்களில் காணப்பட்ட குருகுலக் கல்வி முறையில், குரு சிஷ்ய மரபில், குருவுக்கு பணிந்து அவருடன் சேர்ந்து பணிவிடை செய்து கல்விகற்ற முறைகள்தான் காணப்பட்டன.

அவர்களுக்கும் சரீர ரீதியற்ற தண்டனைகள் வழங்கப்பட்டன. அவை ஆக்கபூர்வமான, கற்றுக் கொள்ளக் கூடிய, முன்னேற்றக்கூடிய தண்டனைகளாக இருந்தன. அவர்களுக்கு குரு அடித்து, துன்புறுத்தி கல்வியை போதிக்கவில்லை. அவர்கள் அக் காலத்திற்கேற்ற மாற்றுவழிகளைப் பின்பற்றினார்கள்.

தற்காலத்திலும், மாற்று வழிகளைப் பயன்படுத்தி, இவ்வாறான சரீர தண்டனைகளிலிருந்து விடுபட்டு மாணவர்களைக் கட்டுப்படுத்தும் யுக்திகளை கண்டறிய வேண்டும். மேற்கத்தேய நாடுகளில் இவ்வாறான மாற்றுவழிகள் கையாளப்படுகின்றன. பெரும்பாலான ஆசிரியர்கள், தங்களால் வகுப்பறையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால்தான் மாணவர்களை அடிக்கின்றோம் என்று கூறுகின்றனர்.

சமூகப் பெரியோர்களும் மாணவர்களை அடித்துக் கற்பிப்பதன் மூலமாகத் தான் எதிர்காலத்தில் சீர்கேடுகளற்ற சமூகததையும், மாணவர்களையும் உருவாக்க முடியும் எனக் கருதுகின்றனர். ஆய்வுகளின் படி, சிறுவயதில் ஆசிரியராலோ பெற்றோராலோ அடி வாங்கி வளர்க்கப்பட்ட ஒருவர், வன்முறையை அனுபவித்தவர் பெரியவராகிய பிறகு, சிறுவரை அடிப்பது சரி என்று செயற்படுவர். வன்முறைகளை உபயோகிப்பர்.

உளவியலில் காணப்படுகின்ற கற்றல் கொள்கை (Learning Theory) நடத்தைகளை மாற்றுவதற்கு இருவழிகளைப் பாவிக்கலாம் என்று கூறுகின்றது.

1. சாதகமான வலுப்படுத்தல் செயற்பாடு (Positive Reinforcement)

2. எதிர்மறையான வலுப்படுத்தல் செயற்பாடு (Negative Reinforcement)

ஆசிரியர்களோ பெற்றோர்களோ விரும்புகின்ற ஓர் நடத்தையை மாணவன் காட்டாவிடின் அல்லது அவர்கள் விரும்பத்தகாத செயற்பாடொன்றை வெளிப்படுத்தினால், இவ்வாறான எதிர்மறையான செயற்பாட்டை ஆசிரியர்களோ பெற்றோரோ உபயோகித்து நடத்தையை மாற்றலாம். அவற்றின் தன்மை அடியாகவோ, தண்டனைகளாகவோ வெளிவருகின்றது. மற்றையது, ஆசிரியர்களுக்கோ பெற்றோர்களுக்கோ ஏற்கக்கூடிய வகையில், விரும்பத்தக்க வகையில பிள்ளைகள் தங்களுடைய செயறபாடுகளைச் செய்வார்களாயின, சாதகமான முறையில அணுகுவார்கள். அவை பாராட்டுக்களாகவோ, பரிசில்களாகவோ, தட்டிக் கொடுப்புக்களாகவோ அமையலாம்.

எதிர்மறையான வலுப்படுத்தல் செயற்பாட்டின் தண்டனை வழங்கல் முறையில் ஒன்றுதான் இந்தச் சரீர தண்டனை. அதாவது, உடலில் நோவை ஏற்படுத்தும் விதத்தில் அடித்தல். அவற்றிலும் கையால் அடித்தல், தடியால் அடித்தால் பொருட்களால் அடித்தல் போன்ற முறைகளால் மாணவர்களில் மாற்றங்களை ஏற்படுத்த எத்தனிக்கலாம். இவற்றை விட வேறு உடல்ரீதியாக நோவை ஏற்படுத்தும் தண்டனைகளும் இருக்கின்றன.

நீண்ட நேரத்துக்கு ஒரே இடத்தில் நிற்க வைத்தல் , வெயிலில் நிற்பாட்டுதல் முழங்காலில் நிற்கவைத்தல் மேசைக்கு மேலே ஏற்றி விடுதல் எதிர்மறையான தண்டனைகளில் ஒன்று அவர்களைக் கவனிக்காமல் விடுதலாகும்.

அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அங்கீகாரத்தைக் கொடுக்காமல் விட்டாலேயேமாணவர்களின்நடத்தையில் மாற்றம் ஏற்படும். எதிர்மறையான தண்டனைகள் வெவ்வேறு விதத்தில் அமைகின்றன: வகுப்பறையிலிருந்து விலத்தி வைத்தல் கவனிக்காது வடுதல், பாட விடயங்களில் பங்கெடுக்க விடாமற் செய்தல் மாணவர்கள் விரும்பும் ஒன்றை கொடுக்காமல் விடுதல் பாராட்டாமல் புறக்கணித்தல் இவ்வாறான பல தண்டனைகள் இருந்தாலும் பிள்ளைகளை அடித்து அவர்களில் மாற்றம் கொண்டு வர ஆசிரியர்கள் நினைக்கின்றனர்.

அடி கொடுப்பதன் மூலம் கிடைக்கின்ற மாற்றத்தை விட, ஏனைய தண்டனைகளால மனமாற்றம் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. ஆசிரியர்கள் மனதிலிருக்கின்ற தப்பான அபிப்பிராயங்கள் கூட சரீர தண்டனை உபயோகிப்பதற்கு காரணமாக இருக்கலாம். அடிக்காமலேயே மாணவர்களின் நடத்தையில் மாற்றங்களைக் கொண்டுவரலாம் என்ற யுக்தியை ஆசிரியருக்கு புரிய வைத்தால், நிரூபித்தால் ஆசிரியர்களும் தங்களுடைய செயற்பாடுகளில் மாற்றங்களைக் கொண்டு வருவார்கள். உடன்பாடான வலுப்படுத்தல் செயற்பாடடைச் செய்வதன் மூலமும் மாணவர்கள் மத்தியில் மாற்றதநைக்கொண்டுவரலாம். அதாவது, ஆசிரியர் விரும்பத்தக்க நடத்தையொன்றை மாணவர் வெளிப்படுத்தினால், அவரை பாராட்டுதல், சிறு பரிசு ஒன்றைக் கொடுத்தல், முன்னுக்கு அழைத்து வாழ்த்துச் சொல்லுதல், மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகக் காட்டுதல் போன்ற செயற்பாடுகளை உடனுக்குடன் செய்யும் போது அந்த நடத்தையை திரும்பவும் செய்வது மட்டுமன்றி, மாண வர்களும் தங்களுடைய ஆளுமையை வளர்த்துக் கொள்ளவும் மேலும் மேலும் வளர்ச்சியடையவும் எத்தனிப்பர்.

பல ஆசிரியர்கள் மாணவர்களுடன் இவ்வாறான அணுகு முறைகளைக்கையாளுகின்றனர். சரீர தண்டனை உபயோகிக்காமல் வகுப்புக்களை தமது கட்டுப்பாட்டில் வைத்து, நல்ல பெறுபேறுகளை அடைகிறார்கள். அடித்துத்தான் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்றில்லை. அடிப்பதனால் ஏற்படுகின்ற வெளிக்காயம் ஏற்படுவதுடன் உளத்தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. உளரீதியாகக் கசப்புணர்வு, ஆசிரியரில் பாடத்தில் வெறுப்பு, பாடசாலை செல்வதற்கு விருப்பின்மை, என்பவை ஏற்படும்.

இப்படியான நிலைக்கு ஆளான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கே விரும்பமாட்டார்கள். ஆசிரியர் சரியாகவும், சாதகமான முறைகளுடனும் கற்பிக்கின்றார் என்பதற்கான அறிகுறி என்னவென்றால், மாணவன் காலையில் எழுந்து தானாகவே தன்னூக்கத்துடன் பாடசாலைக்கு செல்ல ஆர்வப்படுவதுடன், பாடசாலைக்கு செல்வதைப் பற்றி மனதுக்குள் ஓர் மகிழ்வுணர்வும் ஏற்படவேண்டும். அவனாகவே பாடசாலைக்கு வரவேண்டும். மாறாக, தண்டனைகள் பெற்ற கசப்புணர்வுடன் இருக்கின்ற மாணவன், மற்றவர்களின் வற்புறுத்தலின் பேரில் ஏனோ தானோவென்று போவது, அல்லது புதிய புதிய நோய்களைச் சொல்லி பாடசாலை செல்லாமல் நிற்க விரும்புவான்.

பாடசாலைக்கு சென்றாலும், பயந்து, நடுங்கி, ஒளித்து திரிவார்கள், அல்லது பாடசாலைக்கு போகின்றேன் என்று கூறிவிட்டு வேறு எங்காவது சென்று விடுவார்கள். அவர்களுக்கு உளத்தாக்கத்தை ஏற்படுத்தும் இவ்வாறான சரீர தண்டனையால் பாதிப்புக்கள் மேலும் அதிகரிக்கின்றனவேயன்றி குறைவதில்லை.

அவ்வாறு நோவை ஏற்படுத்துவதால் மாணவனின் வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று ஆசிரியர்கள் நம்புகின்றார்கள். ஆனால், உளவியல் ரீதியாகப் பார்த்தால், அது அவர்களுக்கு ஓர் தடையைத்தான் ஏற்படுத்துகின்றது. உடன்பாடான முறையில் அவனை வழிப்படுத்தினால் மாணவனின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் மாற்றம் ஏற்படுவதுடன், தானாகவே முன் வந்து முன்னேற எத்தனிப்பான். சரீர தண்டனை நீண்ட கால வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தவே செய்கின்றது.

(தொடரும்)



**அடுத்த வாரம், பேராசிரியர் அவர்களின் நேர்காணலுடன் ஆய்வுகளிலிருந்து சரீர தண்டனை தொடர்பில் ஆசிரியர், மாணவாகளின் கருத்துக்கள் எவை? என்பன பற்றிய விபரங்களும் வெளியாகின்றன. தொடர்ச்சியாக வாசகர்கள் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களும் வெளிவரவிருக்கின்றன.**

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மைக்கேல் ப்ரௌன்

# கறுப்பு இன மக்களுக்கு அமெரிக்கா ஒரு காட்டுமிராண்டி நாடு

*"நாங்கள் கருப்பராக இருப்பதுடன், போராட ஒன்று கூடி இருப்பது- அது அமைதியான வழிமுறையாக இருந்தாலும், போலீசாருக்கு 'அச்சத்தை' ஏற்படுத்துகிறது் அதனாலேயே போலீசார் எங்கள் அமைதிப் போராட்டங்களைக் கூட மிருகத்தனமாக ஒடுக்குகின்றனர்".*

மிக முன்னேறிய நாகரீக நாடு என்று பீற்றப்படும் அமெரிக்காவில் இனவெறி என்பது கடந்தகால அத்தியாயம் என்ற பிரமையை பெர்குசன் பகுதியில் நடந்து வரும் சம்பவங்கள் உடைத்து வருகின்றன.

அக்டோபர் 13, 2014 அன்று பெர்குசனில் நடந்த கண்டன போராட்டம்

அமெரிக்காவின் மிசௌரி மாகாணத்திற்கு உட்பட்ட செயின்ட் லூயிஸ் பகுதியில் அமைந்துள்ள பெர்குசன் நகரத்தைச்சேர்ந்த 18 வயதே ஆன மைக்கேல் ப்ரௌன் கடந்த 2014-ம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று தனது பாட்டி வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது டேரன் வில்சன் என்கிற வெள்ளையின வெறி போலீசு அதிகாரியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சென்ற ஆகஸ்ட் 9-ம் தேதி ஞாயிறு அன்று மைக்கேல்ப்ரௌனின் முதலாமாண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. வெள்ளை இனவெறியை எதிர்த்தும், தொடர்ச்சியாக நடக்கும் படுகொலை களுக்கு நீதி வழங்க கோரியும், படுகொலை குற்றவாளிகளை விடுவிக்கும் அமெரிக்க நீதித்துறையை விமர்சித்தும் அமைதிப் போரணி நடத்தப்பட்டது.

அமைதிப் பேரணியில் டைரோன் ஹாரிஸ் என்ற 18 வயதே ஆன கருப்பின இளைஞர், சீருடை அணியாத போலீசாரால் சுடப்பட்டு, படுகாயமடைந்து, உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹாரிஸ் போராட்டக்காரர் இல்லையெனவும், இரு கிரிமினல் கும்பலுக்கு இடையில் துப்பாக்கிச் ச்ண்டை நடந்ததாகவும், அதை கண்காணிக்ச் சென்ற சீருடை அணியாத போலீசார் மீதும், அவர்களது வாகனத்தின் மீதும் ஹாரிஸ் துப்பாக்கியால் சுட்டதாகவும், அதனால் தாங்கள் திருப்பி சுட்டதாகவும் போலீஸ் கூறியுள்ளது. இதை ஹாரிசின் தந்தை மறுத்துள்ளார். தமது மகன் மைக்கேல் ப்ரௌன் படித்த அதே பள்ளியில் படிப்பதாகவும், அவர் கிரிமினல் இல்லையெனவும் கூறியுள்ளார்.

மேலும் சில கருப்பின இளைஞர்கள் துப்பாக்கி வைத்திருந்ததாகவும், அதிகாரிகளுடன் மோதலில் ஈடுபட்டதாகவும் கருப்பின இளைஞர்களை கைது செய்துள்ளது போலீசு. ஆனால், பிரமாணம் காப்பவர்கள் அமைபபினர் இராணுவத்தைப் போல சீருடை, தானியங்கி துப்பாக்கி உள்ளிட்ட கனரக ஆயுதங்களை தரித்துக் கொண்டு, பேரணியுடன் வந்துள்ளனர். இவர்களை போலீசார் கண்டு கொள்ளவில்லை.

அமைதியாக நடந்து கொண்டிருந்த பேரணி இவ்வகையில் வன்முறையாக மாறியதால், பெர்குசனில் அவசரநிலை அறிவிக்கப்பட்டது. அவசரநிலை ஒடுக்குமுறைகளுக்கு பயந்து மக்கள் போராட்டத்தை கைவிட்டுவிடவில்லை. மறுநாள் திங்களன்றும் போராட்டங்கள் தொடர்ந்தன. போராட்டக்காரர்கள் நெடுஞ்சாலை எண் 70-ல் மறியலில் ஈடுபட்டனர். இப்போராட்டங்களில் சுமார் 150-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். மூன்று நாட்களுக்கு பிறகு அவசரநிலை விலக்கிக் கொள்ளப்பட்டது.

"நாங்கள் கருப்பராக இருப்பதுடன், போராட ஒன்று கூடி இருப்பது - அது அமைதியான வழிமுறையாக இருந்தாலும், போலீசாருக்கு 'அச்சத்தை' ஏற்படுத்துகிறது் அதனாலேயே போலீசார் எங்கள் அமைதிப் போராட்டங்களைக் கூட மிருகத்தனமாக ஒடுக்குகின்றனர்" என்று போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

மைக்கேல் ப்ரௌன் படுகொலையை தொடர்ந்து, கருப்பின மக்கள் காலங்காலமாக அனுபவிக்கும் இனவெறி ஒடுக்குமுறைகள் அவர்களிடம் கோபத் தீயை மூட்டியுள்ளது.

மிசௌரி மாகாணம் மட்டுமின்றி அமெரிக்க நாடெங்கிலும் இனவெறிக்கு எதிராகவும், கொலைகார போலீசு அதிகாரியை தண்டிக்க கோரியும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்தப்பட்டன. முதலில் பிரச்சனையை மூடி மறைக்க முயன்ற போலீசு, போராட்டக்காரர்கள் மீது இராணுவ ரீதியான - மிருகத்தனமான ஒடுக்குமுறையை ஏவி விட்டது. போராட்டக்காரர்கள் மட்டுமின்றி செய்தி சேகரிக்க சென்ற பத்திரிக்கையாளர்கள் மீதும் தாக்குதலை நடத்தியது.

இதையடுத்து அமெரிக்கா முழுவதும் போராட்டங்கள் பரவி கருப்பின மக்களுடன், வெள்ளையினத்தை சேர்ந்த ஜனநாயக வாதிகளும், நிறவெறி எதிர்ப்பாளர்களும் கைகோர்த்தனர். விவகாரம் கைமீறிப் போய் தேசிய, சர்வதேசிய அளவில் இனவெறிக்கு எதிரான போராட்டங்களும், போலீசுக்கு எதிரான விமர்சனங்களும் கிளம்பத் துவங்கிய பின், வழக்கு எஃப்.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதுடன், இனவெறி பிரச்சனை தொடர்பாக நீதித்துறை விசாரணையும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

வழமையில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது படுகொலைகள் நிகழும் போது, காவல்துறை முதலில் குற்றங்களை பதிவு செய்யவே மறுக்கும் மக்கள் கிளர்ந்தெழுந்து போராடத் துவங்கிய பின்னர் வழக்குகள் பதிவு செய்யப்படும். அவ்வழக்குகளும் பின்னர் நீர்த்துப் போக வைக்கப்பட்டு இறுதியில் மாட்சிமை பொருந்திய நீதிமன்றங்களால் குற்றவாளிகள் விடுவிக்கப்படுவார்கள். இந்நிலைமை நம்நாட்டில் மட்டுமல்ல உலகில் ஜனநாயகத்தை நிலைநாட்டும் புனிதப் பணியை செய்துவரும் அமெரிக்க செர்க்கதிலும் இதே நிலைதான். தேசங்கள் மாறினாலும் ஒடுக்கப்படுபவர்களின் மீதான ஒடுக்குமுறைகள் மாறுவதில்லை.

சென்ற நவம்பர் மாதம் செயின்ட் லூயிசின் பெருநடுவர் மன்றத்தால் (புசயனெ துரசல) டேரன் வில்சன் குற்றவாளி அல்ல என்றும், தற்காப்புக்காகவே அவர் மைக்கேலை சுட்டார் என்றும் விடுவிக்கப்பட்டார். நடுவர் மன்றம் ஒருவரை குற்றவாளியென தீர்மானிக்க 12 நடுவர்களில் 9 பேர் உடன்பட வேண்டும் என்பதுடன், நடுவர் மன்றம் ஒன்பது வெள்ளை இனத்தவர்களையும், மூன்று கருப்பினத்தவர்களையும் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இம்முடிவு பெர்குசனில் போராட்டத் தீயை மீண்டும் பற்றவைத்தது. பெர்குசன் நகர போலீசு அலுவலகத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர். அமெரிக்க அரசமைப்பு தோல்வியடைந்துள்ளதை மீண்டுமொரு முறை நிருபிப்பதாக போராட்டகாரர்கள் தெரிவித்தனர். இப்போராட்டங்களை போலீசும், சிறப்பு பயிற்சி பெற்ற தேசிய படையினரும் மிருகத்தனமாக நசுக்கினர்.

இப்பகுதியில் முன்னர் வெள்ளை இனவெறி பயங்கரவாதக் குழுவான கூக்ளக்ஸ் கிளான்செல்வாக்கு மிகுந்திருந்தது. தற்போதோ பழைய கூகிளக்ஸ் கிளான், நியோ நாஜிகள் போன்ற வெள்ளை இனவெறி பயங்கரவாதிகள் கன்சர்வேட்டிவ் சிட்டிசன் கவுன்சில், பிரமாணம் காப்பவர்கள் போன்ற கவுரவமான பெயர்களில் இயங்கி வருகிறார்கள்.

பிரமாணம் காப்பவர்கள் (Oath Keepers) என்ற பெயரில் அமெரிக்காவின் அரசியலமைப்பு சட்டத்தின் பாதுகாவலர்களாக தம்மை அறிவித்துக் கொண்டு, முற்றிலும் வெள்ளையின உறுப்பினர்களை கொண்டு இயங்கி வருகின்றனர். தேசபக்தி முகமூடி அணிநதுள்ள இந்த வலதுசாரி நிறவெறி அமைப்பில் முன்னாள், இன்னாள் இராணுவத்தினரும், போலீசாரும் உறுப்பினர்களாக உள்ளனர். அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்களில், இவ்வமைப்பு ஆயுதமேந்தி வர அனுமதிக்கப்படுகிறது. இவர்கள் அரச படைகளிடமிருந்து மக்களை பாதுகாப்பதற்காக தாங்கள் அணிவகுத்து வருவதாக கூறிக்கொண்டாலும், போராடும் மக்களை அச்சுறுத்தவும், சினமூட்டி பிரச்சனையை தூண்டும் வகையிலுமே அணிவகுப்பை நடத்துகின்றனர்.

இதனிடையே மைக்கேல் ப்ரௌன் படுகொலை, இனவெறி தொடர்பாக விசாரித்த அமெரிக்க நீதித்துறை (Departmant of Justice) மிசௌரி மாகாண காவல்துறையும், நீதித்துறையும் கருப்பின மக்களின் சிவில் உரிமைகளுக்கு எதிராகவும், பாரபட்சமாக நடந்து கொள்வதையும் கடுமையாக விமர்சித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்தின் கார்டியன் பத்திரிக்கையின் கணக்கீட்டின் படி அமெரிக்காவில் இந்த ஆண்டு மட்டும் சுமார் 716 பேர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 184 பேர் கருப்பினத்தை சேர்ந்தவர்கள். போலீசாரால்கொல்லப்பட்ட 149 ஆயுதமற்றவர்களில் (நிராயுதபாணிகள்) 56 பேர் கருப்பினத்தை சேர்ந்தவர்கள்.

போலீசுக்கு கட்டற்ற சுதந்திரம் வழங்கி மக்கள் மீது அடக்குறையை கட்டவிழ்த்து விடும் ஜனநாயகத்தின் தேவதூதுவனாக தன்னை பறைசாற்றிக்கொள்ளும் அமெரிக்க அரசின் யோக்கியதை அம்மக்களிடமே அம்பலமாகி வருகிறது.

*-மார்ட்டின்*



பேர்கசன் பொலிஸ் நிலையத்தில் கறுப்பு இன மக்கள்






மக்கள் ஆர்ப்பாட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரடி மண்...!



நீலவானம், களங்கமில்லாமல், கடலின் நிறத்தோடு போட்டி போடுவதுபோல இருந்தது. ரமேஷ் வைத்தகண் வாங்காமல் வானத்தை வெறித்துப் பார்த்தபடியே இருந்தான். தோணியிலே தலைக்கு கைகளைத் தலையணையாகக் கொண்டு நிம்மதிப் பெருமூச்சை விட்டவாறு சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்தவனின் தோளை சிவலிங்கம் அமுக்கினான். நித்திரை விட்டு எழுவதுபோல துடித்து எழுந்த ரமேஷ்,

"என்ன?" என்று அடிப்பது போலக் கோபமாகக் கேட்டான். சிவலிங்கம் பயந்துவிட்டான்.

"என்டா! நான் உன்னுடைய கனவைக் கலைத்துவிட்டேனோ?"

"சொல்லு"

"உனக்கு மனம் சரியில்லை. நான் பிறகு வந்து கதைக்கிறன். நீ இப்ப படு..."

"என்னடா...சொல்லு?"

என்று மீண்டும் சிவலிங்கத்தைப் பார்த்துக் கேட்டான்.

"இல்லையடா! கோயில் முதலாளி ..., கடைக்கு வாடகைக் காசை உடனே கட்டு என்று கூறிவிட்டார். உனக்குத் தெரியும்தானே. என்னிடம் எந்தளவு வியாபாரம் நடக்குது என்டு -உடனே கட்டு அல்லது கடையைப் பூட்டித் திறப்பு எடுப்பன் என்கிறார். அதுதான்... நீ ஒருக்கால் சொல்லன்ரா..."

"ஆ..சரி.. நான் அவரோட கதைக்கிறன்... என்று கூறியவன் மறுபக்கம் திரும்பிப் படுத்தான்..."

"இப்பவே சொல்லன்ரா... இல்லையெண்டால் ... அந்தாள் மறுபடியும் வந்திடும்..." என்று சிவலிங்கம் சொல்லவும் தனது நண்பனுக்காக ... தன் எசமானிடம் அவன் செல்லத் தயாரானான்.

சிவன் கோவில் தேர்க் கொட்டகைக்குள் செல்கிறான்... அதுதான் அவனுக்கு மிகவும் பிடித்தமான... நம்பிக்கையான...பிரியமனமில்லாத... ஒரு இடம்...

அங்கேதான் அவனது மேலங்கி கொழுவிக் கிடக்கிறது. அதை எடுத்து அணிந்து கொண்டுதான் ... அவரிடம் செல்லப்போகிறான்... நிச்சயமாக சிவலிங்கத்தின் பிரச்சினை தீரும்...

ஆனால், என்றுமே ஆற்றப்பட முடியாத துயரமும் ஒரு தனிமையும் ரமேஷுக் குள் இருப்பதற்கான காரணம் அவனைச் சுற்றியுள்ளவர்களுக்கு நன்கு தெரிந்தாலும், அந்த வேதனையின் ஆழத்தை யாராலும் புரிந்துகொள்ள முடியாது...

அவன், கோயில்தொண்டு செய்துவந்த செல்லம்மாவின் மகன். தந்தை சின்னத்துரை தோட்டத்தொழிலாளி.

அவன் சிறுவயதாக இருக்கையில் அவனது தாயார் கோவிலுக்குத் தொண்டு செய்யும் பொழுது, இவனைத் தேரடியில் விளையாட விட்டுவிட்டு கண்காணித்துக்கொண்டு, தனது பணிகளைச்செய்வது வழக்கம்.

அதனாலேதான் அந்த இடம் அவனுக்கு இப்பவும் மிகவும் பிடித்ததாக இருக்கிறது. அவ்விடத்தோடு நெருக்கமாக இருப்பது அவனுக்கு தன் தாயோடு... தாயின் அரவணைப்பில் இருப்பது போன்ற ஒரு பிரம்மையைத் தருகிறது... அது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவனுடைய தந்தை சின்னத்துரையும் கோயிலுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவிட்டு தனது வீட்டிலே வாழைத் தோட்டத்தில் உள்ள வாழைக் குலைகளை வெட்டிக்கொண்டுபோய் சந்தையில்விற்று பணத்துடனும் வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கித் தலையிலும் சுமந்துகொண்டு முழங்காவிலிலுள்ள தனது சிறிய வீட்டிற்குச் செல்வார். அப்போது ரமேஷ் எழுந்து நிற்கமுடியாத-தவழும் பருவம். தந்தையைக் கண்டதும் முயல்வேகத்தில் தந்தையிடம் தவழ்ந்து வந்துவிடுவான்.

அவர், மடியில் உள்ள பொட்டலத்தை அவிழ்த்து அவனுக்கெண்டு வாங்கிவந்த கண்டோஸ்,சொக்லேட்டை எடுத்துக் கொடுத்ததும் ஆவல் தாங்காமல் அதனை சப்பாணம் கட்டியவாறு இருந்து சாப்பிடுவான். அந்த அழகைத் தகப்பன் சின்னத்துரையும் ரசித்தபடி மனைவி கண்ணாம்பளைக் கூப்பிட்டு "இங்கே வந்து பாரடி எங்கடை செல்லக்குட்டியை" என்று மகிழ்வுடன் அழைப்பார்.

கண்ணாம்பாளும் "சரி...சரி... காணும் கண்வைக்காதையுங்கோ. பிள்ளை சாப்பிடட்டும்" என்று கூறுவாள்.

களைத்து வந்த கணவருக்கு மூக்குப்பேணி முட்ட பால் ஆத்திக் கொடுத்துவிட்டு அவர் கொண்டுவந்த மளிகைச் சாமான்களை வகுத்து டப்பாக்களில் இட்டு வைத்து... குறைவில்லாமல் சமையல் சாப்பாடு ... என்று குழந்தையை நன்றாகவே வளர்த்து வந்தாள்.

ஒரு நாள் திடீரென்று... வாழைக்குலை வெட்டிக் கொண்டு நின்ற சின்னத்துரை வாழைத் தோட்டத்துள் மயங்கி வீழ்ந்துவிட்டார். நீண்ட நேரமாய் தனது கணவரைக் காணாமல் ரமேஷையும் இடுப்பிலே வைத்தபடி வாழைத் தோட்டத்திற்குச் சென்ற கண்ணாம்பாளின் கண்ணே நம்பமுடியாமல் மல்லாந்தபடி சின்னத்துரை கிடந்தார். உடனே கண்ணாம்பாள், அவரது மூக்கிலே கை வைத்துப்பார்த்தாள். மூச்சு இருக்கென்று எண்ணிக் கொண்டு, அழுதபடியே முச்சக்கர வண்டி வைத்திருக்கும் பாலனிடம் சென்றாள். ஊரார் உதவியுடன் சின்னத்துரையை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றாள். அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் இரண்டு நாளுக்கு ஒருதடவை கண்விழித்துப் பார்த்தார். மீதி நேரம் எல்லாம் மயக்க நிலைதான் பேச்சு இல்லை. காரணம் யாருக்கும் தெரியவில்லை...

இறுதியில்... அவர் பிழைக்கவேயில்லை போய்ச் சேர்ந்துவிட்டார்.

அதன்பிறகு கண்ணாம்பாள் தான் தன்னந்தனியாக கஸ்டப்பட்டு, கூலித்தொழில் செய்து பிள்ளையை வளர்த்தாள்.

ரமேஷுக்கு நான்கு வயது இருக்கும். தாய் கண்ணாம்பாளுக்கு இருமல் பிடித்துக் கொண்டது. அவள் தன்னைக் கவனிக்கவில்லை. பிள்ளை ...பிள்ளை...என்று ஓய்வின்றி உழைத்து அவனை கண்ணுக்குள் வைத்து வளர்த்தாளே தவிர தன் உடலை பீடித்திருந்த நோயைப் பற்றி அவள் அறிந்திருக்கவில்லை. சும்மா இருமல் தானே மாறிவிடும் என்று தானறிந்த, கைமருந்துகளுடனே இருந்துவிட்டாள்.

முன்பள்ளியிலே படிக்கிற பொழுதிலும், தாயின் மடியில் இருந்து, தாயிடம் பாடம் படிப்பதில் ரமேஷுக்கு நல்ல விருப்பம்.

ஒரு நாள் இரவு வழக்கம் போல மகனுக்கு புத்தகத்திலுள்ள படங்களைப் பார்த்து கதைகூறிக்கொண்டிருந்தாள் கண்ணாம்பாள்... வயிற்றைப் புரட்டிக்கொண்டு வருவது போல் இருந்தது அவளுக்கு. சற்றுநேரத்தில் மகனும் மடியில் தூங்கிவிட்டான்.

மீண்டும் வாந்தி எடுக்க வேண்டும்போல் வந்தது அவளுக்கு. ஆயினும் அடக்கியடக்கிப் பார்த்தாள். நிலமையை கட்டுப்படுத்த முடியவில்லை. மகனை நிலத்திலே படுத்திவிட்டு, ஓடிச்சென்று வெளியிலே... தலையைப்பிடித்தவாறு உட்கார்ந்து வாந்தியெடுத்தாள்...

அது சாதாரண நிறத்தில் இருக்கவில்லை. சிவப்பு நிறம்...! இரத்தம்தான்...! பார்த்ததும் அவள் மயங்கிவிட்டாள். அதுதான் ரமேஷ், தாயின் மடியில் உறங்கிய கடைசி நாள்.

விடிந்ததும் கண்விழித்தான் நான்கு வயதுச் சிறுவனான ரமேஷ். தாயாரைப்பார்த்தான் அவள் உறக்கத்தில்... ஆழ்ந்த உறக்கத்தில்... "அம்மா... அம்மா..." என்று கன்னத்தில் தட்டித் தட்டி எழுப்புகிறான்... அவள் எழவில்லை.

தாய் உறக்கத்திலிருந்து எழுந்ததும், தான் வழமையாக விளையாடும் இடமான சிவன் கோவில் தேர் நிற்கும் இடத்துக்கு வருவாள் என்று எண்ணிய, ரமேஷ் அங்கு சென்று விளையாடுகிறான்...!

தாய் வராததால் மீண்டும் வீடுசெல்கிறான் தாயைக் காண்பதற்காக...

ஆனால், தாய் இப்போதும் எழுந்துவரவில்லை.

அவன் அழுதான்... கதறிக் கதறி அழுதான்... குத்துவிளக்கு வெளிச்சத்தில் உறங்கும் தாயிடம் செல்வதற்கு...

உறவினர் சிலர் அவனைப் பிரித்தனர்... அவன் மீண்டும் கோவிலடிக்கு வந்தான்.

அன்று தாய்க்காக காத்திருக்கத் தொடங்கியவன் ... அன்றிலிருந்து அந்த தேர்க் கொட்டகையை தன் வீடாக்கிக்கொண்டான்.

கோவில் முதலாளி தர்மலிங்கம் அவனுடன் நெருங்கினார், ஆரம்பத்தில் கோவில் பிரசாதத்தோடு அவருடன் பழக்கப்பட்டவன். பின்பு அவரையே பின் தொடர்ந்தான்...

கண்ணாம்பாளின் உறவினரும் வறுமையில் வாடியதால்... கோவில் முதலாளிக்கு வாய்ப்பாகிவிட்டது.

இன்று அவன் அவர்களுக்கு உழைத்துக் கொடுக்கும் ஒரு நல்ல காளை.

அதனால், அவன் பேச்சு எடுபடும்.

இதனால்தான் அவனது நண்பன் சிவலிங்கம் கடை உரிமையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இவனிடம் வந்தான்.

நண்பர்கள்தான் இன்றைக்கு அவனுக்கு மிக நெருங்கிய உறவினர்கள்...

அவர்களைவிட்டால் அவனுடன் நெருக்கமாக உறவாக இருக்க-சுகதுக்கங்களில் பங்கெடுக்க யாருமில்லை.

அவர்களுக்கு ஒன்றென்றால் உயிரையும் கொடுக்கத் தயங்கமாட்டான்.

சிவலிங்கம் கேட்ட இந்த உதவியைச் செய்யமாட்டானா?

தர்மலிங்கம் முதலாளியோடு கதைக்கிறான் ரமேஷ்.

அவர் மறுக்கமுடியாமல் அவன் வேண்டுகோளை ஏற்றுக்கொள்கிறார். மறுத்தால், நிச்சயம் ரமேஷ் குழம்புவான் என்று அவருக்குத் தெரியும்.

மீண்டும் தேரடிக்கு வருகிறான்..

தன் சிறுபராயத்தில் தாயின் மடியில் இருந்ததுபோன்று உணருகிறான்... தேரடி மண்ணில் உட்கார்கிற பொழுது...

அங்கு நீண்ட நேரம் உட்காருகிறான்...

தன் தாயுடன், அந்த கோவிலுக்குள் சுற்றித்திரிந்த குழந்தைப்பராய நினைவுகளில் மூழ்கிப்போகிறான்...சந்தோசம் அவனிடம் குடிகொள்கிறது.

தன் தாய், பாடையேறிச் சென்ற-வாழ்வின் அந்த மிகச் சோகமான தருணத்தை அவன் என்றோ மறந்தேவிட்டான்...

-ஆஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

## கடவுளின் கணக்கு



சரவணனுக்கு பணம்தான் குறி. கஷ்டப்படுவர்களுக்குப் பணம் தேவை என்றால் சரவணனிடம் தான் ஓடி வர வேண்டும். அதுவும் சும்மா ஓடி வந்தால், அவன் பணம் கொடுக்கமாட்டான். பண்ட பாத்திரமோ, நகையோ கொண்டு வந்தால்தான் பணம் கொடுப்பான். அதுவும், பாதி விலைக்குத்தான் வாங்குவான்.

கடவுள் அவன் பக்கம் இருந்து, எல்லா மக்களுக்கும் கஷ்டத்தைக் கொடுத்து, அவனுக்கு இலாபத்தை வாரிக் கொடுத்தார்.

இதெல்லாம் ரொம்பப் பாவம். நம் மகனுக்குப் பாவத்தைச் சேர்த்து வைக்காதீர்கள், என்று அவன் மனைவி கமலா கண்டிப்பாள்.

போடி, போடி பிழைக்கத் தெரியாதவளே, பணம்தான் உலகம்... பணம் இல்லை என்றால் ஒருவனும் நம்மை மதிக்கமாட்டான் என்று அவளைக் கிண்டல் செய்வான் சரவணன்.

ஒருநாள் புதிய ஆள் ஒருவன் சரவணனிடம் வந்தான்.

என் மனைவிக்கு ஒரு பெரிய ஆபரேசன் செய்ய வேண்டும். அதற்குப் பணம் தேவைப்படுகிறது என்னிடம் உள்ள நகைகளை வாங்கிக் கொள்கிறீர்களா? என்று கேட்டான்.

அவனைப் பார்த்தால், திருட்டுப் பயல் போல இருக்கிறது. ஒரு மூடை நகை கொண்டு வந்து இருக்கிறான். நிச்சயமாக எங்காவது திருடிக் கொண்டு வந்திருப்பான். அவனைப் போகச் சொல்லுங்கள் வீண் வம்பு வேண்டாம், என்றாள்.

ஆனால், நகையைக் கண்டதும் பேராசையும் பொங்கியது சரவணனுக்கு. இவ்ளோ நகை எங்கே கிடைக்கும்? என்று நினைத்து யோசிக்க மறந்தான்.

கமலா! நீ இந்த விடயத்தில் தலை இடாதே... உனக்கு என்ன தெரியும்! என்று அவளைத் திட்டி அனுப்பி விட்டு, மூடையுடன் வந்த ஆளை உள்ளே அழைத்தான்.

அந்த ஆள் மூடையைப் பிரித்தான். ஏராளமான தங்க நகைகள் மின்னின. மாற்று உறைத்துப் பார்த்தான் சரவணன். எல்லாமே சுத்தத் தங்கம். இலட்ச ரூபாய்க்கு மேல் பெறும்.

பத்தாயிரம் ரூபாய் தான் கொடுப்பேன். இஷ்டம் இருந்தால் கொடு. இல்லாவிட்டால் போ, என்று கண்டிப்பாகப் பேசினான்.

சரி ஐயா பணத்தைக் கொடுங்கள், என்று அழுது வடித்தான் அந்த ஆள்.

உடனே, பணத்தைக் கொடுத்து, நகைகளை வாங்கி பீரோவில் வைத்துப் பூட்டினான் சரவணன்.

மனம் முழுவதும் சந்தோஷம். இப்படி ஒரு அதிர்ஷ்டம் யாருக்கு அடிக்கும். இலட்சரூபாய் பெறுமானமுள்ள நகையை பத்தாயிரத்திற்கு சுருட்டிய தன்னுடைய திறமையை எண்ணி மகிழ்ந்தான்.

ஒருமாதம் சென்றது. சரவணன் வீட்டு வாசலில் பொலிஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது. அதில் இருந்து இன்ஸ்பெக்டரும், காவலர்களும் கையில் விலங்கு பூட்டிய ஒருவனோடு கீழே இறங்கினார்கள். கையில் விலங்குடன் காணப்பட்டவன் ஒரு மாதத்திற்கு முன்னால் சரவணனிடம் நகைகளை விற்ற ஆசாமி.

சரவணன் பயத்துடன் வாசலுக்கு வந்தான். இவர்தான் என் திருட்டு நகைகளை வாங்கியவர், என்று சரவணனை அடையாளம் காட்டினான் திருடன்.

அவ்வளவுதான்! இன்ஸ்பெக்டரும், காவலர்களும் சரவணனின் வீட்டுக்குள் புகுந்து, அலுமாரியைத் திறந்து திருட்டு நகைகளோடு மற்ற நகைகளையும் சேர்த்து எடுத்துக் கொண்டு, சரவணனை ஜீப்பில் அள்ளிப் போட்டுக் கொண்டு போனார்கள்.

கடவுள் சரவணனுக்கு உதவி செய்வது போல அவனை செழிக்க வைத்து, கடைசியில் பழி வாங்கி விட்டார். ஏழைகளின் வயிற்றெரிச்சல் சும்மா விடுமா?

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 487


பிருந்தன் கோ




ரகுநாதன் சசிகரன்




விநாயகமூர்த்தி விஜயநாதன்




சஞ்சீவ் எஸ்எம்எஸ்




இராசரத்தினம் ராஜி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவிசார் போட்டியாளர்களால் நவீனமாக உடைக்கப்பட்டுவிட்ட தமிழ்த் தேசியம் என்ற வில்லாயுதம்

இன்று இலங்கையில் இடம்பெற்று வரும் விடயங்களை சர்வதேச உறவுகளின் பின்புலத்தில் விளங்கிக் கொள்வதாக இருந்தால், இரத்தம் சிந்தலின்றி, அதிகார சக்திகள் எவ்வாறு தங்களின் நலன்களை வெற்றிகொள்ள முடியும் என்பதற்கான ஒரு சிறந்த படிப்பினையாக இலங்கை விளங்கு கின்றது.

இலங்கையின் அமைவிடம், தெற்காசியாவின் அதிகாரமான இந்தியாவின் உடனடி அயல்நாடாக இலங்கை இருப்பது, ஆசியாவின் அதிகாரமாக சீனா எழுச்சியடைந்து வருவது, அந்த அடிப்படையில் சீனா இலங்கையிலும் வலுவாக காலூன்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டமை, இப்படியான பல காரணங்களின் விளைவாகவே இலங்கையின் உள்ளக அரசியலானது, அதிகார சக்திகளின் கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது.

இலங்கை காலனித்துவத்திலிருந்து விடுபட்ட பின்னர் நிகழ்ந்த முதலாவது வெளியாரின் நேரடி தலையீடாக, இந்தியாவின் தலையீடு அமைகிறது. இந்தத் தலையீடு என்பது அன்றைய உலக ஒழுங்கின் கீழ் நிகழ்ந்துகொண்டிருந்த புவிசார் அரசியல் முரண்பாடுகளின் விளைவாகவே நிகழ்ந்தது.

அன்று, கொள்கை ரீதியாக சோவியத் முகாமுடன் இணைந்திருந்த இந்தியா, அதனுடைய பிராந்திய அதிகாரத் தகுதி நிலையை, அப்போதைய சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் உதாசீனம் செய்ததன் விளைவாக, இலங்கைக்கு ஒரு பாடத்தை புகட்ட நினைத்தது. அற்றிருந்த இந்திய பிரதமர் இந்திராகாந்தி உலகளவில் மிகவும் செல்வாக்கான தலைவராகவும், அதே வேளை துணிச்சலான தலைவராகவும் இருந்தார்.

ஆறு கோடி தமிழ் மக்களை கொண்டிருக்கும் இந்தியா, இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் பாராமுகமாக இருக்க முடியாது என்னும் ஒரு வாதத்தை கையிலெடுத்து, ஜே.ஆரின் குரல்வளையை நசிக்க முற்பட்டார் இந்திரா. இதன் விளைவாக அன்றிருந்த மிதவாத அணியான தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஆயுத விடுதலை அமைப்புக்கள் அனைத்தையும் இந்தியா தத்தெடுத்துக்கொண்டது. அவ்வாறு அன்று தத்தெடுக்கப்பட்டவர்களில் எஞ்சியிருப்பவர்கள்தான் இன்று ஒரு கூட்டமைப்பாக இருக்கின்றனர்.

அன்றிருந்த புவிசார் அரசியல் போட்டியில், இந்தியா அமெரிக்காவிற்கு எதிர்நிலையில் இருந்தது. இவ்வாறானதொரு சூழலில்தான் அன்றைய இலங்கையின் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அமெரிக்க சார்பு, இந்திராகாந்தியை சினம்கொள்ளச் செய்தது. இதன் விளைவாக இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த விடய்ங்களும் தமிழ் அரசியல் ஆர்வலர்களுக்கு தெரிந்ததே!

அன்றிருந்த புவிசார் அரசியல் முரண்பாடுகளில் இலங்கை எவ்வாறு சிக்கிக்கொண்டது என்பதையும் அதன் விளைவாக பிராந்திய சக்தியான இந்தியாவை, இலங்கை பகைத்துக் கொண்டது என்பதையும் சுட்டிக் காட்டும் நோக்கிலேயே சில விடயங்கள் இங்கு பதிவாகிறது.

இலங்கையின் நவீன அரசியல் வரலாற்றில் புவிசார் அரசியல் முரண்பாடுகளின் விளைவாக நிகழ்ந்த முதலாவது வெளியாரின் தலையீடாகவே மேற்படி இந்திய தலையீடு நிகழ்ந்தது.

2009இல் மூன்று தசாப்தங்களாக தெற்காசிய இராணுவ வலுச் சமநிலையில் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியளவிற்கு, பலமான நிலையில் இருந்த, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை புதியதொரு புவிசார் அரசியல் போட்டிக்கான களமாக மாறியது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றியென்பது சிலர் கூறுவது போன்று வெறுமனே மகிந்தவின் வெற்றியோ அல்லது கோத்தபாயவின் வெற்றியோ அல்ல, மாறாக அது பலம்பொருந்திய நாடுகளின் ஆதரவில் இலங்கை இராணுவம் பெற்றுக்கொண்ட வெற்றி.

2009இல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போது, தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் பெருமளவிற்கு இந்தியாவிற்கு எதிரான பார்வையே மேலோங்கியிருந்தது. புலம்பெயர் தமிழ் அரசியல் அமைப்புக்களை பிரதிநிதித்துவம் செய்தவர்களின் நலன்கள் மேற்குலகுடன் பின்னிப்பிணைந்திருந்ததால், அவர்கள் இந்தியாவை விமர்சிப்பதன் ஊடாக தங்களின் தமிழ்த் தேசிய தகுதிநிலையை நிரூபிக்க முற்பட்டனர்.

ஆனால், இதுவரை வெளிவந்த எந்தவொரு அங்கீகாரமுள்ள ஆவணங்களிலும் இறுதி யுத்தத்தில் இந்தியாவின் பங்கு தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் ,இறுதி யுத்தத்தில் அமெரிக்காவின் பங்களிப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தினால் 2010இல் வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற தமிழ் மக்களின் கொலைகளுக்கு, அமெரிக்காவும் பிரித்தானியாவும் பொறுப்புக்கூற வேண்டுமென்று அழுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

அமெரிக்க மற்றும் பிரித்தானிய அழுதங்களின் காரணமாகவே 27 நாடுகளை உள்ளடக்கியிருக்கும் ஜரோப்பிய ஒன்றியம் 2006இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சர்வதேச பயங்கரவாத இயக்கமாக தடை செய்தது. மேற்படி ஜரோப்பிய ஒன்றியத்தின் தடையானது மகிந்த ராஜபக்சவின் யுத்தத்திற்கு உத்வேகமளித்தது. சிறிலங்கா இராணுவம், வன்னி நிலப்பரப்பின் மீது, தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை கூட பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்கியது. எனவே, இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற அழிவுகளில் அமெரிக்காவிற்கும் பிரித்தானியாவிற்கும் பங்குண்டு, என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தியா பற்றி பேசுவதில் அலாதிப்பிரியம் காண்பிக்கும் தமிழ்த் தேசியவாதிகள் என்போர், இந்த விடயங்களை பற்றி வாய்திறப்பதில்லை. நான் இந்த விடயங்களை இந்த இடத்தில் குறிப்பிடுவதுகூட, அமெரிக்க எதிர் மனோபாவத்தின் விளைவாக அல்ல. ஏனெனில் தமிழர்கள் அமெரிக்காவை எதிர்த்து நிற்பதாலும் எதுவும் ஆகிவிடப்போவதில்லை. மாறாக, விடயங்களை விளங்கிக் கொள்வதற்காக இவ்வாறான தகவல்கள் இங்கு தரப்படுகிறது.

ஒரு கேள்வி எழலாம், அவ்வாறாயின் இறுதி யுத்தத்தில் இந்தியாவின் பங்களிப்பு இல்லையா? என்று. இதற்கான பதில் இருந்தது என்பதுதான். அது எப்படியானது என்றால், விடுதலைப் புலிகளை காப்பாற்ற இந்தியா விரும்பியிருக்கவில்லை ஏனெனில், இந்தியாவும் விடுதலைப் புலிகள் என்னும் அமைப்பு, தொடர்ந்தும் இருப்பதை இந்தயா விரும்பவில்லை.

இது தொடர்பில் பேசுவோர் அன்றைய சூழலில் காங்கிரசுக்கு பதிலாக பி.ஜே.பி அரசாங்கம் இருந்திருந்தால் அவர்கள், விடுதலைப் புலிகள் தொடர்பில் மாறுபட்ட நிலைப்பாட்டை கடைப்பிடித்திருப்பார்கள் என்று சொல்வதுண்டு. என்னைப் பொறுத்த வரையில் அப்படி நான் கருதவில்லை. பி.ஜே.பி இருந்திருந்தாலும் நிலைமைகளில் எந்த மாற்றமும் ஏற்பட்டிருக்காது. ஏனெனில் விடுதலைப் புலிகளை தொடர்ந்தும் அனுமதிப்பதில்லை என்பது ஒரு உலகளாவிய முடிவாக மாறியிருந்தது.

2010இல் நோர்வேயின் சமாதான பங்களிப்பு தொடர்பில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் பேசிய அமெரிக்காவின் முன்னைநாள் உதவி இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆமிரேட்ஜ், **விடுதலைப் புலிகள் அமைப்பானது, உலக பயங்கரவாததின் வகைமாதிரியாக இருந்தது, அமெரிக்காவை பொறுத்தவரையில் அது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல** என்று குறிப்பிட்டார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன்கெரி, யுத்தம் எவ்வாறு நடத்தப்பட்டது என்பது தொடர்பில் எங்களுக்கு முன்னைய அரசாங்கத்துடன் உடன்பாடின்மைகள் இருப்பினும் கூட, கொலைகார பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளும் அவர்களால் விதைக்கப்பட்ட அச்சமும் பூண்டோடு அழிக்கப்பட வேண்டுமென்பதில் தாங்கள் (அமெரிக்கா) தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாக குறிப்பிட்டிருந்தார்.

இவை அனைத்தையும் திரட்டி சிந்தித்தால், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக அழிப்பதில், அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலகின் பங்களிப்பு என்ன என்பதை விளங்கிக் கொள்வதில் சிரமங்கள் இருக்காது.

மேற்குலகின் ஆதரவுடன் விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமை இலங்கைத் தீவிலிருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, புதியதொரு பிரச்சினை உருவெடுத்தது. இந்த பிரச்சினையின் விளைவுதான் தற்போது நாங்கள் எதிர்கொண்டிருக்கும் புதிய அரசியல் சூழ்நிலை.

மேற்குலகின் பலமான ஆதரவுடன் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்ட போதும், அந்த வெற்றியின் பின்னர் மேற்குலகுடன் ஒத்தோடும் ஒருவராக மகிந்த செயற்பட்டிருக்கவில்லை. யுத்தத்தின் போது மகிந்த அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் சில வாக்குறுதிகளை வழங்கியதாகவும் ஆனால், அதனை வெற்றியின் பின்னர் காற்றில் பறக்கவிட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது. ஆனால் , அதன் உண்மைத் தன்மை பற்றி அறியமுமுடியவில்லை.

ஆனால், யுத்த வெற்றியின் பின்னர், இலங்கைத் தீவை சீனாவின் கொல்லைப்புறமாக மாற்றும் வகையிலேயே மகிந்த ராஜபக்சவினது செயற்பாடுகள் அமைந்திருந்தன. இது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் ஒரு சவாலாக மாறியது.

இந்த இடத்தில் நாம் ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு ஆதரவை நல்கிய அமெரிக்காவே பின்னர், யுத்தத்தின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதான குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தது. இலங்கையின் மீதான பொறுப்புக்கூறல் தொடர்பில் அழுத்தங்களை பிரயோகித்ததுடன், அதற்கான உலகளாவிய அரசியல் தலைமைத்துவத்தையும் வழங்கியது.

இந்த அடிப்படையில்தான் ஜக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன. **யுத்தத்தை தடுத்து நிறுத்தியும் தமிழ் மக்களின் உயிர்களை பாதுகாத்திருக்க முடியும். ஆனால் , அதனை அமெரிக்கா செய்யவில்லை.** மாறாக, யுத்தத்தின் விளைவுகளை முன்வைத்து மகிந்த அரசாங்கத்தின் மீது மென் அழுத்தங்களை பிரயோகித்தது.மகிந்தவின் மீதான மென் அழுத்தங்கள், அவர் மேலும் சீனாவை நோக்கிப் பயணிப்பதற்கே வழிவகுத்தது.

இவ்வாறானதொரு சூழலில்தான் இவ்வாண்டு மகிந்த ராஜபக்ச, எவரும் எதிர்பார்க்காத வகையில் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னால் அமெரிக்காவின் திரைமறைவு செயற்பாடுகள் இருந்திருக்கிறது என்பதை ஊகிப்பதும் கடினமான ஒன்றல்ல.

சீனாவின் முழுமையான செல்வாக்கிற்குள் இலங்கை விழுமாக இருந்தால், ஆசியா நோக்கிய அமெரிக்க முன்னெடுப்புக்கள் பெரிதும் பாதிக்கப்படும். இந்த விடயத்தை கருத்தில் கொண்டுதான் அமெரிக்கா அதனது மென் அதிகாரத்தை பிரயோகித்தது, இலங்கையின் வெளிவிவகாரக் கொளகையை மேற்கு நோக்கி வளைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

அமெரிக்கத் தலையீட்டின் விளைவாகவே இன்று ஒரு தேசிய அரசாங்கம் இலங்கையில் உருவாக்கியிருக்கிறது. 32 வருடங்களுக்கு பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

தமிழர் தரப்பின் எதிர்பார்ப்புக்களில் இந்த புதிய நிலைமைகள் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை தற்போதைக்கு கூற முடியாது. ஆனால், சீனாவின் செல்வாக்கு வ்ளையத்திற்குள் இலங்கை முற்றிலுமாக விழுவதை தடுக்கும் வகையிலேயே ஒவ்வொரு நகர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இனியும் மேற்கொள்ளப்படும்.

சீனா, ஆசியாவில் ஒரு மேலாதிக்க அதிகாரமாக எழுச்சியடைந்து வருவதை தடுத்து நிறுத்துவதன் ஊடாகவே, அமெரிக்காவின் செல்வாக்கை இப்பிராந்தியத்தில் பேணிப் பாதுகாக்க முடியும். சீனாவின் எழுச்சிக்குள் தெற்காசிய நாடுகள் விழுவதை தடுத்து நிறுத்த வேண்டியது இந்தியாவினதும் தேவை. இந்த பொது ஆட்டத்திற்கான ஆடுகளத்தில் இலங்கையும் ஒரு அங்கமாகியிருக்கிறது.

சீனாவை கட்டுப்படுத்துதல் என்னும் நோக்கில் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் இலக்கு ஒரு நேர் கோட்டிலேயே சந்திக்கின்றது. இந்த அடிப்படையில்தான், ஆட்சி மாற்றம் ஒன்றின் ஊடாக, இலங்கையை சீனா நோக்கி நகர்த்த முற்பட்ட தெற்கின் சக்திகள் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றனர்.

இதிலுள்ள அரசியல் படிப்பினை முக்கியமானது. பல்கட்சி ஜனநாயக முறைமையை மிகவும் கச்சிதமாக கையாளுவதன் ஊடாகவும், அமெரிக்க நலன்களுக்கு எதிரான உள்ளூர் சக்திகளை முடக்க முடியும் என்னும் படிப்பினை, இலங்கை அனுபவத்தின் வாயிலாக கிடைக்கப் பெற்றிருக்கிறது.

ஆனால், புவிசார் அரசியல் முரண்பாடுகளினால் வெளியார் தலையீடு செய்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழர் பிரச்சினை மிகவும் நேர்த்தியாக கையாளப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் கவனிக்க வேண்டும். மொத்தத்தில் தமிழ் மக்களின் தமிழ்த்தேசிய விடுதலை நோக்கினாலான தேசிய எழுச்சி என்ற வில்லாயுதம்,வல்லாதிக்கத்தால் மீண்டும நவவீனமாக் உடைக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: மாசிலா உண்மைக் காதலே
திரைப்படம்: அலிபாபாவும் 40 திருடர்களும்
பாடியவர்: ஏ.எம். ராஜா, பி. பானுமதி
இசை: எஸ். தக்ஷிணாமூர்த்தி




மாசிலா உண்மைக் காதலே மாறுமோ செல்வம் வந்த போதிலே?

மாசிலா உண்மைக் காதலே மாறுமோ செல்வம் வந்த போதிலே?

பேசும் வார்த்தை உண்மை தானா பேதையை ஏய்க்க நீங்கள் போடும் வேஷமா?

பேசும் வார்த்தை உண்மை தானா பேதையை ஏய்க்க நீங்கள் போடும் வேஷமா?

கண்ணிலே மின்னும் காதலே கண்டுமா சந்தேகம் என்தன் மீதிலே?

நெஞ்சிலே நீங்கிடாது கொஞ்சும் இன்பமே

நிலைக்குமா இந்த எண்ணம் எந்த நாளுமே?

நெஞ்சிலே நீங்கிடாது கொஞ்சும் இன்பமே

நிலைக்குமா இந்த எண்ணம் எந்த நாளுமே?

பேசும் வார்த்தை உண்மை தானா பேதையை ஏய்க்க நீங்கள் போடும் வேஷமா?

மாசிலா உண்மைக் காதலே மாறுமா செல்வம் வந்த போதிலே?

கண்ணிலே மின்னும் காதலே கண்டுமா சந்தேகம் என்தன் மீதிலே

உனது ரூபமே உள்ளம் தன்னில் வாழுதே

இனிய சொல்லினால் எனது உள்ளம் மகிழுதே

உனது ரூபமே உள்ளம் தன்னில் வாழுதே

இனிய சொல்லினால் எனது உள்ளம் மகிழுதே

அன்பினாலே ஒன்று சேர்ந்தோம் இங்கு நாம் இன்ப வாழ்வின் எல்லை காணு வோம்

அன்பினாலே ஒன்று சேர்ந்தோம் இங்கு நாம் இன்ப வாழ்வின் எல்லை காணுவோம்

மாசிலா உண்மைக் காதலே மாறுமோ செல்வம் வந்த போதிலே?

மாசிலா உண்மைக் காதலே மாறுமோ செல்வம் வந்த போதிலே மாறுமோ?

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

நதியா,கார்த்திகா-கச்சேரி, யாழ்ப்பாணம், வேணுகா-மானிப்பாய், பிரசாந்த, கிரிசாந்,திலீபன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். த.டயன்சன்-உரும்பிராய்,

*அன்பு வாசகர்களே!*

காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்

**021 567 1543**

எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்.

## ஈழத்து சினிமா

### மிச்சக்காசு குறும்பட விமர்சனம்



மிக எளிமையான நேர்கோட்டுக் கதையில் பொருளாதார திட்டமிடலின் நுண்ணிய அபத்த விளிம்புகளை மையப படுத்தி. இயக்குநர் மதிசுதாவினால் சீராக நெறிப்படுதப்பட்டு வெளிவந்திருக்கும் குறும்படம் மிச்சக்காசு.

பலர் நிஜ வாழ்வில் கடந்திருக்கக்கூடிய மிக இலகுவான யதார்த்தமான கதைதான். பலசமயம் கடையில் பொருட்களை கொள்வனவு செய்யும்போது மிகுதிச் சில்லறைக்காக பலசமயம் நெருப்பெட்டி, சொக்கிலேட் , இனிப்புப் பண்டங்கள் போன்ற பல்வேறு சிறிய பொருட்களை துரதிர்ஷ்டவசமாக மிச்சக்காசு இல்லை என்றபோது அதற்குப் பதிலாக வேண்ட நேரும். இந்த இயல்பான சம்பவத்தினை வைத்து பின்னப்பட்ட திரைக்கதையில் குறும்படம் அமைத்துள்ளார் இயக்குநர் மதிசுதா.

ஒரு நடுத்தரவர்க்க குடும்பத்தில் உள்ள ஒரு குட்டிச் சிறுவனூடாக கதை நகர்த்தப்படுகின்றது. அவனது அம்மா கடைக்குப்போய் உப்புப் பக்கட் வேண்டிவரச் சொல்கின்றார். சலிப்புடன் தனது சிறிய சைக்கிளில் கடைக்குச் செல்கின்றான். உப்புப் பக்கட் வேண்டிய மிச்சக்காசுக்கு சில்லறை கொடுக்காமல் நெருப்பெட்டி ஒன்றை கடைக்காரர் கொடுகின்றார் அல்லது தள்ளி விடுகின்றார். சிறுவனும் ஒருவித தயக்கம் கலந்த யோசனையுன் மறுபேச்சு இல்லாமல் அதனை எடுத்துக் கொண்டு வீடு செல்கின்றான். திரும்பவும் அம்மாவுக்குத் தேவையான பொருட்கள் வேண்ட வேண்டியிருகின்றது. மீண்டும் கடைக்குச் செல்கின்றான். இந்த முறை சில்லறைக்குப் பதிலாக வேறு சிறிய பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. அவனும் பேசாமல் அதனை எடுத்துக் காச்சட்டை பொக்கட்டினுள் பத்திரப்படுத்திக் கொண்டு வீடு செல்கின்றான். இவ்வாறு மீண்டும் மீண்டும் சம்பவங்கள் நடக்கின்றன. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமான சிறிய பொருட்கள் மிச்சக்காசுக்குப் பதிலாகக் கிடைகின்றன.

இறுதியில் சிறுவன் கடைக்குப்போகின்றான். ஊதுவத்தி வாங்குகின்றான். கடைக்காரர் இருபத்தைந்து ரூபாய் எடு என்கிறார். இதுவரை கடைக்காரர் மிச்சக்காசுக்குப் பதிலாக தந்த பொருட்களை சேர்த்துவைத்து காச்சட்டை பொக்கட்டுக்குள் இருந்து எடுக்கும் சிறுவன் அதனை எண்ணிப்பார்த்து ஊதுபத்திக்கான முழுப் பணமாக தந்திரமாகக் கொடுத்துவிட்டு நடையக்கட்டுகின்றான். திகைத்த கடைக்காரர் சிறுவனை சினம் கொண்டு எட்டிப்பார்க்க குறும்படம் நகைச்சுவையாக முடிவுக்கு வருகின்றது.

மிக எளிமையான கதையாக இருந்தாலும் திரைக்கதையும் எடிட்டிங்கும் தொய்வில்லாமல் சுவாரசியப் படுத்துகின்றது. சிறுவனாக நடித்த சங்கர் தனது முகபாவனையால் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியிருகின்றார். அம்மா கடைக்குபோகச்சொல்லி கூப்பிடும் போது மாறும் முகபாவனைகள் அலுப்பை வெளிபடுத்தும் விதங்கள் நன்றாக ஒளிப்படமாகியுள்ளது. அதேநேரம் கடைக்காரராக நடித்த மதிசுதா இறுதியில் நாக்கை மடித்துக் கொண்டு எட்டிப்பார்க்கும் ஒளிப்பதிவுச் சட்டங்கள் நன்றாக அமைந்துள்ளன. முச்சக்கர வண்டியில் பயணிக்கும் வீட்டு நாய், “கொஞ்சம் இருங்க வாறன்” என்று சொல்லும் வசனங்கள் மிகவும் ரசிக்க வைக்கின்றன.

குறும்படத்தில் மிச்சக்காசுக்குப்பதிலாக நெருப்பெட்டி, சொக்கிலேட் கொடுக்கப்படுவது உரையாடல் இன்றி காட்சிப்படிமமாகச் சொல்லப்படுகின்றது. சிலசமயம் பார்வையாளர்களுக்கு குழப்பத்தினை ஏற்படுத்தலாம். இருந்தாலும் சிறுவன் கொடுக்கும் முகபாவனையில் இருநது புரிந்துகொள்ள முடியும். ஒரே நாளில் சிறுவன் பல்வேறு பொருட்களை வேண்டச் செல்வது நெருடலைத் தருகின்றது. ஒரே நாளில் பல்வேறு பொருட்கள் வேண்ட வேண்டி இருந்தால் ஒருதரமே அதனை பட்டியல் இட்டு பெற்றோர்களினால் கொடுத்து அனுப்புவதற்கான வாய்ப்புகளே அநேகமான இடங்களில் நிதர்சனமாக இருகின்றன. வெவ்வேறு நாள் என்று காட்சிப்படுத்த சிறுவனின் ஆடையினை மாற்றியிருக்கலாம்.

நகைச்சுவை படத்துக்கான பின்னணி இசை குறும்படம் முழுவதும் திகட்டாமல் ஒலிகின்றது. ஒளிப்பதிவு திருப்திப்படுத்தும் வகையில் அட்டகாசமாக இருகின்றது. மேலும் இக்குறும்படம் வெறும் செல்போனில் படமாகப்பட்டது என்பது மேலும் சுவாரசியமானது.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துக் கவிதைகள்

மிக இங்கிதமாய்
என் அடையாளம் குறித்து பேசுகிறாய்
பயங்கரமான
வேற்று முனகலுடன்
மெத்தைகளில் நான் புரள்வதாய்
நெடும் இரவை
விழித்துக் கழிக்கிறாய்
காலைகளிலும்
மூடாத குளியலிலும்
முழங்கால்களை மறைக்காத
காலை உணவிலும்
துருத்திய முலைகளிலும்.
என் தாசித்தனம் உன்
விழிகளால் ஒட்டப்படுகிறது.
மீண்டும் மீண்டும்
முந்தானையைச் சரித்த
உன் உள்ளாடைக் களைவுதான்
புரியாமலேயே தொக்குகிறது
பூவைப் போலக் கசங்கி . . .

மிக இதமான பொழுதுகள்
மனதை வருடுகின்றன
உன் நினைவுகள்போல
மனதைத் திறந்து
முழுதாய் வெளிப்பட்ட பின்னும்
இலையுதிர்ந்த
மரமாகுவது தொலைவில் உனக்கும்
மிக அருகில் எனக்கும்
கனத்துப் பெருகுகிறது.
கரையடர்ந்த
தென்னைகளுடன்
தனித்துவிட்டதாய் விடும்
நெடும் மூச்சுகள்
என் காற்றிலும்
கலக்கத் தவறுவதில்லை.
மிகச் சாதாரணமாகிப்போகிறது
இந்தக் கவிதை
நம் அருகாமைபோல.

**சலனி**

மழையோடுதான் விடிகிறது காலைப்பொழுது
நான் குளிக்குமுன்னமே தான் குளித்த பூமரங்கள்
பள்ளிக்கு வந்திருக்கும் சிறுமிகள்
பெரிய வாத்தியார்
மாமரம்
புற்கள்
சின்ன வகுப்புப் பிள்ளைகள்
என் வாசல் ஒரு பள்ளிக்கூடமாக
உதவி செய்த காலைமழை
இன்னும் வாழ வேண்டும்
நாளையும் வர வேண்டும்
என் வாசலில் மரங்களின் கல்வி ஓங்கி
கனிய வேண்டும்
பூமரத்தின் முகங்களெல்லாம் புன்னகைகள்
அவைகளுக்கு
பிடித்த பாடம் நடக்கிறது
குளிர்
என் போர்வையை அவைகளுக்கு
நான் தரத் தேவையில்லை
பாடம் ஏறாது
வெயில் வருகிறது
நிலத்தை உலர்த்துதல் பற்றி
இருட்டை விரட்டியடித்து
தலையை எப்படி நிமிர்த்துதல் என்று
பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க
வெயில் வருகிறது
வெயில் விஞ்ஞான ஆசிரியர்.

**சோலைக்கிளி**

# பாயும்புலி

## திரை விமர்சனம்



மதுரையில் தொழிலதிபர்களை மிரட்டிப் பணம் பறிக்கும் கூட்டத்தைப் பிடிக்கப்போகும் உதவி ஆய்வாளர் ஒருவரை நடுச்சாலையில் வைத்து வெட்டிக்கொல்கிறார்கள்.

பொலிஸ் மேல கைய வைக்க ஒவ்வொருத்தனும் பயப்படணும் என்பதற்காக அவர்களையெல்லாம் குருவி சுடுவது போல் சுட்டு வீழ்த்தப் புறப்படுகிறார் விஷால்.

கதாநாயகன் காவல்துறை அதிகாரி என்றால், என்னவெல்லாம் நடக்குமோ அவையெல்லாம் இம்மி பிசகாமல் இந்தப்படத்திலும் நடக்கிறது.

ஏதாவது வித்தியாசம் காட்ட வேண்டுமே என்பதற்காக, வில்லன் யார்? என்பதில் ஒரு மாற்றத்தைச் செய்திருக்கிறார்கள். அதுவும் புதிதல்ல.

எண்ட்ரியே அதிரடியா இருக்கு பார் என்று சூரி வசனம் பேசும்போது ஒருவனை ஓங்கிக்குத்திக் கொண்டே அறிமுகமாகிறார் விஷால்.

அதிலிருந்து அவர் செய்யும் எல்லாக்காரியங்களுமே அதிரடிதான். காதல்காட்சிகளிலும் கடமையைக் கலந்துவிட்டிருக்கிறார்கள்.

காவல் அதிகாரியாகக் கொதிப்பது, காதலனாகக் குழைவது என்று தேவைக்கேற்ற வேறுபாட்டைக் காட்டி தன் பங்கைச் சரியாகச் செய்திருக்கிறார் விஷால்.

நாலுபாட்டு இரண்டுசீன் வகைக் கதாநாயகியாக காஜல்அகர்வால். அவருக்குச் சாலையைக் கடக்கப் பயம் என்றெல்லாம் சொல்லி அநியாயத்துக்கு நடிக்க வைத்திருக்கிறார்கள்.

கல்லூரி மாணவனிடம் தப்பி ரவுடியிடம் மாட்டி அவனிடமிருந்து தப்ப விஷாலை நாடினால் அவர் அவர்களை விட மோசமானவர் என்று தெரிந்து அதிர்ந்து நிற்பது மட்டுமே காஜலுக்குச் சொல்லிக் கொள்கிற மாதிரியான காட்சி. மற்றபடி பாதிவழியிலேயே அவரை இறக்கிவிட்டுவிட்டு திரைக்கதை பயணித்துவிடுகிறது.

விஷால் உதவி ஆணையாளர் என்றால், சாதாரண காவலராக சூரி. அப்போதுதானே அவருடனே இருக்கமுடியும்.

அவ்வப்போது சிரிக்கவைக்கிறார். மது குடித்துவிட்டு மனைவியிடம் மாட்டிக்கொள்ளும் காட்சிகள் குறிப்பாக தலைக்கவசக்காட்சி பெரியவரவேற்புப்பெறும்.

விஷாலின் பாசமிக்க அப்பாவாக வேலராமமூர்த்தியும் அண்ணனாக சமுத்திரக்கனியும் நடித்திருக்கிறார்கள்.

இப்படி ஒரு குடும்பம் இருந்தால் எப்படி இருக்கும்? என்று நினைக்கிற மாதிரியான குடும்பம். இறுதிக் காட்சியில் அந்த வீட்டுக்குள் நடக்கும் நிகழ்வு எதிரிக்கும் நடக்கக் கூடாது என்று நினைக்கவைக்கிறது. படத்தில் மிகவும் பலமான காட்சி அது.

சமுத்திரக்கனியின் வேடம் தான் திரைக்கதையின் மையம். அதைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப சிறப்பாக நடித்திருக்கிறார்.

தொழிலதிபர்களாக நடித்திருப்பவர்களில் ஜெயப்பிரகாஷ் தனித்துத் தெரிகிறார். அவர் காஜலின் அப்பா என்பது மட்டுமல்ல, மகளின் திருமணம் பற்றிப் பேசப்போன இடத்தில் நடக்கும் நிகழ்வில் அவருடைய நடிப்பு நன்று. அமைச்சராக வருகிற ஆர்கே, காவலதிகாரியாக வருகிற ஆனந்தராஜ் ஆகியோரும் கவனிக்க வைக்கிறார்கள்.

இமானின் இசையில் பாடல்கள் கேட்கும்படி இருக்கின்றன. பின்னணி இசை பரவாயில்லை ரகம். பசிகொண்ட சிங்கத்தைப் பாயும் புலி வெல்லும் என்று ஒரு பாடலில் சொல்லியிருக்கிறார் வைரமுத்து.

மதுரை மேல் பறந்து பறந்து பயணம் செய்கிறது வேல்ராஜின் ஒளிப்பதிவுக்கருவி. காட்சியமைப்புகளில் நேர்த்தியும் பாடல்காட்சிகளில் மண்மணத்தையும் கலந்திருக்கிறார்.

சிவப்பான காஜலின் இடுப்பில் விஷால் கைவைக்கும் காட்சி திமுக கொடியை பளிச்சென நினைவுபடுத்துகிறது. அதைத் தவிர்த்திருக்கலாமோ?

நான்மகான்அல்ல, பாண்டிய நாடு போன்ற படங்களில் மத்திய தரவர்க்கத்தினரின் பாசத்தைப் பற்றிக் காட்டிய இயக்குநர் சுசீந்திரன், இந்தப்படத்தில் அவர்கள் செய்யும் மோசத்தைப் படமாக எடுத்திருக்கிறார்.

சுசீந்திரனின் கதாநாயகர்கள் குடும்பத்தின் மீது பாசம் கொண்டவர்களாகவும் நல்லவர்களாகவும் இருப்பார்கள். அதற்கேற்ப அந்தக் குடும்பமும் இருக்கும், இந்தப்படத்தில் அதைக் குலைத்துவிட்டார்.

மதுரைமண்சார்ந்த ஒரு பாரம்பரியமான குடும்பத்தில் தப்பான ஒருவர் என்று காட்டியிருப்பது கதைக்குப் பெரிதாகப் பயன்படவில்லை என்றே சொல்லலாம். அரசியல்ஆசை எதுவேண்டுமானாலும் செய்யவைக்கும் என்பதும் இரத்த உறவுகளைக் கூடக் காவு கேட்கும் என்பதும் கூடப் புதிதல்ல. இனிமேல் கதைக்காக நடிகர்களைத் தேடுங்கள் இயக்குநரே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்கான தேடலில் தமிழருடன் சனல் 4

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் தொடர்பான அறிவிப்புக்கள் வெளியிடப்படும் சந்தர்ப்பங்களில் சனல் 4 ஊடகத்தின் ஆவணப்படம் குறித்த எதிர்பார்ப்பும் மேலோங்கியிருக்கும் என்பதை நீதிக்கான தேடல் என்ற தலைப்பில் வெளியிட்ட காணொலி மூலம் மீண்டுமொருமுறை உலகிற்கு உணர்த்தியுள்ளார் கெலம் மக்ரே.

2009 ஆம் ஆண்டு மேமாதம் 18 ஆம் திகதியுடன் உள்நாட்டுப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு விட்டதாக இலங்கை அரசு அறிவித்த போதிலும் போர்க்காலத்தில் அரங்கேறிய தமிழினத்திற்கு எதிரான அநீதிகளை நினைவுபடுத்தி சர்வதேச நாடுகளின் தலைவர்களின் மனச்சாட்சிகளை தட்டியெழுப்பி வருகிறார் கெலம் மக்ரே.

இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள், போர்க்குற்றங்கள் குறித்து நிச்சயமாக சர்வதேச விசாரணை ஒன்று இலங்கை அரசிற்கு எதிராக் நடத்தப்பட்டே ஆக வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து சர்வதேச நாடுகள் நழுவ முடியாது என்பதையும் மீண்டுமொருமுறை ஆணித்தரமாக காணொலி மூலம் வெளிப்படுத்தியுள்ளார் கெலம் மக்ரே.

தமிழினப் படுகொலை குறித்து சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

உள்ளக விசாரணை உண்மையை வெளிக்கொணராது என்பதால் சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்றே ஏற்புடையதாக அமையும் என்பதை வலியுறுத்தி தமிழர் தாயமெங்கும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் இக்காணொலியை வெளியிட்டுள்ளார் கெலம் மக்ரே.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்தும் இறுதிக்கட்டப் போரில் முள்ளிவாய்க்கால் பகுதியில் தமிழர்களைப்போர் தவிர்ப்பு வலயத்திற்குள் வைத்து கொத்துக் குண்டுகளைப் பொழிந்து கொன்றொழித்த கொடுமைகளையும் காணொலியாக வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியவர் கெலம் மக்ரே.

ஊலக நாடுகளின் பிரதிநிதிகள் கண்ணீர்விட்டழுத சம்பவங்களுக்கும் போர்க்குற்றங்கள், மனித உரிமைமீறல்கள் குறித்து சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும், காணாமற் போனவர்கள் கண்டறியப்படவேண்டும், இராணுவத்திடம் சரணடைந்தவர்களுக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி தாயகத்திலும் தமிழகத்திலும் உலக நாடுகளிலும் போராட்டங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டதற்கும் முக்கிய காரணியாக செயற்பட்டவர் கெலம் மக்ரே.

லண்டனைத் தலைமையகமாகக்கொண்டு இயங்கும் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தில் ஆவணப்படங்களையும் காணொலிகளையும் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வரும் ஊடகவியலாளர் கெலம் மக்ரே உள்ளிட்ட சர்வதேச ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பலபுறக் கணிப்புக்களையும் மறைமுக அச்சுறுத்தல்களையும் விடுத்திருந்தும் அதற்கெல்லாம் சற்றும் அடிபணியாது உண்மைகளை வெளிப்படுத்துவதில் கெலம் மக்ரே உறுதியுடன் செயற்பட்டிருந்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 30 ஆவது கூட்டத்தொடர் நாளை 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த அறிக்கை எதிர்வரும் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கையின் பிரதியொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில் இலங்கை அரசிற்கு பெரும் அச்சுறுத்திலாக விளங்கும் சனல் 4 ஊடகம் அதன் இயக்குநர் கெலம் மக்ரேயால் தயாரிக்கப்பட்ட காணொலியை வெளியிட்டு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

நெஞ்சைப் பதபதைக்க வைக்கும் போரக் காட்சிகளை காணொலியில் உள்ளடக்கியுள்ள கெலம் மக்ரே, இலங்கை: நீதிக்கானதேடல் என்று அதற்கு தலைப்பிட்டு நீதிக்கான தேடலில் தமிழர்களுடன் தான் இணைந்துள்ளதை மீண்டுமொருமுறை உலகிற்கு உணர்த்தியுள்ளார்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் அரங்கேறிய அட்டூழியங்களை எதிர்த்து நீதியைப் பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு தமிழர்கள் காத்திருந்த சந்தர்ப்பத்தில் மகிந்தவின் மாற்றத்தோடு தன் நிலைப்பாட்டையும் மாற்றிக்கொண்டது அமெரிக்கா.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு தமிழர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதை வெளிப்படுத்தும் முகமாகவும் சர்வதேச விசாரணையே வேண்டும். உள்நாட்டு விசாரணைக்கு உடன்பட முடியாது என்பதையும் வெளிப்படுத்தும் முகமாக கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நடைபயணமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியை சிங்களதேசம் விட்டுக்கொடுத்தால் தமிழர் சர்வதேச விசாரணைக் கோரிக்கையைவிட்டு விடுவார்கள் என்பது புதிய அரசின் எதிர்பார்ப்பாக இருக்கலாம். ஆனால் தமிழினத்தின் தலைவர் ஒருவரே. அவர் நிச்சயமாக சிங்கக் கொடியை ரணிலுடன் தாங்கிப் பிடித்த சம்பந்தன் இல்லை என்பதையும் அக்கட்சியில் அங்கம் வகிக்கும் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் வெளிப்படுத்தியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் இலங்கை அரசால் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள உள்ளக விசாரணையை வெளிப்படையாக எதிர்த்துள்ளனர், புறக்கணித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் போன்ற வர்கள் கட்சித் தலைமைக்கு கட்டுப்பட்டு சர்வதேச விசாரணையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதை உறுதிபடக்கூற முடியும்.

அதேவேளை புதிதாக் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்துள்ளஅக்கட்சியின் உறுப்பினர்களும் சர்வதேச விசாரணையைக் கோருவார்கள் என்று நம்பலாம். போரின் கொடூரங்களைத் தாங்கியவர்களுக்கு சம்பந்தரின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பெரிதாக தெரிய வாய்ப்பிருக்க முடியாது.

எனவே, சனல் 4 ஊடகவியலாளர் கெலம் மக்ரே தயாரித்து வெளியிட்டுள்ள இலங்கை: நீதிக்கான தேடல் காணொலியை ஆதாரமாகவும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தமிழர்கள் மேற்கொள்ளும் போராட்டங்களைக் கருத்திற்கொண்டும் நீதியை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபை முன்வரவேண்டும். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மகிந்த ஆட்சியில் தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிகோரும் தமிழருக்கு ஆதரவான நிலைப்பாட்டை விரைவாக எடுக்கவேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.





**காண்டீபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு விசாரணை...! எதற்காகத் தயக்கம்...?




எதிர்வரும் 14ஆம் திகதி ஐ.நா.வில் ஆரம்பமாகவுள்ள 30ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும்என்பது உறுதியாகியுள்ளது.

இந்நிலையில் இங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து உள்ளகப் பொறிமுறையிலான விசாரணையொன்றே முன்னெடுக்கப் படவுள்ளதான ஐயப்பாடுகள் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. குறிப்பாக இலங்கைக்கான ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதி கடந்த ஜூன் மாதம் 4ஆம் திகதி கொழும்பில் ஆற்றிய உரையும், தமிழினத்தின் மீது அதீத அக்கறை கொண்ட பிரித்தானியாவை தளமாகக் கொண்டியங்கும் சனல் 4 ஊடகத்தின் ஊடகவியலாளர் கெலும் மெக்ரே வெளியிட்ட ஐ.நா.வின் கசிந்த ஆவணமும் அந்த ஐயப்பாட்டிற்கான வலுவான அடித்தளத்தை இட்டிருக்கின்றன.

அதேநேரம் இலங்கைக்கு விஜயம் செய்த தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் பிஷ்வால் மனித உரிமைகள் தொர்டர்பாக இலங்கைக்கு போதிய கால அவகாசத்தினை வழங்குவதற்கு ஆதரவாக ஜெனிவா கூட்டத்தொடரில் பிரேரணையொன்றை கொண்டுவரவிருப்பதாக ஊடகவியலாளர்கள் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

மறுபக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான கட்சியாக அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சர்வதேச விசாரணை நிறைவுற்றுவிட்டது என கன்னி பாராளுமன்ற குழுக் கூட்டத்திலும், சில வெளிநாட்டு ஊடகங்களுக்கும் தெரிவித்திருப்பதாக தகவல்கள் கசிந்துள்ளன. சர்வதேச விசர்ரணையொன்று நிறைவுற்றால் தொடர்ந்து ஏன் உள்ளக பொறிமுறையிலான விசாரணை என்பது ஒரு புறமிருக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ ஆகியன பாராளுமன்ற தேர்தலின் பின்னர் தேசியப்பட்டியல் ஆசனம் குறித்து கலந்துரையாட ஆரம்பித்து இறுதியில், சென்றுவிட்ட பஸ்ஸுக்கு கைகாட்டி பயனில்லை என்பதை உணர்ந்தன.

ஆனால், பங்காளிகளின் ஒன்று கூடலின் போது கூட்டமைப்பு பதிவு, முழுமையான சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் வகையிலான விடயங்களில் ஏகோபித்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. குறிப்பாக முழுமையான சர்வதேச விசாரணையை அவை வலியுறுத்தியதோடு மட்டுமன்றி அக்கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும் அனுப்பியுள்ளன. அது மட்டுமன்றி தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் மீதும் பங்காளிக்கட்சிகள் தமது அதிருப்திகளை வெளியிட்டுள்ளன. அதேநேரம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் பங்காளிக்கட்சிகளின் கடிதத்தில் தமிழரசுக்கட்சி இணைந்து கொள்ளவில்லை என்பதோடு அவ்விடயம் குறித்து எவ்விதமான கருத்துக்களையும் அக்கட்சி வெளியிடவுமில்லை.

இவ்வாறு நிலைமையிருக்கையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்க செயலாளர் நிஷா தேஷாய் பிஸ்வால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திப்பை நடத்தியிருந்தார்.

இச்சந்திப்பில் பங்கெடுத்திருந்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இறுதிப்போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை மீறல்கள்மற்றும்மனிதாபிமானத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிய சிவாஜிலிங்கம் அதனை வழிமொழிந்து கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 34ஆவது அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அத்துடன் தீர்மான நிறைவேற்றத்தின் பின்னர் உரையாற்றிய வடக்கு முதல்வர் அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளருடனான சந்திப்பின் பின்னரே இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முடிவை எடுக்கவேண்டியேற்பட்டதாக குறிப்பிட்டிருக்கின்றார்.


இதேவேளை தொடர்ச்சியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைச் சார்ந்த சிலர் சர்வதேச விசாரணையை மலினப்படுத்துகின்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தமது பூகோள அரசியலை முன்னிலைப்படுத்தியே செயற்படுகின்றன. ஆட்சி மாற்றும் நீதி நியாயத்தை பெற்றுத்தராது என கூறிக்கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரை உள்ளீர்த்த மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டக்குழுவினால் யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமையன்று ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்துவேட்டைப் போராட்டம் வடக்கைத் தாண்டி கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டிருக்கின்றமை விசேட அம்சமாகும்.

இவ்வாறிருக்கையில், இங்கு மிக முக்கியமான விடயமொன்றை கோடிட்டுக்காட்ட வேண்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விடயம் கள் எடுத்துக்கொள்... முதல் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறும் காலப்பகுதியில் உள்நாட்டில் வெகுஜன போராட்டங்கள், கோரிக்கைகள், கவனயீர்ப்பு என்பன முன்னெடுக்கப்படுவது கடந்த ஆறுவருடங்களில் வழமையானதொன்றாகி விட்டது. ஆனால், தற்போது முழுமையான சர்வதேச விசாரணையின் ஊடாக நீதியை எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு, உள்ளகப் பொறிமுறையின் ஊடாக பதில் வழங்குவதற்கு ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியும், அரசாங்கமும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் சிலரும் முயற்சிப்பதாக குற்றம்சாட்டின் கூட்டமைப்பு பங்காளிக் கட்சிகளும், வடக்கு மாகாண சபையும், த.தே.கூட்டமைப்பின் மிகுதியானோரும்.

இச்சமயம், கோரிக்கை கடிதம் மூலமாகவோ அல்லது தீர்மானம் நிறைவேற்றுவதன் ஊடாகவோ அல்லது கையெழுத்து போராட்டத்தின் ஊடாகவோ மக்களுக்கு எதனை பெற்றுக்கொடுக்க முடியும் என்றொரு வினா இயல்பாகவே எழுகின்றது.

இம்மூன்று தரப்பினரும் கூறுவதன் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில தரப்புக்கள் அவ்வாறு செயற்படுகின்றதா இல்லையா என்பதை ஆராய்ந்து அதனை பகிரங்கப்படுத்துவது, கடுமையாக விமர்சிப்பது என்பதற்கு அப்பால் அத்தரப்புக்கள் என்ன செய்கின்றன? அவை ஆக்கபூர்வமானவையா? என்பதைப் பார்க்கையில் அத்தரப்புகளின் மீது பின்வரும் கேள்விகள் எழுகின்றன.

முழுமையான சர்வதேச விசாரணை வேண்டும் என்ற விடயத்தில் ஒருமித்த கருத்திலிருக்கும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வடக்கு மாகாணசபை மற்றும் வெகுஜன அமைப்புக்கள் ஆகிய அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து அதிர்வுள்ள வகையிலான அல்லது சர்வதேசமே திரும்பிப்பார்க்கும் வகையிலான ஜனநாயக ரீதியான அதிர்வுள்ள அறவழிப்போராட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏன் தயாரில்லாதிருக்கின்றன?




கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் ஆகியன தமிழ் மக்களுக்கு எம்மால் தலைமையை வழங்க முடியும் என்ற நிலைப்பாட்டிலேயே ஆயுதமேந்தி தனித்தனியாகப் போராடியிருந்தன என்பது வரலாறு. இன்று ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்திருக்கின்ற நிலையில் ஒரு இலக்குக்காக முன்வரமுடியாதிருக்கின்றமைக்கான காரணம் தான் என்ன?

அதேநேரம் வட மாகாண சபை சர்வ தேச விசாரணை நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றமையை அதன் பிரேரணைகள் காட்டுகின்றன. வெறுமனே பிரேரணைகள் ரணங்களுக்கு மருந்தாகுமா? தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தனித்து நின்றே சில செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. மக்கள் ஆணை கிடைக்காத நிலையில் சாதாரண தரப்பாக தனித்து நின்று எத்துணை தூரம் செல்லமுடியும்?

அதேநேரம் வெகுஜன அமைப்புக்களும் தமது கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தி மகஜரைக் கையளிப்பதன் ஊடாக வெற்றுடம்பில் சுமக்கும் துகள்களுக்கு பதில் கிடைக்குமா?

இத்தரப்புக்களிடையே கொள்கைகள், நடைமுறை ரீதியான செயற்பாடுகள், தீர்வுத்திட்டங்கள் ஆகியவற்றில் முரண்பாடான நிலைமைகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனால் நீதிக்காக ஏங்கும் அப்பாவி நெஞ்சங்களுக்கு முழுமையான சர்வதேச விசாரணையூடாகவே நியாயம் கிடைக்கும் என்ற கருப்பொருளில் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லையே.

இத்தரப்புக்கள் யாருக்காக விசாரணையைக் கோருகின்றன? தம் இனத்திற்காக, அப்பாவி மக்களுக்காக. ஆகவே தமது பூரணத்துவமான செயற்பாட்டின் ஊடாக கணிசமான அழுத்தமொன்றை அளிப்பதற்காக ஒன்றுபடுவதற்கு இத்தரப்புக்கள் ஏன் மறுக்கின்றன? இவ்வாறு தனித்தனியாக வெவ்வேறுபட்ட கோணங்களில் முடிவுகளற்ற செயற்பாடுகளைத தமிழ்த்தரப்புக்கள் முன்னெடுப்பதானது மக்களிடத்தில் தமக்கு மட்டும் தனியாக விளம்பரம் தேட முனைகின்றார்களோ என்ற எண்ணத்தை தோற்றுவிப்பதாகவே உள்ளது.

ஆட்சிமாற்றம், அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள், ஐ.நா. மனித உரிமைப்பேரவையின்விசாரணைகள், தீர்மானங்கள் என்பவற்றுக்கு அப்பால், அவலத்திற்குள்ளான தமிழினத்தின் மனிதம், நீதி, நியாயம், பொறுப்புக்கூறல், சகவாழ்வு, எதிர்காலம் ஆகிய விடயங்களை கருத்தில் கொண்டே அணுக வேண்டும். ஆகவே மேலும் மேலும் தாமதமடைந்து கொண்டு குறைகூறிக்கொண்டும், புறஞ்சொல்லிக் கொண்டும் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். காலம் கடந்து விட்டது.

காத்திருக்க வேண்டியதில்லை. இந்நிலையில், நீ பெரிதா? இல்லை நான் பெரிதா? யாருக்கு மக்கள் செல்வாக்கு? என கணக்குப் போட்டு பார்த்து அரசியல் காய்நகர்த்துவதல்ல விடயம்.

எத்தரப்பாவது, தயங்காது முன்நிற்க வேண்டும். மக்களுக்காக விட்டுக்கொடுப்பதில் எதற்குத் தயக்கம்? நீதியை எதிர்பார்த்திருக்கும் மக்களின எதிர்காலத்திற்காக ஒன்றுபட்டு குரல்கொடுக்க வேண்டும். இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எத்தகைய சக்திகளாலும் அடக்கி விட முடியாது என்பதை இத்தரப்புக்கள் இன்னும் அறியாதிருக்கின்றவா?

மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு அவர்களது கஷ்டங்களைப் போக்குவதற்கு திட்டமிட்டு செயலாற்றுவது தான் உண்மையான அரசியல் என்பதை தமிழ் மக்கள் ஆணை பெற்றவர்களும், தலைவர்களாக வலம்வந்தவர்களும், வந்து கொண்டிருப்பவர்களும் உணர்ந்திருக்கின்றார்களா?

காலம் கடந்த பின்னர் எதற்காக ஞானம்? எதற்காக நீதி?..!

*- பிரம்மாஸ்திரன் -*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்ணுக்கு ஜோடியான கரடி!



அமெரிக்க மாடலிங் பெண்கள் சிலர், இறந்த குதிரை, கரடி, ஒட்டகச்சிவிங்கிகளின் சடலங்களுடன் படமெடுத்து வெளியிட்டனர். "லைக்ஸ்' குவியும் என எதிர்பார்த்தால், "வேட்டையாடப்பட்டு இறந்த விலங்குகளோடும் போட்டோ எடுத்துக்கொள்ள வேண்டுமா?' என்பது போன்ற கண்டனங்கள்தான் குவிந்தன.

அதிலும், இதுதான் சாக்கென அமெரிக்கர்களைத் திட்டிக் குவித்தார்கள் ரஷ்யர்கள். அவர்களில் தன் கண்டனத்தை வித்தியாசமாகப் பதிவுசெய்ய நினைத்த மாடலிங் புகைப் படக்காரரர் ஒல்காவுக்கு தோன்றிய ஐடியாதான்... "போட்டோ ஷூட் வித் கரடி'!





பேஷன் படப்பிடிப்புக்காக புரொபஷனல் மாடல் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் அத்தனை சோதனைகளையும் கடைப்பிடித்து ஸ்டீபன் என்ற கரடியைத் தேர்ந் தெடுத்தார்கள்.

அத்தனை கரடிகளில் ஏன் ஸ்டீபன்? ஏனெனில், ஸ்டீபன்தான் அழகிய போட்டோஜெனிக் முகம், அம்சமான 2.2 மீற்றர் உயரம், வடிவமான 635 கிலோ எடையுடன் இருந்தானாம். முடி வெட்டி, தேய்த்துக் குளிப்பாட்டி, மேக்கப் போட்டு, சென்ட் பவுடர் அடித்து, முழு மருத்துவப் பரிசோதனை செய்து... அமர்க்களமாக அவனைத் தயார் செய்திருக்கிறார்கள். கரடியுடன் திகில் த்ரில் மாடலிங் செய்தது மரியா, லிடியா என்கிற இரண்டு பெண்

பிறகுதான் ரியாக்ஷன் மாத்திட்டு இடத்தைவிட்டு நகருவான். கடைசி படத்துக்கு போஸ் கொடுத்துட்டு, அவனோட பிரமாண்ட கைக்குக்குள்ள ஒளிஞ்சுக்கிட்டோம். அவனும் எங்களை ஒரு குழந் தையைப் போல கட்டிப்பிடிச்சுக்கிட்டான்.

இந்த ஷூட் மூலமா நாங்க கத்துக்கிட்டது என்னன்னா, மனுஷங்களைப் போலவே எல்லா விலங்குகளுக்கும் உணர்வு இருக்கு. நாம பேசிப் பேசி அதைப் புரியவைக்கிறோம். மிருகங்களால் பேச மட்டும் முடியாது. மத்தபடி விலங்கும் மனுஷனும் ஒண்ணுதான்!- புது கரடி ப்ரெண்டு' பற்றி சிலாகிக்கிறார்கள் இருவரும். ஸ்டீபனின் பராமரிப்பாளர் யூரி அவனை







மாடல்கள். "வாவ்... மெர்சல் அனுபவம்!' என கோரஸ் குரலில் ஆச்சர்யப்படுகிறார்கள் இருவரும்.

வித்தியாசமான சவால்னு ஒப்புக்கிட்டோம். ஆனா, கரடி பக்கத்துல போகவே பயமா இருந்தது. "சும்மா ஸ்டீபன்னு பேர் சொல்லிக் கூப்பிடுங்க. நீங்க பேசுறதை அவன் புரிஞ்சுப்பான். சொல்றதை எல்லாம் செய்வான். ரொம்ப நல்ல பையன்னு சொன்னாங்க. பயந்துகிட்டே ஸ்டீபன் கிட்ட பேசினோம்.

நம்பவே முடியலை... நாங்க என்ன பேசுறோம்னு அவன் புரிஞ்சுக்கிட்டான். சொல்றதை எல்லாம் செஞ்சான். அது கரடியா இல்லை ரோபோவானுகூட எங்களுக்குச் சந்தேகம் வந்திருச்சு.

நாங்க மாடல்ஸ். அதனால போட்டோ க்ளிக் பண்ற வரை ஆடாம, அசையாம சிரிச்சுட்டே போஸ் கொடுத்து எங்களுக்குப் பழக்கம். ஆனா, ஸ்டீஃபனும் ஒவ்வொரு போட்டோவுக்கும் சுப்பரா போஸ் கொடுத்தான். 'ஓ.கே'னு போட்டோகிராபர் சொன்ன

முதன் முதலில் பார்த்த போது, மூன்று மாதக் குழந்தையாக வேட்டைக் காரர்கள் பிடியில் இருந்திருக்கிறான். சாகும் தறுவாயில் இருந்தவனைப் போராடி மீட்டிருக்கிறார் யூரி. "அப்படியே வீட்டுக்குத் தூக்கிட்டு வந்துட்டேன்.

குழந்தை மாதிரியே ஓடி ஆடிக்கிட்டு இருந்தான். ஆனா, வீட்ல கரடி வளர்க்கக் கூடாதுனு ஒரு சர்க்கஸ் கம்பனியில சேர்த்துவிட்டோம். அங்கே தான் மனிதர்களுடன் சகஜமாகப் பழகக் கத்துக்கிட்டான். சினிமாவுலயும் நடிச்சிருக்கான். ஸ்டீபன் கூட யார் பழகினாலும் அவனை ஆயுசுக்கும் மறக்க மாட்டாங்க!' எனப் பெருமிதமாகப் பூரிக்கிறார் யூரி.

இந்த நிலையில், "மிருகங்களை வேட்டையாடக்கூடாது என்ற நல்லெண்ண விளம்பரத்தில் நடித்த லிடியா அணிந் திருந்ததே கரடி தோளால் செய்யப்பட்ட கோட்தான். அறிவுரை சொல்றவங்க முதல்ல அதை அவங்க அனுபவிக் கணும்!' எனக் கொந்தளிக்கிறது அமெரிக்க மாடலிங் உலகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org